
# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3

சுடர் - 266



2020 மாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| செஞ்சொற்புனை மாலை | முருகவே பரமநாதன் | 01 - 06 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 07 - 11 |
| சிரத்தை நலம் | கு. சோமசுந்தரம் | 12 - 15 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 16 - 20 |
| தியானமும் மக்கள்... | வி.ரி. வேலாயுதம் | 21 - 22 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 23 - 26 |
| அற்புதம் அதிசயம் ஆச்சரியம்... | கே.எஸ். சிவஞானராஜா | 27 - 29 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 30 - 31 |
| அன்று ஔவைப்பிராட்டியார்... | பு. கதிரித்தம்பி | 32 - 33 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 34 - 35 |
| சிவராத்திரி மகிமை | எம்.பி. அருளானந்தன் | 36 - 38 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 39 - 43 |
| அன்பின் சக்தி | செல்வி ச. வர்ணி | 44 - 46 |
| இறைவனை எப்போது காண்பது! | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 47 - 48 |
| பணியும் பாராட்டும் | இராம ஜெயபாலன் | 49 - 50 |
| பாடசாலைகளில் இந்து... | திருமதி சி. சுகந்தினி | 51 - 56 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 57 - 61 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 62 - 64 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஞானச்சுடர் 265ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை தேசிய கல்வியியற் கல்லூரியின் இளைப்பாறிய விரிவுரையாளர் திரு முருகேசு கௌரிகாந்தன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையின்மூலம் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு இணைந்து சொற்ப காலமேயானாலும், ஆச்சிரமத்தினதும் பேரவையினதும் செயற்பாடுகளை உற்றுநோக்குமிடத்து பெரிய ஆச்சரியமாகவே உள்ளது.

ஒரு மலரை வெளியிடுவதென்பது சாதாரணமான விடயமன்று. அதுவும் 265 மாதம் தொடராக வருவதும் ஒரு சாதனையே. நானும் கல்லூரியில் பணியாற்றிய காலத்திலும் சரி இளைப்பாறிய பின்பும் சரி எத்தனையோ வித மலர்களை வெளியீடு, மதிப்பீடு செய்திருக்கின்றேன். ஆனாலும் ஞானச்சுடர் மலர் ஒரு தனித்துவமாக மிளிருகின்றது. தொடர்ந்தும் இம்மலர் எவ்வித குறைவுமற்ற முறையில் வெளிவர வேண்டும் என்றதோடு இம்மலரோடு ஒன்றித்து பயணிக்கும் அனைவரின் பணி மென்மேலும் சிறக்க சந்நிதி வேலவன் அருளவேண்டும் எனும் பிரார்த்தனையுடன் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:**

ஞானச்சுடர் தைமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும், ஆன்மீகவாதியும் பேரவையினால் ஞானபண்டித ஆன்மீக வித்தகர் எனும் கௌரவத்தைப் பெற்றவருமான இளைப்பாறிய அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்கள் ஆற்றினார்கள்.

தை மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை பல வருடகாலம் நிகழ்த்திக் கொண்டு இருக்கும் காரணத்தினால் ஞானச்சுடரின் வளர்ச்சிபற்றி ஒருசில கருத்துக்களை கூறியதுடன் ஒரு மலரைத் தொடராக வெளிக்கொணர்வதற்கு பெரும் பொருளாதாரப் பலம் வேண்டும். ஆனாலும் சந்நிதியான் ஆச்சிரமமோ, பேரவையோ அத்தகைய ஆற்றல் பெற்றவை அல்ல. ஆனாலும் தை மாத மலருக்கு சிறப்புப்பிரதி பெறும் வகையில் இணைந்து கொண்ட மக்கள் வங்கியின் செயற்பாடு போற்றக்கூடியதே. அவர்களால் வழங்கப்படும் நிதிகூட ஆச்சிரமம் ஆற்றும் அறச்செயல்களுக்கு உள்வாங்கப்படுவது கண்கூடு. இத்தகைய செயற்பாடுகளுக்கு முன்நின்றுழைத்த அனைவரையும் பாராட்டுவதோடு தை மாத மலரில் இடம்பெற்ற ஒரு சில ஆக்கங்களில் உள்ள கருத்துக்களை சபையில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக் கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

வலம்புரி நாளிதழ் அலுவலகத்தின் மீதான வன்முறை அடாவடித்தனம் நடைபெற்று முடிந்து வாரம் ஒன்று கடந்துவிட்டது. ஜனநாயக ரீதியிலான பத்திரிகைச் சுதந்திரத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட கருத்துக்களுக்கு வன்முறை மூலமான பதில் தரப்பட்டது துர்அதிஷ்டமானதே.

எம்மதமும் சம்மதம் எனும் எண்ணத்தோடு, சமயங்களில் ஏற்றத்தாழ்வு இல்லை எனும் அடிப்படையில், முடிந்தவரை எல்லா இன மக்களையும் அரவணைத்துச் செல்லும் எமது சைவ சமயக் கோட்பாடுகளுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம், பிறமதம் சார்ந்தவர்களின் அண்மைக்கால செயற்பாடுகள் கண்டு மிகுந்த வேதனை அடைகிறோம்.

சமயமென்பது மனித வாழ்வை வளப்படுத்த வேண்டுமே தவிர மனிதனை மதம் கொள்ள வைக்கக்கூடாது. அதனைத் தூண்டிவிட்டு எமது சமயத்தை வலுக் குன்றச் செய்வது என்பது பரந்த சிந்தனை உள்ளவர்களின் செயற்பாடாக இருக்க முடியாது. அத்துடன் அவரவர் மதம் பற்றிய கருத்துக்களை பக்குவமான முறையில் மக்களிடத்தில் கொண்டு சேர்க்கவேண்டுமேயன்றி தடி எடுத்தவன் எல்லாம் தண்டப் பிரசண்டன் என்ற கருத்துப்படி அடாவடியில் இறங்குவது ஒரு பண்பட்ட மதத்தாருக்கு அடையாளமாக அமையாது.

காலத்தின் தேவையறிந்து எமது சமயத்தின்மீது ஏற்பட்டுள்ள காழ்ப்புணர்ச்சி யினைக் களைந்தெறிவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். மூலைக்கொருவராக நின்று அறிக்கைகளை விடுவதோ, சபை கூட்டுவதோ, நான் பெரிது - நீ பெரிது என்ற நிலைப்பாடு எடுப்பதையும் விடுத்து முதலில் நாம் அனைவரும் ஒரு குடையின் கீழ் நின்று செயலாற்ற வேண்டும். அத்தகைய பரந்த சிந்தனையோடு ஒன்றிணைந்து பயணித்தால் எமது சமயத்தையும் மக்களையும் எழுச்சியுறச் செய்யலாம்.... செய்வோமா?

சிந்திப்போம்! செயற்படுவோம்!! சைவத்தின் சார்பாக ஒன்றிணைவோம்!!!

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 16. சிந்து வகுப்பு

இறைவர் குன்ற மானை மணம கிழ்ந்த நாளி
லினையி லண்ட ரோடு முணவு கொண்ட தாகும்
எமது பசிதீர மாராச விந்த்ர
வமுது படைபோத வாகாச கங்கை
யாறு போலநெய் சொரிவட கம்படை
நூறு சாலொடு பொரியலை யிங்கழை
இடுக மாவடு வடையிடை கீரையி
லவண மூறிய கறியடை வேபடை
இருபது தண்டை யுடும்பு குவால்சமை
துருவைகள் பன்றி சமைந்தவெ லாமழை
யாமைஅ வியல்முய லாணங் கண்டறி
யோமிது சிவசிவ மேலெங் கும்படை
இடைவெளி யறமிகு விடுக ருக்களை
யிறவகை கயல்கெளி றிவைபொ டித்தன
எட்டு வண்டி வாளை யிற்பீலியி
லிட்ட முண்டு தீயன் முற்பாடழை
இடைகொ ழுப்பாடி விளையவெ லும்புட
னடைசு ரைக்காயி லடுபடை முன்கறி
ஈறுபுளி வார்வி டாய்போம்படி
யேடுபிரியாத பால்தேன்சொரி
இருக்கிற சருக்கரை வருக்கை கதலிக்கனி
ரசத்தினை யனைத்தையு மிலைக்கு ளடையப்படை
ஈக பாக்குடன் வெற்றிலை கர்ப்புரம்
யாரு மேத்த வினிச்சுக முற்றிரு:,

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)
**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)
**ப. பாலபவான்**
(புத்தூர்)
**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)
**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)
**ந. யோகேஸ்வரன்**
(பாடசாலைவீதி, கோண்டாவில்)
**அதிபர்**
(யா/ தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம்)
**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)
**திருமதி இ. பத்மநாதன் J.P**
(உப தவிசாளர், நகரசபை, பருத்தித்துறை)
**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)
**வ. நந்தகுமார்**
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)
**T. பாக்கியம்**
(கந்தர்மடம்)
**நா. பவளம்**
(அச்சுவேலி)
**திருமதி தேவதாஸ் தயானி**
(அச்சுவேலி)
**கணேசகுலசிங்கம் துஷிகரன்**
(அச்சுவேலி)

**பொ. இராமலிங்கமூர்த்தி**
(இளை. உதவி மின் அத்தியட்சகர், கரவெட்டி)
**சி. மகாலிங்கம் J.P**
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
**சு. சிவதாசன் G.S**
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
**தலைவர், செயலாளர்**
(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)
**உரிமையாளர்**
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
**ஐ. லோகஞானம்**
(அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்)
**ஆ. விஸ்வலிங்கம்**
(இளைப்பாறிய ஓவசியர், சுண்ணாகம்)
**V. அரியராசா J.P**
(இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)
**கந்தசாமி தேவராணி**
(ஆனைக்கோட்டை)
**உரிமையாளர்**
(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)
**செ. சந்திரமூர்த்தி**
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)
**சி. பஞ்சலிங்கம்**
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
**செ. தேவேந்திரா**
(ஒஸ்காவீதி, உரும்பராய்)
**இராசரெட்ணம் வசந்தன்**
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
**இ. குமாரதாசன்**
(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)
**R. குலசிங்கம்**
(இளை. அதிபர், கோண்டாவில்)
**N. K. தங்கராசா**
(இளை. தபாலதிபர், புலோலி)
**இ. பாலகிருஷ்ணன்**
(முகமாலை)

**உரிமையாளர்**

(நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

**செ. செல்வரெத்தினம்**

(இளை. அதிபர், சுண்ணாகம்)

**த. விவேகானந்தன்**

(சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை)

**இ. ஜெயபாலன்**

(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)

**மா. ந. பரமேஸ்வரன்**

(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)

**பா. கேதீஸ்**

(உரும்பராய்)

**S. ஈஸ்வரன்**

(டச்சுவீதி, சித்தங்கேணி)

**ச. மதனகுமார்**

(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)

**கெ. தவராசா**

(விவேகானந்தர் வீதி, இணுவில்)

**வி. ந. ஸ்ரீதரன்**

(இளை. அதிபர், நீராவியடி, யாழ்ப்பாணம்))

**செ. செல்விகா**

(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)

**அ. கருணானந்தன்**

(மானிப்பாய்)

**வே. மதிபாலசிங்கம்**

(செட்டியதெரு, கரவெட்டி)

**நா. முருகையா**

(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**செல்வராசா பொன்னுத்துரை**

(கரந்தன், நீர்வேலி)

**விஸ்வலிங்கம் குகலிங்கம்**

(பண்ணாகம், சுழிபுரம்)

**மா. தேவநேரு**

(செட்டிவளவு லேன், இணுவில்)

**சசிகரன் கௌதமன்**

(அச்சுவேலி)

செ. பாலச்சந்திரன்
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)
(நெல்லியடி, கரவெட்டி)
தி. பாலசுப்பிரமணியம்
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
மா. விஸ்வநாதன்
(புத்தூர்)
நாகன் கிருஸ்ணபிள்ளை
(கோண்டாவில்)
சி. கந்தையா
(சுண்ணாகம்)
K. விஷ்ணுமோகன்
(உரும்பராய் கிழக்கு)
பொ. சிற்றம்பலம்
(கொடிகாமம்)
ச.க. தம்பு
(அல்லாரை, மீசாலை)
சிதம்பரநாதன் ஸ்ரீகரன்
(புத்தூர்)
நாகராசா சாந்தி
(அச்சுவேலி)
க. ரட்ணேஸ்வரன்
(இளை. அதிபர், சங்கானை)
க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள்
(ஆனைக்கோட்டை)
திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்
(வட்டுக்கோட்டை)
திருமதி செல்வநாயகம்
(வடலியடைப்பு)
திருமதி சீதாதேவி இந்திரன்
(யா/ கச்சாய் மகா வித்தியாலயம்)
உரிமையாளர்
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

# செஞ்சொற்புனை மாலை

– **திரு முருகவே பரமநாதன்** அவர்கள் –

தமிழிலே நெற்கவி என்றால் உழவனைக் குறிக்கும். கல்லிலே சிற்பங்களைச் செதுக்கும் சிற்பியைக் கற்கவி என்று அழைப்பர். சொற்களைக் கொண்டு கவி புனையும் புலவனையும் கவி என்றழைப்பர். பாட்டுக்கும் கவி, செய்யுள், பா என்றெல்லாம் பெயர். கவித்துவப் புலமை மிக்க புலவர்கள் மகாகவியெனப் போற்றப்பட்டனர். வடமொழிப் புலவரான காளிதாசர் மகாகவி எனப் பெயர் பெற்றார். தென் மொழியிலே கம்பர் அந்த அந்தஸ்துப் பெற்றார். பாரதப் புலவர்களான பாரதியும், தாகூரும் மஹாகவிகளேதான். இத்துறையிலே சமகாலத்தில் கவியரசர் (கண்ணதாசன்) பாவேந்தர் (பாரதிதாசன்) பிரபல்யமான கவிஞர்கள். சினிமாவில் கவிச்சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர் கண்ணதாசன். பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவியாகவே திகழ்ந்தார். அவர் கடவுட் கொள்கையை மறுதலிப்பவர். ஆனாற் காத்திரமான பெரும்புலவர். கவிமரபிலே தொன்று தொட்டு இன்றுவரை இறைவன் தூண்டுதலாற் பாடியவர்களை அருட்கவியென்பர். அருளாளர் பாடல்கள் எல்லாம் தெய்வாம்சம் நிறைந்தவை. இறைவனைப் பாடிய அருட்கவிகளும் இறை அருள் பெற்று பாடிப்பாடி இறைவனோடு கலந்தனர். அவ்வாறே அப்பாசுரங்களைக் கலந்து பாடுபவர்க்கும் இறையருள் கிட்டும். இம்மரபிலே சைவ சமயத்தில் கலிகண்ட தெய்வமான முருகனைப் பாடியவர்களில் அருணகிரியார் முதன்மை பெறுகின்றார். அவர் சிறந்த, உயர்ந்த முருக இலக்கியங்களைச் சைவப்பெருங்குடி மக்கட்கு பக்தி இலக்கியப் பட்டறையில் வார்த்து வழங்கியுள்ளார். திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, வேல், மயில், சேவல் விருத்தங்கள், திருவகுப்பு என்பன அவர் பாடியருளியவையாம். இப்பனுவல்களிலே நன்கு தோய்ந்து முங்கி முத்தெடுத்தவர் பதினெட்டாம் நூற்றாண்டில் அவதாரம் செய்த தாயுமான சுவாமிகள். அவர் இவற்றைப் பாடியருளிய புலவரையும், பிரபந்தங்களில் ஒன்றான கந்தர் அநுபூதியைப் பற்றியும் இப்படிக் கவிசெய்துள்ளார். வாக்குக்கு அருணகிரியெனச் செஞ்சொற் புலவர் நாவிற் தவழ்ந்தவர் அருணகிரியார்.

ஐயா; அருணகிரிஅப்பா; உனைப்போல
மெய்ஆக ஓர்சொல் விளம்பினர் யார்? வையகத்தோர்
சாற்றரிது என்று ஏசற்றார்; தன்அனையாய், முக்கண்எந்தை
நாற்றிசைக்கும் கைகாட்டினான்.

உடல் பொய்யுறவு - 25.

சாற்றரிது என்று ஏசற்றார்- சொல்ல முடியாது என இளைத்துப் போனார்கள்.

தன் அனையாய்- தனக்கு ஒப்பாக இருப்பவனே, கைகாட்டினான்- சின் முத்திரையைக் காட்டினார் (தட்சிணாமூர்த்தி)

*நாம் தர்மத்தைக் கடைப்பிடித்தால் அது நம்மைக் காக்கும்.*

தேவர்தொழும் வாதவூர்த் தேவே என்பேன்

திருமூலத் தேவே,இச் சகத்தோர் முக்திக்கு

ஆவல்உறச் சிலஎன்வாக்குடனே வந்த

அரசே,சும் மாஇருந்து உன் அருளைச்சாரப்

பூஉலகில் வளர் அருணகிரியே, மற்றைப்

புண்ணியர்காள், ஓஎன்பேன் புரை ஒன்றுஇல்லா

ஓவியம்போல் அசவு அறவும் தானே நிற்பேன்,

ஓதரிய துயர் கெடவே உரைக்கும் முன்னே

அரசே- சிவவாக்கியரே -சிதம்பர இரகசியம் 31.

கந்தர் அநுபூதிபெற்றுக் கந்தர்அநு பூதிசொன்ன

எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளே.

சிவசமயத்தினரால்- சிறப்பாக முருக பக்தர்களாகவுள்ள பழவடியார்கள் இப் பக்தி நூலைத் தினமும் காலை மாலையில் பாராயணம் பண்ணுவது பெரு வழக்காகும்.

வடமொழியிலே உயிரும் மெய்யுமாய் 51 அட்சரங்கள் (எழுத்துக்கள்) உண்டு. இந்த எழுத்துக்களே அநுபூதியின் ஐம்பத்தொரு பாடல்களும். சில ஆலயங்களிலே கொத்து மணியில் 51 அமைவதற்கும் இதுவே அடிப்படை என்பர். இந்த எழுத்துமுறை பற்றிப் பல திருப்புகழ்களிலே அருணகிரியார் குறிப்பிடுகின்றார்.

அகரமுத லெனவுரைசெய் ஐம்பந்தொ ரக்ஷரமும்

அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்

அபரிமித சுருதியும் டங்குந்த னிப்பொருளை எப்பொருளு மாய்

ஐம்பந் தொரக்ஷரம் ஐம்பத்தொக்ஷரம் -திருப்புகழ் 1127.

அகரம் முதலாகக் கூறப்படும் ஐம்பத்தொரு அட்சரங்களையும்- சகல கலைகளையும் (64 கலைகள்) பலவகையான உண்மைப் பொருள்களையும், எண்ணரிய மறைப்பொருள்களை யும், தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கும் ஒப்பற்ற பொருளை, எல்லாப் பொருள்களுமாய் விளங்கும்.

அகரமாதி யாமக்ஷரங்க

ளவனி கால்வி ணாரப் பொடங்கி

அடைய வேக ரூபத்தி லொன்றி முதலாகி

-திருப்புகழ் 966.

அகர முதலானவையாம் 51 எழுத்துக்கள். பூமி, காற்று, விண், நிறைந்த நீர், இவையுடன் நெருப்பு இவையெல்லாம் கூடிட், ஒரு உருவமாகக் கூத்தனாய்- (நடராசப் பெருமானாய்) அமைந்து.

அவனி- பூமி, கால்- காற்று, விண்- ஆகாயம், ஆர்- நிறைந்த, ஆப்பு- நீர், அங்கி- தீ, நெருப்பு, ஏகரூபம்- ஒரே வடிவம்.

அகராதி அட்சரங்களும் ஆறு ஆதாரங்களிலும் அமையக் காணலாம்.

| | |
|---|---|
| மூலாதாரத்தில் | 04 எழுத்துக்கள் |
| சுவாதிஷ்டானத்தில் | 06 எழுத்துக்கள் |
| மணிபூரகத்தில் | 10 எழுத்துக்கள் |
| அநாகதத்தில் | 12 எழுத்துக்கள் |
| விசுத்தியில் | 16 எழுத்துக்கள் |
| ஆக்ஞையில் | 02 எழுத்துக்கள் |
| அதற்குமேல் | 01 எழுத்து |

இந்த 51 எழுத்துப்பற்றித் திருமந்திரத்திலும் அமைந்துவரக் காணலாம்.

இணையார் கழலிணை ஐம்பத் தொன்றாகும் - 898.
ஆதி எழுத்தவை ஐம்பத்தோ டொன்றென்பர் - 963.

தகர முதலுருகொ ளைம்பந் தொரக்ஷரமொ
டகில புவனநதி யண்டங் களுக்குமுத
வருண கிரணவொளி யெங்கெங் குமுற்றுமுதல் நடுவால்

-திருப்புகழ் 989.

அகரமுதலான 51 அட்சரங்கள் ஐம்பந்தொரு ஐம்பத்தொரு அகராதி க்ஷகாரந்தம் உருக் கொண்டுள்ள ஐம்பத்தொரு அட்சரங்களுக்கும், சகல லோகங்களுக்கும், நதிகளுக்கும், அண்டங்களுக்கும் முதன்மை பெற்றதாய், செந்நிறச் சுத்தசோதிப் பேரொளியை எல்லா இடங்களிலும் வீசிப்பொருந்தியதாய் முதலும் நடுவுமாய்.

இவ்வைம்பத்தோர் அட்சரங்களின் இலக்கிதமாய் திகழும் கந்தர் அநுபூதியை (முருக) மந்திரம் எனவும் அழைப்பர். நிறைமொழி மாந்தரின் மறை மொழியே மந்திரம். மந்திரம் எண்ணுவோரைத் (தியானிப்போரை) காப்பது என்று பொருள்படும். இவை இறைவனை வழிபடவும், மக்கட்குப் பயன்தருவனவும், கேடுவிளைவிப்பன என முத்திறப்படும். முருகனைப் பற்றிய மந்திரங்கள் திருமுருகாற்றுப்படை போன்ற முருக இலக்கியங்களில் உண்டு. எனவே கந்தர் அநுபூதி வேல், மயில், சேவல் பற்றிப் பாடும் பிரபந்தம். கந்தனை அகமுகமாக வழிபட்டு அவனையடைந்த அனுபவத்தைப் பேசும் கந்தநன்னூல் இது. கந்தர் அநுபூதியில் 25 பாடல்களில் வேலைப் பற்றிப் பேசப்படுகிறது. வேல் மந்திரவேல். வேதமந்திர சொருபா நமோ நம என்கிறது திருப்புகழ். ஆழ்ந்து அகன்று கூரிய ஞானத்தைக் குறிப்பது வேற்படை. மந்திர வேல்பற்றி நிறையப் பேசப்பட்ட காரணத்தால் கந்தர் அநுபூதி- மந்திர நூலானது. நாமெல்லாம் வேலும் மயிலும் துணை என்கிறோம். பாரதி வேலை வணங்குவது எனக்கு வேலை என்றார். சுற்றி வருகுது வேல், தூர நில்பகையே என்று முருக பக்தர்கள் பேசுவர். மந்திரமுந் தந்திரமும் மருந்துமாகி, என அப்பரும், மருந்தறியேன் மணியறியேன் மந்திரமும் அறியேன் என வள்ளலாரும் பாடினார். திருநீறே மந்திரம் என்பர். ஓங்காரரூபமான மயிலும் மந்திர வடிவமே.

இதன் மேன்மையைத் திருமுருக கிருபானந்தவாரியார் வாக்கிற் கேட்போம். "அருணகிரிநாதர் வேலனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். "அப்பனே! அடியேன் உமது பவளம் அனைய பாதமலரில் ஒரு மந்திர மலர்மாலை சாத்துமாறு அருள்செய். அம்மலர் மாலைக்கு என் மனமாகிய தாமரை குஞ்சமாக அமைய வேண்டும். அன்பான நூலினால் தொடுக்க வேண்டும். நாவிலே அழகாகக் கட்ட வேண்டும். அதில் ஞானம் ஆகிய நறுமணம் கமழ வேண்டும், அம்மலர்மாலை ஒளிசெய்ய வேண்டும்; குற்றமில்லாத அறிவு என்ற வண்டு அதில் ஒலிக்க வேண்டும். ஆறு ஆதாரங்களில் உள்ள அகாரம் முதல் க்ஷகாரம் ஈறாகவுள்ள மாத்ருகா மந்திரங்களாகிய ஐம்பத்தொன்றும் மலர்களாகத் திகழ வேண்டும். இத்தகைய மந்திர மலர் மாலையை ஐயனே! உனது செய்ய பாத மலரில் புனைதல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

ஆசைகூர்பத்த னேன் மனோபத்ம
மான பூவைத்து நடுவேயன்
பான நூலிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி ஒருஞான
வாசம் வீசிப்ர காசியாநிற்ப
மாசிலோர் புத்தி அளிபாட
மாத்ருகா புஷ்ப மாலைகோலப்ர
வாள பாதத்தில் அணிவேனோ

கந்தரநுபூதி- திருமுருக கிருபானந்தவாரியார் உரை பக் 10-11

கந்தர்+அநு+பூதி= கந்தரநுபூதி. அநு- உடன், பூதி- ஆதல். உயிர் இறைவனுடன் ஒன்றாதல் அநுபூதி. எனவே உயிர் கந்தப் பெருமானுடன் ஒன்றாகி அதனால் வரும் மெய்யுணர்வுதான் கந்தர் அநுபூதி. இப்படியான முருக மந்திரத்தை ஓரங்கட்டி வைத்துவிட்டு "கால் பிடித்தேன் கைபிடித்தேன் வா வா முருகா" எனக் கத்தி என்ன பயன். அருளாளரான அருணகிரியார் சொன்ன மகாமந்திரமே கந்தர் அநுபூதி என்பதை இன்றைய மக்கள் உணர்வதாயில்லை. இப்பிரபந்தம் விநாயகர் காப்புடன் துவங்குகிறது.

நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள் சண்முகனுக் கியல்சேர்
செஞ்சொல்புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானை பதம் பணிவாம்.

-கந்தர் அநுபூதி காப்பு.

நெஞ்சம் எனப்படும் வைரமான கல்லும் நெகிழ்ந்து உருகும் வண்ணம், தஞ்சம் (அடைக்கலம்) என்று அபயம் புகுந்த மெய்யடியார்க்கு அருள்பாலிக்கின்ற சண்முகப் பெருமானுக்கு, இயல்தமிழால் இயற்றப்பட்ட சிறந்த சொல் மலரால் ஆன, இப்பாமாலையானது சிறப்படைய, ஐந்து திருக்கரங்களை உடைய விநாயகக் கடவுளது திருவடிகளை வணங்கி வந்திப்போம். ஆகவே ஆடுகின்ற மயிலையும், காலாயுக் கொடியையும் (சேவல்) ஞான வேலையும் பாடுகின்ற பணியை எனக்கருள்வாயாக என அடுத்த பாடல் கூறுகின்றது.

*பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்ய வேண்டியது தட்டிக்கொடுப்பது மட்டும்தான்.*

ஆடும் பரிவேல் அணிசேவ லெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே.

பாடல் 01.

தேடும் கயமாமுகனை- தேவர்களைத் தேடிப்போன கயமுகாசுரனை செருவில் சாடும் போர்க்களத்திலே தாக்கி வெற்றிபெற்ற, தனியானை சகோதரனே- ஒப்பற்ற விநாயகப் பெருமானது தம்பியே! ஆடும்பரி- ஆடுகின்ற மயில் எனவும், வேல் எனவும், அணிசேவல் என- அழகிய சேவல் எனவும், பாடும் பணியே- அடியேன் எந்நேரமும் (உன்னைப்) பாடுகின்ற செயலையே பணியா அருள்வாய்- தொண்டாக அருள்வாயாக.

பொய்மையாளரை பாடாதே- எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள் எனப் பேசியவர் நம்பி ஆரூரர் (சுந்தரர்). நர ஸ்துதி செய்யக்கூடாதென்பது முந்தையோர் கண்ட முறை. நம்மாழ்வாரும் இக்கருத்தினை வெகு துடிப்புடன் பாடியுள்ளார். மனிசரைப் பாடாது மாதவனையே பாடுங்கள் என்பது அவர் வாக்கு.

சொன்னால் விரோதமிது ஆகிலும்
சொல்லுவன் கேண்மினோ!
என்னாவில் இன்கவி யானொரு
வர்க்கும் கொடுக்கிலேன்.

திருவாய்மொழி 3:9.1

விரோதம்- பகை. கேண்மினோ- கேளுங்கள், கவி- பாடல். திருவேங்கடாசலபதியை அல்லாமல் வேறு யாரையும் பாடமாட்டேன் என்கின்றார் நம்மாழ்வார். இந்த நிலையில்லாத மனிதனைப் பாடி என்ன பயனைக் காணப்போகின்றீர் புலவர்களே! விண்ணவர் போற்றும் திரு மாலைப் பாடினீர்களாயின் (சென்மம்)- பிறவியே இல்லாமற் போய்விடும் என அடித்துச் சொல்கிறார்.

என்னாவ தெத்தனை நாளைக்குப்
போதும் புலவீர்காள்
மன்னா மனிசரைப் பாடிப்
படைக்கும் பெரும் பொருள்?
மின்னார் மணிமுடி விண்ணவர்
தாதையைப் பாடினால்
தன்னாகவே கொண்டு சன்மம் செய்
யாமையும் கொள்ளுமே.

மேலது 3:9.4.

இக்கருத்தை வலியுறுத்துவதுபோலக் கந்தரநுபூதியில் ஓர் பாடல் அமைந்துள்ளது.

யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே. கந்தரநுபூதி 17.

*ஒரு கை நீட்டி உதவி செய்தால் இரு கைகள் வணங்கும் உன்னை.*

யாம் ஓதிய- நாம் நல்ல ஆசிரியரிடம் கற்ற, கல்வியும்- கல்வியறிவையும், எம் அறிவும்- எம் இயற்கை அறிவையும், பெற- நாம் பெற்றுக் கொள்ளுதல், வேலவர் தாமே தந்ததனால்- மெய் ஞான வேலை ஏந்திய முருக வேள் அவராகவே நமக்குத் தந்தபடியால், பூமேல்- பூமியில் இருக்கும் நாள்வரை, மயல் போய்- நீங்கள் மயக்கத்தினின்றும் நீங்கி, அறமெய்ப்புணர்வீர்- அறத்தொடும், உண்மையோடும் சேருங்கள், இனிமேல் நடவீர்- இனிமேல் நாவில் நடவுங்கள், நடவுங்கள், அப்பெருமானையே பாடுங்கள். இனிமேல் நடவுங்கள் என்பதற்கு- இதுவரை நீங்கள் நாக்கைப் புன்கவி பாடப்பயன்படுத்தியிருப்பீர். அந்தப் பிழையை இனிமேலாதல் உணர்ந்து, முருகன் புகழைப் பாடுங்கள் என்ற சிறந்த கருத்தும் இதில் வருகிறது.

சும்மா இரு என்பது இலகுவான காரியமா, சும்மா இருக்கின்றதிறம் அரிது எனப் பல அநுபூதி மகான்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். சும்மா இரு எனச் சுவாமிநாதன் (முருகன்) அருணகிரிக்குச் சொன்னான். அதை உணர்ந்து சும்மா இருந்து சுகம் பெற்றவர் அருணகிரியார்.

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

பாடல் 12.

செம்மான் மகள்- வள்ளி, சொல் அற சும்மா இரு- சொல்லழிந்து மௌனமாய் இருப்பாய்- மனம் குரங்கு போன்றது. எந்நேரமும் தாவிக்கொண்டே இருக்கும். மனத்திடத்தால் அதை அலைபாய விடாமல் கட்டி வைத்திருப்பது மனமே. மனத் திடம் வேண்டும். புலன்கள் அடங்கவும் வேண்டும்.

அற்புதம் செறிந்த சித்திரம் நிறைந்த அருமைசேர் பாடல்கள் சொல்லும்
நற்பதம் உனக்கிலைப் போஎன நாத நீ கூறு வையாகில்
சொற்பதம் வேண்டாம் சும்மா சுகமுற இருத்தியென்றேனும்
அற்பனுக்கோர் சொல்வழங்குதிகருணை அண்ணலே தணிகை நாயகனே.

-தணிகை நாயகன் மாலை.

## மகாலட்சுமி வாசம் செய்யும் வாசல் படி

வீட்டு தலைவாசலை எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள், தலைவாசலில் மஞ்சள், குங்குமம் வாரம்தோறும் மாற்றுங்கள். தலைவாசலுக்கு எதிரில் குப்பை, காலணிகள் இருந்தால் அகற்றுங்கள், தலைவாசலுக்கு எதிரில் துளசி, கற்பூரவள்ளி இடவசதி இருந்தால் பவளமல்லி போன்ற செடிகளை வளர்ப்பது சிறப்பாகும்.

மகாலட்சுமி வாசம் செய்யும் தலைவாசல் எப்போதும் மங்களகரமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். தினமும் காலை, மாலை வேளைகளில் வாசக்காலில் விளக்கேற்றுவதை வழக்கமாகக் கொள்ளுங்கள். வாசலுக்கு நேராக அமர்ந்து அமங்களகரமான வார்த்தைகளைப் பேசுவதைத் தவிருங்கள். வாசலுக்கு இடையில் நின்றுகொண்டு பொருட்களைக் கொடுப்பது, வாங்குவதைத் தவிருங்கள், வாசலில் விளக்கேற்றியபின் பூஜையறையில் விளக்கேற்றுவதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

*இலட்சியத்தை அடைய ஊக்கம் மிகுந்த, கடினமான உழைப்பு தேவை.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 10. ஆனந்தாதீதம்

101. உடைய நாதனே போற்றி நின்னருளால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னோபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி என்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே.

**ப-ரை:**

அப்பனே ஆதியும் அந்தமும் ஆயினாய் போற்றி- என் தந்தையே உலகிற்கு முதலும் முடிவும் ஆனவனே வணக்கம்; உம்பரார் தம் பராபரா போற்றி- மேலுலகத்தவர்களான தேவர்களுடைய மேலான பரம்பொருளே வணக்கம்; யாரினும் கடைய னாயினேன் போற்றி- யான் மெய்யடியார் எவரினும் கடைப்பட்டவனாயினேன், காத்தருள்க; என் பெரும் கருணை யாளனே போற்றி- என்னுடைய பேரருளாளனே வணக்கம்; என்னை நின் அடியன் ஆக்கினாய் போற்றி- யாரினுங் கடையனாகிய என்னை நினக்குத் தொண்டனாகச் செய்தாய் வணக்கம்; உடைய நாதனே போற்றி- என்னை அடிமையாகவுடைய தலைவனே வணக்கம்; இனி எனக்கு பற்று ஆவது நின் அலால் மற்று ஒன்று உடையனோ- நின்னால் ஆட்கொள்ளப்பட்ட பின்னர் எனக்குப் பற்றுக்கோடாகவுள்ளது நின்னையன்றிப் பிறிதொரு பொருளை உடையனோ; பணி- கூறியருள்வாயாக. போற்றி வணக்கம்.

அப்பனே, ஆதியும் அந்தமும் ஆனவனே, வணக்கம்; தேவர்களுடைய மேலான பரம்பொருளே, வணக்கம்; யாரினும் கடையனாயினேன் காத்தருள்க; என்னுடைய பெருங் கருணையாளனே, வணக்கம்; என்னை நின் அடியனாக்கினாய் வணக்கம்; உடைய நாதனே வணக்கம்; எனக்குப் பற்றுக்கோடாகவுள்ளது நின்னையன்றிப் பிறிதொரு பொருளை உடையனோ? பணித்தருள்க; வணக்கம் என்பதாம்.

உடைய நாதன்- அடிமையாகவுடைய தலைவன்; என்றது இறைவனை. "உடையநாதன் திருமுடிமேன் மன்றல் விரவுந் திருப்பள்ளித் தாமஞ் சாத்தி" எனப் பெரியபுராணத்து (சண்டேசுர47)

*வலிமை, உண்மை, தன்னடக்கம் கொண்டவனே உண்மையான வீரன்.*

வருதல் காண்க. போற்றி என்பன வணக்கம் என்னும் பொருள்பட நின்றன. "யாரினும் கடையனாயினேன் போற்றி என்பதில் போற்றி என்பது காத்தருள்க என்னும் பொருள்பட நின்றது. "நின்னலாற் பற்று மற்றெனக் காவதொன்றினி உடையனோ பணி" என்பது இனி எனக்குப் பற்றாவது நின் அல்லால் மற்று ஒன்று உடையனோ பணி என இயைத்துப் பொருள் கொள்ளப்பட்டது. இனி என்பது நின்னால் ஆட்கொள்ளப்பட்ட பின் என்னும் பொருட்டாய் நின்றது. பற்று- பற்றப்படுவது; ஆதாரம். அடிகளுக்கு இறைவனே யன்றிப் பிறிதொரு பற்றுக் கோடின்மை.

"ஐய நின்ன தல்ல தில்லை மற்றொர் பற்று"

சத:73.

"பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றி நின்ற
மெய்த் தேவர் தேவுக்கே..."

கோத் 5.

"வம்பனேன் தன்னை யாண்டமா மணியே
மற்று நான் பற்றிலேன் கண்டாய்"

வாழாப் 2.

"பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்" வாழாப் 5.

என அடிகள் அருளியவாற்றானுமறிக.

உம்பரார் மேலுலகத்தவர். பராபரன் பரத்துக்குப் பரமனானவன்; என்றது மேலான வற்றிற்கும் மேலானவன் என்றவாறு. யாரினும் என்றது நின் மெய்யடியார் எவரினும் என்றவாறு. கடையன்- கடைப்பட்டவன். பின்னுள்ளவன் என்றவாறு.

என்னை நின் அடியனாக்கியது நீ பெருங்கருணையாளனாக இருந்தமையன்றே, என்பார். "என் பெருங் கருணையாளனே என்னை நின் அடியனாக்கினாய்" என்றார் கருணையாலாண்டமை.

"கடையவ னேனைக் கருணையினாற்கலந்
தாண்டுகொண்ட விடையவனே...."

நீத் 1.

"கன்நெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டு கொண்ட
அன்னந் திளைக்கு மணிதில்லை யம்பலவன்...."

கோத் 11.

"கன்னா ருரித்தென்ன என்னையுந் தன் கருணையினாற்
பொன்னார் கழல் பணித் தாண்ட பிரான்..."

தெள் 9.

"ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே யுய்ய ஆட்கொண்டருளி"

பொன்னூசல் 5.

*பிறரை விமர்சிக்கும் ஒருவன், தன் குறைகளை வெளிப்படுத்துகிறான்.*

"உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானை..."

கண்டபத்து 3.

"பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ யாண்டவா றன்றே யெம் பெருமானே"

ஏசறவு 8.

"சீரார் அருளாற் சிந்தனையைத் திருத்தி யாண்ட சிவலோகா"

பிரார்த் 9.

என அடிகள் அருளியவாற்றானுமறிக.

ஆதியும் என்ற உம்மையை அந்தம் என்பதனோடும் கூட்டுக. ஆதியுமந்தமுமாதல் உலகத்திற்குத் தோற்ற நிலை இறுதிகளைச் செய்தல். இறைவன் ஆதியுமந்தமுமாதல்.

"ஆதியு மந்தமு மாயினாற்கு" பொற் 20.

என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க.

"அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணலார்"

ஞான 39:1.

"ஆதியும் ஈறுமாய் எம் அடிகள்"

ஞான 77:10.

"ஆதியாய் நடுவாய் அந்தமாய் நின்ற அடிகளார்"

ஞான 378:6.

"ஆதியும் அந்தமும் ஆனான் கண்டாய்"

நாவு 236:9.

"ஆதியும் அந்தமும் ஆயினாய்" சுந் 92:4.

எனத் தேவாரத்து வருவனவும் காண்க.

இதன்கண், "என்னை நின் அடியனாக்கினாய்"; "நின்னலால் பற்று மற்றெனக் காலதொன்றினி உடையனோ பணி" என்பதனால் ஆட்கொண்ட நீ பிறிதொரு பற்றற்ற எனக்கு ஆனந்தாதீதத்தை அருள வேண்டும் என்பது பெறப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 97.

102. அப்ப னேயெனக் கமுத னேஆ
னந்த னேயக நெகஅள் ஊறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய அன்பரில்
உரிய னாயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாளர் எய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே.

*பொறுமை என்பது தன்நிலையில் தாழ்வு வராது பாதுகாத்துக் கொள்வதாகும்.*

**ப-ரை:**

எனக்கு அப்பனே- எனக்குத் தந்தையே, அமுதனே- எனக்கு அமுதம் போன்றவனே; ஆனந்தனே- அழியாத பேரின்பமுடையவனே; அகம் நெக அள் ஊறு தேன் ஒப்பனே- உள்ளம் உருகும் வண்ணம் இனிமையால் வாயூறுதற்கு ஏதுவாயுள்ள தேனைப் போன்ற வனே, உனக்கு உரிய அன்பரில் உரியனாய்- நினக்கு உரியராகிய மெய்யன்பரைப் போல யானும் உரிமையுடையேனாகி, உனை பருக நின்றது ஓர் துப்பனே- உனது திருவருட் பெருக்கினைப் பருகும் வண்ணம் ஞானாசாரி யனாய்க் காட்சி தந்து நின்ற ஒப்பற்ற தூயோனே; சுடர்முடியனே- செவ்வொளி விளங்கும் சடை முடியை உடையவனே, துணையாளனே- அன்பர்க்கு உறுதுணையாயுள்ளவனே, தொழும் பாளர் எய்ப்பினில் வைப்பனே- தொண்டர் களுக்குத் தளர்ந்த இடத்துப் புதைபொருள் போல உதவுபவனே, எங்கள் மன்னனே- எங்கள் அரசனே, எனை வையகத்து நைய வைப்பதோ சொலாய்- அடியவனாகிய என் னைப் பொய்யாகிய உலக வாழ்வில் வருந் தும்படி வைப்பதுதானோ நின் திருவுள்ளக் கருத்து? கூறியருள்க.

எனக்கு அப்பனே, அமுதனே, ஆனந் தனே, உள்ளம் உருகும் வண்ணம் இனிமை யால் வாயூறுதற்கேதுவாகிய தேனை ஒப்ப வனே, உனக்குரிய மெய்யன்பர்களைப் போல யானும் உரிமையுடையேனாகி நினது திரு வருட் பெருக்கைப் பருகும் வண்ணம் ஞானா சாரியனாய்க் காட்சி தந்து நின்ற ஒப்பற்ற தூயோனே, சுடர்முடியனே, துணையாளனே, தொழும்பாளர் எய்த்த விடத்துப் புதைபொருள் போல் உதவுபவனே, எங்கள் மன்னனே, எனை வையகத்து வருந்தும்படி வைப்பது தானோ நினது திருவுள்ளக் கருத்து? கூறி அருள்க என்பதாம்.

அமுதனே என்றார் கழிபெருஞ் சுவையோ டுறுதிபயத்தலுடைமையான், ஆனந்தனே என்றார். இறைவன் என்றும் அழி யாப் பேரின்பமுடையனாயிருத்தலின். “அத் தனா னந்தன்” (திருவெம்3) “அத்தர் ஆனந்த ரால் அன்னே யென்னும்” (அன்னை3) “அன்பன் அமுதளித்தூறு மானந்தன்” (குயிற்6) என அடிகள் பிறாண்டும் இறைவனை ஆனந் தன் என்றருளிச் செய்தமை காண்க. அள்ளூறு தல்- வாயூறுதல். “அமுதனென்றள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்” (திருவெம்3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அகநெகவும் வாயூ றவும் செய்யும் தேன் எனத் தேனின் விசேடம் கூறியவாறு. தேன் ஒப்பன்- தேன் போன்றவன். “கோற்றே னெனக் கென்கோ குரைகடல் வாயமு தென்கோ” (உயிருண்ணிப்8) என அடிகள் அருளியவாறுங் காண்க. அன்பரில் என்புழி இல் ஒப்புப்பொருட்டு. உனைப் பருக- உன் திருவருட்பெருக்கைப் பருக. “என்பொலா மணியை யேத்தி யினி தருள்பருக மாட்டா” (அச்சப்3) என வருதல் காண்க. “பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடலை” (தெள்15) “சிவன் கருணைத் தேன் பருகி” (குலாப்5) என்பனவும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. நின்றது- ஞானாசாரியனாகக் காட்சி கொடுத்து நின்றது. துப்பன்- தூயோன், துப்பு- தூய்மை. (பிங் 10:626) இனி “துப்பனே தூயாய் தூய வெண்ணீறு துதைந்தெழு துளங்கொளி வயிரத் தொப்பனே” (அருட்6) என துப்பனே என்பதின் வேறாகத் தூயாய் என்றலின் துப் பனே என்பதற்குப் பவளம் போன்றவனே எனினுமமையும். “பவளச் செவ்வி யாயின வீசன்” (282) எனத் திருக்கோவையாரிலும்

*ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப் பெரிய பணக்காரன்.*

"பெருங்கடற் பவளம்போல் வண்ணராகிலும்" (ஞான 242:5) எனத் தேவாரத்தும் வருவன ஈண்டறியற்பாலன.

முடி- சடையானியன்ற முடி. "பைவா யரவு மறியும் மழுவும் பயின் மலர்க்கை. மொய்வார் சடைமுடி முன்னவன்" (170) எனத் திருக்கோவையாரில் வருதலும், சடைமுடி என்பதற்குச் "சடைகளானியன்ற முடி" எனப் பேராசிரியர் உரைத்தமையும் காண்க. அது ஒளியுடைத்தாகலின் இறைவனைச் சுடர் முடியனே என்றார். "மின்னங் கலருஞ் சடைமுடியோன்" (திருக்கோவ்வ 172) என்பதும் "ஒளி யவ்விடத்து விரியுஞ் சடையானியன்ற முடியையுடையவன்; மின்னங் கலருமென்பதற்கு மின்னவ் விடத்தலர்ந்தாற் போலுஞ் சடையெனினு மமையும்" என்னும் அப்பகுதி (பேர்) உரையும் ஈண்டறியற்பாலன. இறைவன் சடை செஞ்சடையாதலின் சுடர்தல் என்பதற்கு செவ்வொளி விளங்குதல் எனவுரைக்க.

"சடையே நீரகந் ததும்பி நெருப்புக் கலிக்கும்மே." (11ந் திருமுறை என்னும் இளம் பெருமானடிகள் திருவாக்கு இங்கு கருதத்தக்கது.

துணையாளன்- துணையாகவுள்ளவன். "தோன்றிய எவ்வுயிர்க்கும் துணையாய் நின்ற தாயானை..." பல்லுயிர்க்கும் துணையானானை" (நாவு 263:4; 276:3) எனத் தேவாரத்தும் வருவன காண்க. தொழும்பாளர்- தொழும்பர், அடியவர். அடியவர்க்கு எய்த்த இடத்துப் புதைபொருள் போல உதவுதலின் "தொழும்பாளர் எய்ப்பினில் வைப்பே" என்றார். "எனக்கெய்ப்பினில் வைப்பே" (நீத்39) என அடிகள் பிறிதோரிடத்தும் அருளியமை காண்க.

"பத்தருக் கெய்ப்பினில் வைப்பென வுதவும்
முத்தித்தாள — திருவிடைமும் 7:41-2
"அடியவர் எய்ப்பினில் வைப்பாகக் கருதி வைத்த நிதியே"
— கோயில் திருப்பண்ணி 33.

எனப் பதினொராந் திருமுறையில் வருதலுங் காண்க.

இதன்கண் பலபட விளித்து "எனை வையத்து நைய வைப்பதோ சொலாய்" என்பதனால் என்னை வையகத்து வைப்பதை நீட்டியாது விரைய உய்யக் கொண்டருள வேண்டும் என்னும் குறிப்புப் பெறப்படுதலின் ஆனந்தாதீத விருப்பம் என்னும் பதிகப் பொருள் போந்தவாறு காண்க. 98.

(தொடரும்...

**ஸ்ரீ செல்வச் சந்நிதியில் உறைந்தருளும் வேல்**

எத்தனை இடர்களைக் களைகின்ற வேல்
என்றென்றும் எம் நெஞ்சில் குடி கொண்ட வேல்
பக்தி கொள் மனமதில் உறைகின்ற வேல்
பன்னிரு கையனின் பாங்கான வேல்
தொய்விலா வாழ்வுயர்வு தரவல்ல வேல்
தொழுவோர்கள் மனமென்றும் இனிக்க வைக்கும் வேல்
தெய்வீக சக்தி நிறைந்திருக்கும் வேல்
செல்வச் சந்நிதியில் உறைந்தருளும் வெள்ளிவேல் அதுவே.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

# சிரத்தை நலம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சிரத்தை எனும் மனிதப்பண்பு மனிதர்களுடன் உறவுகொள்ளும்போதுதான், எடுத்த கருமங்கள் யாவும் வெற்றி பெறுகின்றன. சிரத்தையின்றேல், சித்தி இல்லை; வாழ்வும் பரிமளிக்காது. வாழ்க்கையில் வெற்றியடைவதற்கு உழைப்பு இன்றியமையாதது. உழைப்பு, செம்மையாக அமைவதற்குக் கடின உழைப்பாக விளங்குவதற்கு விடாமுயற்சி தேவை. விடாமுயற்சிக்கு உந்துசக்தியாகத் துலங்குவது சிரத்தையாகும். எவர் சிரத்தையை இலட்சியம் செய்கிறாரோ அவர் தொட்டது எல்லாம் பொன்னாகும். மாறாக, சிரத்தையை அலட்சியம் செய்பவர்கள் வாழ்வில் துன்பம், துயர்கள், இடர்கள், ஏமாற்றங்கள் ஆகியவற்றைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும்.

அசிரத்தையின் ஆட்சிக்குட்பட்டு, வாழாவிருப்பவர்கள் தம் வாழ்நாட்களை வீணாட்கள் ஆக்கி விடுகின்றனர். அவர்கள் உயிரோடு வாழ்ந்தும், உயிரினும் மேலான மானத்துடன் வாழ முடியாதவர்கள் ஆகிவிடுகின்றனர். அவர்களைத்தான் "நடைப்பிணங்கள்" என்கின்றனர். மண்ணிற்குப் பாரமாக இருந்துவிட்டு, மடிந்து விடுகின்றனர்.

உழைப்பு இல்லாமல், உழைப்பில் சிரத்தையின்றி நல்லவண்ணம் வாழலாம் என்று நப்பாசை கொண்டவர்கள் சமுதாயத்தில் இருப்பதனால்த்தான் ஊழல்கள், மோசடிகள், திருட்டுக்கள், இலஞ்சம் பெறுதல் என்பன தற்காலத்தில் பெருகிவருகின்றன. "வேலியே பயிரை மேயும்" அவலநிலை இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது. இங்கு விநோதம் என்னவெனில்; சிரத்தை எடுக்கவேண்டிய நேர்மறை விடயங்களில் அசிரத்தையாக இருத்தலும்; அசிரத்தை காட்டவேண்டிய எதிர்மறை விடயங்களில், பெரும் சிரத்தை கொள்வதும் ஆகும். தற்கால நவீன உலகின் சாதனையாக இந்நிலமை காட்சியளித்தாலும் ஈற்றில் வேதனையையே தரும் என்பது உறுதி. செயலுக்கேற்ற விளைவு நிச்சயம் உண்டு. எவரும் அதில் இருந்து தப்பவே முடியாது.

"முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்", "தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்". இவ்வுண்மையை மனிதர்கள் செய்கின்ற எல்லாச் செயல்களுடனும் பொருத்திப் பார்த்து நல்லவற்றைச் செய்வதில் சிரத்தையும், அல்லவற்றைச் செய்வதில் அசிரத்தையும் கொண்டால் எத்துணை நலமும் வளமும் வாய்ந்ததாக மனித வாழ்க்கை அமையும் என்பதைச் சற்று, ஆற அமர இருந்து சிந்தித்துப் பார்த்தாற் புரியும். தற்காலத்தில் செயலும் விளைவும்பற்றி ஒரு தெளிவான அறிவு ஏற்படுவது எல்லோருக்கும் மிக அவசியம்.

சிரத்தையோடு உழைத்துப் பெறுகின்ற ஊதியத்தைக்கொண்டு வாழ்கின்ற வாழ்க்கைதான் உயர் வாழ்க்கை. அதன் பயனாகக் கிடைக்கின்ற உயர்வு, புகழ், பெருமைதான் நிரந்தரமானவை. குறுக்கு வழியில்

*நீங்கள் செய்யும் தானம் உங்கள் வழிச் செலவுக்கான கட்டுச்சோறு.*

சம்பாதிக்கின்ற பொருள், புகழ், உயர்வு, அந்தஸ்து என்பன நீர்க்குமிழி போன்று நிரந்தரமானவையன்று.

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

-திருக்குறள் 616.

முயற்சி, ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும். முயலாமை, அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும். "முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்" என்பது ஆன்றோர் வாக்கு. ஒருவன் முயற்சியைப் பெருக்க வேண்டுமாகில், அவனிடம் சிரத்தை இருக்கவேண்டும்.

"வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர் தம்
உள்ளத்தனையது உயர்வு"

-திருக்குறள் 595.

தாமரை போன்ற நீர்ப்பூக்களின் தாளின் நீளம், அவை நின்ற நீரின் மட்டத்தின் அளவினை ஒத்ததாகும். மக்களின் வாழ்க் கைத் தர உயர்வும்; அவர்களின் ஊக்கத்தின் அளவைப் பொறுத்ததாகும் என்பது இக் குறளின் பொருள். ஊக்கத்திற்கு முன்னோடி யாக அமைவது "சிரத்தை".

தவறான, இழிவான, மனிதாபிமானம் அற்ற பாதையில் சென்று; சீரான, செழிப்பான, செல்வாக்குமிக்க வாழ்வு வாழ்கின்றார்களே என்று அங்கலாய்ப்பவர்கள்; அத்தகையவர் களின் புறவாழ்வையும், வெளிப்பகட்டையும், படாடோபங்களையும் மாத்திரம் கண்டு விட்டுத் தான், அவ்வாறு கூறுகிறார்கள். அவர்களுடைய வாழ்வின் உட்பக்கத்தைத் தரிசிக்கின்ற வாய்ப்போ, வல்லமையோ, வெளியில் நின்று பார்ப்பவர்கள் அநேகம் பேர்களுக்குக் கிடைப் பதில்லை. "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். அது வெறுமனே தோற்றம். நிஜம் அன்று.

வெளியில் நின்று பார்ப்பவர்கள் நினைக்குமாப்போல், தவறான பாதையில் சென்று குறுக்கு வழியில் சம்பாதித்தவர்களின் உட்பக்க வாழ்வு; திருப்தியும் மகிழ்ச்சியும் அமைதியும் சாந்தியும்; சீரும் செழிப்பும் நிம்மதியும் கொண்டு விளங்குவதில்லை. மாறாக; பயம், பீதி, மனச்சஞ்சலம், மனப் பிராந்தி, மனநோய்; உடல்நோய் ஆகிய வற்றினால் பீடிக்கப்பட்ட நிலையிலேயே, அந்தரமான அவல வாழ்வு வாழ்கின்றார்கள் என்பதுதான் உண்மை நிலை. ஆகவே, பிழை யான, தவறான, நேர்மையற்ற வழியில் சென்று வளமான வாழ்வு வாழ்வது என்பது ஒரு தோற்றமே தவிர நிஜம் அன்று என்பதைக் கருத்தில் கொள்பவர்களே மாமனிதர்கள்.

எவற்றில் சிரத்தை கொள்ள வேண் டும்; எவற்றில் அசிரத்தை காட்டவேண்டும் என்பதை மனித விழுமியங்கள் என்னும் உரைகல்லில், உரைத்துப் பார்த்துத்தான் தீர் மானிக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

தற்காலத்தில் மனிதப் பண்புகள், மனிதத் தன்மைகள் உள்ளிட்ட மானுடம், மனிதம், மனிதர்களிடமிருந்து சூறையாடப்பட்டு வருகின்றன. வேறு யாரினாலும் சூறையாடப் படக்கூடிய பண்டங்கள் அல்ல அவை. விநோதம் என்னவென்றால் நம்மை நாமே சூறையாடுகின்றோம் என்பதேயாகும். நமக்கு நாமே திருடர்கள் ஆகிவிட்டோம். அதுவும் ஒரு வழியில் நன்மையேதான். திருடர்களாகிய

நாம் இவ்வுண்மையை உணர்ந்து கொண்டால்; நாமே மனித விழுமியப் பண்புகள் சோரம் போவதைத் தடுத்து நிறுத்தி விடலாமல்லவா!

தற்சமயம், நமக்குத் தேவையானவை எவையெனில்; நமது மனித விழுமியப் பண்புகள், நம்மாலேயே சூறையாடப்பட்டு வருகின்றன என்ற உணர்வும்; அவ்வாறு சூறையாடப் படுவதைத் தடுத்து நிறுத்துவதில் உண்மையான சிரத்தையும்தான்.

நல்லனவற்றை, நயமானவற்றை, நலம் தருவனவற்றை தேடிக்கொள்வதில் சிரத்தை கொள்ளாத எதிர்மறைக் கலாசாரம்; மனிதர்களிடையே தற்காலத்தில் பெருகி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதன் எதிர் விளைவுகள், அவற்றின் தாக்கம் பற்றி எவரும் கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை. அதேவேளை, தீயவற்றைத் தீங்கு விளைவிப்பனவற்றை ஆவலோடு தேடிப் பிடித்து, சிரத்தையோடு அவற்றுடன் உறவாடி; ஈற்றில் தாமும் அழிந்து போவதில் சிரத்தை உடையவர்களாக இருப்பவர்கள் அநேகம் பேர் உள்ளனர்.

"இளமையிற் கல்" என்பது நம் முன்னோர் எமக்களித்த அமுதவாக்கு. ஆனால், தற்காலத்தில் கல்வி கற்கும் பாராயத்தவர்களில் பெரும்பாலானோர் கற்றலில் சிரத்தை இன்றிக் காணப்படுகின்றனர். நல்ல பழக்க வழக்கங்கள், மனிதப் பண்புகள், சூழல் பாதுகாப்பு, வீதி ஒழுங்குகள், நேர முகாமைத் துவம், பிள்ளை வளர்ப்பு, பொதுச் சொத்துக் களைப் பேணல், குடும்பநலம், சமூக நலம், முதியோர் பராமரிப்பு ஆகியவற்றில் தற்காலத்தவர்களில் பெரும்பாலானோர் சிரத்தை உள்ளவர்களாகத் தென்படவில்லை.

சுயநலத்தோடு ஆற்றுகின்ற பணிகளில் எடுக்கப்படுகின்ற சிரத்தை; பொதுநலப் பணிகளை ஆற்றும்போது எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. ஏனோ தானோ என்ற அலட்சிய மனப்பாங்கு பலரில் காணப்படுகிறது.

சுற்றுப்புறச் சூழல், மற்றும் வளிமண்டலம் மாசு அடைவதைத் தடுப்பதற்கு; மனிதர்களில் எத்தனைபேர் சிரத்தையாக உள்ளனர்? சூழல் மாசடைவதற்குச் சிரத்தையோடு உபகாரியாக இருப்பவர்கள் பலரை அன்றாடம் காண்கிறோம். சுத்தம், சுகாதாரம் பேணுவதில் இன்று அசிரத்தையே மனிதரில் ஆட்சி செலுத்துகிறது. சிரத்தை காட்டவேண்டியவற்றில், அசிரத்தையாயிருத்தலும், அசிரத்தையாய் இருக்க வேண்டியவற்றில் மிகுந்த சிரத்தை எடுப்பதும் தற்கால மனித சமுதாயத்தில் பலரின் நடைமுறை வாழ்க்கைத் தத்துவம் ஆகிவிட்டது.

பிறருக்கு இடையூறு விளைவிப்பதில் உள்ள சிரத்தை இடையூறுகளை ஏற்படுத் தாமல் தவிர்ப்பதில் மனிதரில் பெரும்பாலானவர்களிடம் காணப்படவில்லையே என்பதுதான் தற்போதைய ஆதங்கம். பொதுச் சொத்துக் களைப் பேணுவதிலும்; பொது இடங்களைத் துப்புரவாக வைத்திருப்பதிலும்; போக்குவரத்தில் பிறருக்கு இடையூறுகள் செய்வதைத் தவிர்ப்பதிலும்; மனிதர்களில் பெரும்பாலோரின் சிரத்தை குன்றி வருவதை அவதானிக்க முடிகின்றது. சுருக்கமாகச் சொல்லப்போனால், மனிதர்களில் அநேகம்பேர் மனிதத் தன்மைகள், பண்புகள் என்பவற்றுடன் மனிதர்களாக வாழவேண்டுமென்பதில் சிரத்தையின்றி உள்ளனர் என்பது தெளிவு.

தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமூக அமைதி, நாட்டின் அமைதி, உலக அமைதி பேணப்படவேண்டுமாகில்; மனிதர்கள் ஒவ்வொருவரும் தமது கடமைகள், உரிமைகள், சமூகப் பொறுப்புக்கள் ஆகியவற்றை

*எண்ணங்களை நல்லவைகளாக மாற்றிப் பயிரிடுங்கள். அது வெற்றியை அறுவடை செய்யும்.*

உணர்ந்து கொள்வதிலும், அவற்றின் நலம் பேணுவதிலும் மிகுந்த சிரத்தை கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். நாம் அனைவரும், நல்லவற்றில் சிரத்தையும் அல்ல வற்றில் அசிரத்தையும் கொள்வதன்மூலம் நல்லதொரு தூய்மையான, மனித விழுமியப் பண்புகளுக்கு மதிப்பளிக்கின்ற, மனித சமு தாயத்தைக் கட்டியெழுப்பும் பணியில் சிரத்தையோடு உழைப்போம். ஒருமித்து உயர்ச்சி பெறுவோம்.

வாழ்க வளமுடன்;
வாழ்க வையகம்.

## சந்நிதியை தான் தொழுதால் சகலமும் காலடியில்

ஏழை க்கெழிய னாகி
ஏழை பங்கா ளனாகி
ஊழி க்கூத் தாடும்
சிவன் மைந்த னிவனோ.

கைலா யமலை வாழும்
கைலா யநாதன் புதல்வா
நிலை யென் னநான றியேன்
என் நிலை நீயறி வாய்
மலை யென்ன மடு வென்ன
கடந்து தான் நான் வருவேன்
கால் தானூன மென் றாலு
முனைத் தொழ கரமுண்டு.

தந்தை யுடனி ருந்தாலும்
தா யுடனிருந் தாலும்
எந்தை தன் நினை வெலாம்
கந்த னவன் கா லடியில்
விந்தை பல புரிந்திட் டவேலா
எந்த னுள்ள கமல மலர
சிந்தை குளிர என் கரந் தொழுதிட
வேயிறங்கி வா வேல் முருகா.

காலில் லாமனித னென்றாலும்
கவலை யில்லை வேலவா
பாலில் நெய் கலந் தாற்போல்
மென் னுள்ளம் கலந் தவன்நீ
நூலில் லாபட்டம் போல்
தறி கெட் டலையாமல்
வேலின் துணை யுடனே
வாழ்ந்தி டுவேனய்யா.

உலகத் தில்வாழ் வதற் கிங்
குண்டு பல வழிகள்
கலக்க முறத் தேவை யில்லை
கருணை மனந் தான் போதும்
கலங்க ரைவிளக் காகஒளி
கொடுக்க நீயுண்டு
கலக்க மில்லை என் மனதில்
கால மெலா மவனினைவே

ஊன மொரு குறையில்லை
உலகத் தார்நினை க்கவேண்டும்
உனக் குமின் நிலை வந்திடா
தென்று நீயும் நினைத் திடாதே
வனக் குயில் போல் வாழ்வதற்கு
நான் நினைத்தேன்
எனக் கின் நிலை தந்தது யார்
கந்த னுக்கே எல்லாம் வெளிச்சம்.

பன்னிரு விழிகளி லேஒரு
விழியால் பார்த்து விடு
என் நிலை மாறிவிடும்
ஏகாந்த மாகிவிடும்
சொன்ன தும்நீ தான்
சொர்க்கமும் நீதான்
சந்நிதி பதி வாழும்
சிரித் தாளும் வேல் முருகா.

பொன்னும் தேவை யில்லை
புகழும் தேவை யில்லை
என் நிலை மறக்காமல்
இருக்கவே நீயருள்வாய்
உன்னை தொழு திடவே கர
மிரண்டு தான் போதும்
சந் நிதியை நான் தொழுதால்
சகல முமென் காலடியில்.

-பொ. பாலேஸ்வரன்-

*உற்சாகமுள்ளவனுக்கு எந்த எதிர்ப்பும் தடையாக இருப்பதில்லை.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

## கல்யாண கிருஷ்ணர்

பூமாதேவியினுடைய மகன் நரகன் என்ற அசுரன் அவன் வருண தேவருடைய குடை, தேவேந்திரரின் தாய், அதிதியினுடைய குண்டலங்கள், மணிபர்வதம் என்கிற தேவேந்திரருடைய இடம் முதலானவைகளை அபகரித்துச் சென்றான். தேவேந்திரர் கிருஷ்ணரிடம் வந்து சொன்னார். கிருஷ்ணர் சத்யபாமாவுடன் கருடன் மீதேறிக் கொண்டு நரகாசுரனின் நகரத்திற்குப் போனார். அவ்விடம் யாரும் நுழையாதபடி பயங்கரமான காவலுடன் இருந்தது. முராசுரன் என்பவன் ஐந்து தலைகளுடன் அந்நகரைக் காவல் காத்து வந்தான். கிருஷ்ணர் முராசுரனைக் கொன்று, நரகாசுரனுடன் போர் புரிந்தார். கருடன் நரகாசுரனுடைய படைகளை அழித்தார். கிருஷ்ணர் நரகாசுரன் தலையைத் துண்டித்தார். கொடிய நரகாசுரன் மாண்டான்.



*சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டிற்குச் சமம்.*

பூமாதேவி கிருஷ்ணரிடம் வந்து குண்டலங்கள், குடை முதலான நரகாசுரன் அபகரித்தவற்றைக் கொடுத்துவிட்டுத் துதித்தாள். நரகாசுரனுடைய மகன் பகதத்தனைக் காக்குமாறு வேண்டினாள். சரணமடைந்த பகதத்தனுக்கு கிருஷ்ணர் அபயம் கொடுத்தார். நரகாசுரன் அரசர்களை வென்று அபகரித்துக் கொண்டுவந்து வைத்திருந்த பதினாறாயிரம் பெண்களைக் கண்டார். கிருஷ்ணரைக் கண்ட அவர்கள் ஒவ்வொருவரும் "இவரே எனக்கு மணாளராக வேண்டும்" எனக் கடவுளிடம் வேண்டினார்கள். கிருஷ்ணர் அவர்களைத் துவாரகைக்கு அனுப்பி வைத்தார்.

பிறகு சத்யபாமாவுடன் சுவர்க்கத்திற்குச் சென்று அதிதியிடம் குண்டலங்களைக் கொடுத்தார். சத்யபாமா அங்கிருந்த பாரிஜாத மரத்தைப் பார்த்து ஆசைப்பட்டாள். கிருஷ்ணர் அம்மரத்தை வேரோடு பிடுங்கி கருடன்மீது வைத்துக்கொண்டு வந்தார். கிருஷ்ணரை எதிர்த்த தேவேந்திரரை முறியடித்துவிட்டு துவாரகைக்கு வந்து, பாரிஜாத மரத்தை சத்ய பாமாவிடம் கொடுத்தார்.

நரகாசுரனிடமிருந்து விடுவித்துக் கொணர்ந்த பதினாறாயிரம் பெண்களையும் கிருஷ்ணர் மணந்து கொண்டார். ஒவ்வொருவருடனும் தனித்தனியான உருவமெடுத்துக் கொண்டு அவர்களுடன் இல்லறம் நடத்தினார்.



இத்தனை பேரையும் வைத்துக்கொண்டு கிருஷ்ணர் எப்படிச் சமாளிக்கிறார் என்பதைப் பார்ப்பதாக நாரதர் ஒரு சமயம் துவாரகைக்கு வந்தார். ருக்மிணியின் மாளிகைக்கு வந்தார். கிருஷ்ணர் நாரதரை வரவேற்று உபசரித்தார். பிறகு அடுத்த மாளிகைக்குப் போனார். அங்கேயும் கிருஷ்ணர் இருந்தார். நாரதர் எங்கே போனாலும் கிருஷ்ணர் அங்கே இருந்தார். ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு காரியத்தைச் செய்துகொண்டிருப்பவராக நாரதரை வரவேற்றார். பரப்பிரம்மமான பகவானுக்கு இதெல்லாம் மாயா லீலைகள். இதில் அதிசயப்பட ஒன்றுமில்லையென்றெண்ணி கிருஷ்ணரை வணங்கி விடைபெற்றார்.

தினமும் அதிகாலையில் கிருஷ்ணர் எழுந்திருப்பார். பரப்பிரம்மத்தைத் தியானம் செய்வார். தேவ, பித்ரு தர்ப்பணங்களையுஞ் செய்து, அந்தணர்களுக்கு தானமும் கொடுப்பார். ஆச்சார்யர்களையும், தன்குலப் பெரியோர்களையும் வணங்கிவிட்டு, அலங்கரித்துக் கொண்டு, ராஜ சபைக்குச் சென்று சிம்மாசனத்தில் அமர்வார். ஒருநாள் ராஜசபையிலிருக்கும்போது நாரதமகரிஷி அங்கு வந்தார். தங்கள் அத்தை மகனும் பக்தனுமாகிய யுதிஷ்டிர மன்னன் சாரூப்ய முக்தியைப் பெற விரும்பி ராஜசூய யாகம் செய்து தங்களை ஆராதிக்க நினைக்கிறான். அதைத் தாங்கள் உடனிருந்து நடத்தித் தரவேண்டும் என நாரதர் கூறினார். கிருஷ்ணர் தன் பட்ட மகரிஷிகளையும் அழைத்துக்கொண்டு இந்திர பிரஸ்தம் சென்றார். பாண்டவர்களும், குந்திதேவியும், திரௌபதையும், சுபத்ரையும் பேரானந்தமடைந்தனர்.

*நல்ல நண்பனைத் தேடிக்கொள்ளாதவன் தனக்குத் தானே பகைவன்.*

யுதிஷ்டிரர் ராஜசூய யாகத்தைத் தொடங்கினார். முதல்பூஜை யாருக்கு என யுதிஷ்டிரர் கேட்டபோது, சகாதேவன் எல்லாமான சர்வேஸ்வரனே கிருஷ்ணர். அவருக்கே முதல் பூசை செய்ய வேண்டும் என்றான். அவ்வாறே கிருஷ்ணருக்கே முதல் பூஜை செய்தார். "இடையனான கிருஷ்ணனுக்கு அரச மரியாதையும், முதல் பூஜையுமா? என சிசுபாலன் பலவாறாகத் தூற்றினான். மன்னர்கள் அவனுடன் சண்டை தொடங்கினார்கள். கிருஷ்ணர் தனது சக்ராயுதத்தால் அவன் தலையை அறுத்தார். அவன் உடலிலிருந்து ஒரு தேஜஸ் கிளம்பி கிருஷ்ணருடன் இணைந்தது. வைகுண்டத்தில் துவாரபாலகனாக இருந்த அந்த ஆத்மா பகவானுடன் இணைந்தது.

அதேபோன்று தந்தவக்ரதனையும் சால்வனுடனான யுத்தத்தில் கிருஷ்ணர் கொன்றார். துவார பாலகனாக வைகுண்டத்திலிருந்த அவனும் சாபம் நீங்கி கிருஷ்ணருடன் அவனது ஆத்மா சேர்ந்தது.

ராஜசூய யாகத்திற்கு வந்திருந்த துரியோதனன் பாண்டவர்களின் ஐஸ்வரியத்தைக் கண்டு பொறாமையடைந்தான். அதன் அடிப்படையில் மிகப்பெரிய பாரத யுத்தம் மூண்டது. பலராமருக்கு இந்த யுத்தம் பிடிக்கவில்லை. தன் உறவினர்களே ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொல்வதைப் பொறுக்கமுடியாமல், அங்கிருக்கவேண்டாமென்று, தீர்த்த யாத்திரை புறப்பட்டுப் போனார்.

## குசேலர்

கிருஷ்ணர் சாந்தீபினி மகரிஷியிடம் குருகுலவாசம் செய்தபோது குசேலர் (சுதாமன்) என்ற அந்தணச் சிறுவன் நண்பனாக இருந்தான். குசேலருக்கு இருபத்தேழு குழந்தைகள். மிகவும் வறுமை. அவர் மனைவி மிகச் சிறந்த பதிவிரதை. வறுமையின் கோரப்பிடியிலிருந்து மீள ஒருநாள் குசேலரிடம், "பிரபோ, தங்கள் நண்பர் துவாரகையில் மிகப்பெரிய செல்வந்தராக தன்னைச் சேர்ந்தவர்களையெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார். தாங்கள் ஒரு முறை நேரில் சென்று அவரைக் கண்டால் எங்கள் கஸ்டங்கள் எல்லாம் நீங்கும்" என்றாள்.




குசேலர் வறுமை நீங்குவதை இரண்டாம் பட்சமாக வைத்து, கிருஷ்ணரைத் தரிசிக்க முடியுமென்ற சந்தோசத்தோடு புறப்பட்டார். "கிருஷ்ணரை வெறுங்கையுடனா போய்ப் பார்ப்பது, இல்லத்தில் என்ன இருக்கிறது?" என்று கேட்டார் வீட்டிலே ஒன்றுமில்லாதபடியால் அவர் மனைவி அக்கம் பக்கத்து வீடுகளுக்குச் சென்று அவலை யாசகமாகப் பெற்று வந்தாள். அதனைத் தன் கந்தல் துணியில் முடிந்து கொண்டு துவாரகைக்குப் புறப்பட்டார். வழிநெடுகிலும் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது கிருஷ்ணரைச் சந்திக்கப் போகிறோமென்ற சந்தோசத்தோடு நடந்து வந்து சேர்ந்தார்.

வாயிற் காவலர்கள் அவரது தோற்றத்தைக் கண்டு உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. கிருஷ்ணர் தன் பால்ய நண்பன் தன் மாளிகைக்கு வரக்கண்டு விரைந்து ஓடோடி வந்து

*உண்மையான பெரிய மனிதருக்கு முதல் அடையாளம் பணிவாக இருத்தல்.*

அணைத்துக் கொண்டார். அவரை அழைத்துக் கொண்டுபோய் ஆசனத்தில் அமர்த்தி தான் கீழே அமர்ந்து அவருக்குப் பாதபூஜை செய்து உபசரித்து, அளவளாவி மகிழ்ந்தார்.



ருக்மிணி சாமரம் வீசினாள். ஒரு யாசகப் பிராமணனுக்கு நடைபெறும் பேருபசாரங்களைக் கண்டு பார்த்தவர்கள் அதிசயித்தார்கள். இருவரும் குருகுலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவுபடுத்திக்கொண்டு பேசிக்களித்தார்கள். எல்லாம் தெரிந்தவரான கிருஷ்ணருக்கு அவர்

*பெற்றோர்களின் வாழ்க்கை என்பது குழந்தைகளின் பாடப்புத்தகமாக அமைகிறது.*

வந்த நோக்கமும், தான் செய்யவேண்டியது என்ன என்பதும் தெரியுமல்லவா? ஆவலோடு "எனக்கு என்ன கொண்டு வந்திருக்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

தேவேந்திர போகத்தோடிருக்கும் கிருஷ்ணருக்கு இந்த அவலையா கொடுப்பது என வெட்கப்பட்டு குசேலர் பேசாதிருந்தார். கிருஷ்ணர் விட்டபாடாயில்லை. தானே துணிமூட்டையை அவிழ்த்து "ஆகா! எனக்குப் பிடித்த அவலையல்லவா கொண்டு வந்திருக்கிறீர்கள்!" என்று கூறியபடி ஒருபிடி அவலை எடுத்து வாயில் போட்டார். இரண்டாவது பிடியை அவர் எடுக்கும்போது ருக்மிணி அவர் கையைப் பிடித்துத் தடுத்தாள். "ஸ்வாமி! தாங்கள் ஒருபிடிஅவல் சாப்பிட்டதற்கே சமஸ்த சம்பத்துக்குமே. இது போதும்" என்று தடுத்தாள்.

குசேலர் அன்றிரவு கிருஷ்ணருடைய மாளிகையிலேயே விருந்துபசாரம் ஏற்று உறங்கினார். தான் ஸ்வர்க்கத்தில் இருப்பதாக அவர் நினைத்தார். பொழுது விடிந்ததும் கிருஷ்ணரிடம் விடைபெற்றுக் கிளம்பினார். கூடவே சிறிது தூரம் வந்து வழியனுப்பி வைத்தார் கிருஷ்ணர். போகும்போது குசேலர் கிருஷ்ணரின் அன்பு ஒன்றே போதும். மற்றைய செல்வங்கள் எதற்கு? செல்வத்தால் அகம்பாவம்தான் ஏற்படும் என்று எண்ணியபடி ஊருக்குப் போனார்.

அங்கு தம் இல்லம் இருந்த இடத்தில் ஒரு பெரிய மாளிகை இருக்கக் கண்டு ஒன்றும் புரியாமல் திகைத்தார். அரண்மனை போன்ற மாளிகையிலிருந்து அவர் மனைவி வந்து வரவேற்றாள். தான் கேட்காமலே இவ்வளவு செல்வத்தையும் கிருஷ்ணர் தனக்குத் தந்தார் என்பது புரிந்தது. அவர் வறுமை நீங்கியது. அவர் அந்தச் செல்வத்தால் தனக்கு செருக்கு ஏற்படா வண்ணம் ஜாக்கிரதையாகவிருந்து, உலக சுகங்களிலிருந்த பற்றுக்களைவிட்டு, இறந்தபிறகு வைகுண்டத்தை அடைந்தார்.

இந்தச் சரிதத்தைக் கேட்பவர்கள் பகவானிடம் பக்தி ஏற்படப்பெற்று, சம்சார பந்தங்களிலிருந்தும் விடுபடுவார்கள்.

பொல்லாவடிவுடைப் பேயச்சிதுஞ்சப்
புணர் முலைவாய் மடுக்க
வல்லானை மாமணிவண்ணனை மருவுமிடம் நாடுதிரேல்
பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு
பௌவ மெறிதுவரை
எல்லாரும் சூழச் சிங்காசனத்தே
இருந்தானைக் கண்டாருளர்.

துவாரகைக் கண்ணன் நம்மையும் காப்பான். (தொடரும்...

**நாம் செய்கிற தவறுகளுக்கு கணக்கேயில்லை. அப்படியிருக்க அடுத்தவர் தவறுகளை விமர்சிக்க நமக்கு என்ன அருகதை இருக்கிறது? "என்னை நன்றாக வை" என்று இறைவனிடம் பிரார்த்திக்கலாம். "அவனை அழித்துவிடு" என்று மன்றாடுவது பிரார்த்தனையாகுமா? ஆனால் நம்மில் பலரும் அதைத்தானே செய்துகொண்டிருக்கிறோம்? "பிரபுவே! அடுத்தவருக்குக் கெடுதல் செய்யாதிருக்கும் மனதை எனக்குக் கொடுங்கள். பிறருடைய குற்றங்களை மன்னிக்கும் பெருந்தன்மை உடையவனாய் என்னை வைத்திருங்கள்" என்று இறைவனிடம் வேண்டுவோம்.**

*சிறு துணிவு இல்லாததால் உலகில் பல திறமைகள் சிதறிப் போகின்றன.*

# தியானமும் மக்கள் வாழ்க்கையும்

– **திரு வி.ரி. வேலாயுதம்** அவர்கள் –

சிந்துவெளி நாகரீகத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழ்வாராய்ச்சியில் 1500 வருடங்களுக்கு முன்பே அம்மன், எருது, பிள்ளையார் சிலைகள் தேய்ந்த நிலையில் இருந்ததாகக் கூறும்போது அதிலிருந்து பல வருடங்களுக்கு முன்பே இந்து நாகரீகம் தோன்றியுள்ளது என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். அதனுடன் சேர்ந்தே தமிழுக்கும் ஆரம்ப காலம் கணக்கிட முடியாது உள்ளது. முருகன் இயற்றிய தமிழ். அகத்தியர், பின் தொல்காப்பியர் இயற்றியும், கட்டிக் காத்ததுமான தமிழ் ஏன், நக்கீரர் பாடிய தமிழ், ஔவையார் பிள்ளையாரைப் பாடிக் கையிலையில் சேர்ப்பித்த தமிழ் இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவ்வாறு சைவர்களாக இருந்து சிவனை முழுமுதற் கடவுளாக வழிபட்டு வந்த தமிழர்களாகிய நாம் கடந்த காலத்தில் மாணவர்களாக இருந்தபோதும், வாலிபர்களாக இருந்தபோதும், தொழிலதிபர்களாக இருந்த போதும் சில நல்ல செயல்களை செய்யும் போது சில தவறுகளும் தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்டிருக்கலாம். அத் தவறுகள் அறுபதுகளில் இளைப்பாற்று விழாவின்போது தான் அவர்களுக்கு விளங்கும். நான் இப்படிப் படிப்பித்திருக்கலாமே, நான் இவர்களுக்கு இப்படி வேலை கொடுத்திருக்கலாமே. நான் இப்படி தொழிற்சாலையை முன்னேற்றி இருக்கலாமே என்று எண்ணுவதைத்தான் சுடலை ஞானம் என்று கூறுவர். அதில் நல்லன செய்தன யாவும் மனதில் தென்படாது. துன்ப நிகழ்வுகள்தான் அடிக்கடி மனதை உறுத்தும். அவருக்கு தண்டனை கொடுத்தேன், அவரை இடை நிறுத்தினேன். அவரது சம்பளத்தை நிறுத்தினேன் என்று துன்பப்படுவர். இதற்குத்தான் தியானம் இன்றி அமையாது வேண்டப்படுகிறது.

ஒரு மனிதன் ஒரு நாளைக்கு அறுநூறு விடயங்கள் வரை சிந்திப்பானாம். இதனைப் போக்க "ஓம் நமசிவாய" என்றோ வேறு தெய்வங்களை நினைத்தோ தியானம் இருந்து வந்தால் முன்னூறாகக் குறைக்க முடியும் என்பர். இதனால் உடல் சுத்தம், மனச் சுத்தம், மன அமைதி, நிம்மதி, போதுமென்ற நினைவு, பேராசைப்படாமை, சமயப் பற்று, பொறுமை, நல்லன செய்யும் விருப்பம் ஆகியன உண்டாம். நாளடைவில் தியானம் இருந்து பழகிய ஒருவர் தன்னிடமுள்ள தீய குணங்களாகிய அழுக்காறு, அவா, கோபம், பேராசை, மதமாச்சரியம் ஆகியன யாவும் சூரியனைக் கண்ட பனிபோல மெல்ல மெல்ல அகன்று இறைவனுடைய திருப்பாதங்களே மனக்கண்முன் நிற்பதைக் காணுவர்.

இவ்வாறுள்ள சைவ சமய மக்கள் ஆகிய நாம் இவர் நம்மவர் பிறர் என்று பாராது, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*

பாராது, படித்தவர், படிக்காதவர் என்று பாராது எல்லோரும் இந்நாட்டு மக்களே, எல்லோரும் இந்து மக்களே எல்லோரும் எல்லா உயிர்களும் இறைவனது படைப்புக்களே என்ற எண்ணம் உருவாக வேண்டும். ஒருவரை ஒருவர் கண்டால் புன்சிரிப்பு செய்தாலே போதும். அண்ணார்ந்து பார்த்து தெரியாதவர் போல் செல்லுதல் ஆகாது. முஸ்லீம்கள் "இன்சா அல்லா" என்பர். சாயிபாபா பக்தர்கள் "ஓம் ஸ்ரீ ராம்" என்பர். பிரம்ம குமாரி பக்தர்கள் "ஓம் சாந்தி" என்பர், கிருஷ்ண பக்தர்கள் "ஹரே கிருஷ்ணா" என்பர், வேறும் சிலர் "வாழ்க வளமுடன்", "வணக்கம்" என்றெல்லாம் ஏதோ கூறிவிட்டுச் செல்வர். ஆனால், எமது சைவ சமயத்தவரோ கடன்காரரைக் கண்டதுபோல் மேலே பார்த்தவண்ணம் தெரியாததுபோல் செல்கின்றனர். விபூதி, சந்தனம், உருத்திராட்சம் கண்டால் சிவனடியாரென்று வணங்கிச் செல்வர் என்று இந்து சமயம் கூறும். அரசன் விபூதிப் பூச்சைக் கண்டு குதிரையால் இறங்கி வழிபட, அடியேன் அடிவண்ணான் என்றதும் அரசன் "அடியேன் அடித்தோழன்" என்றார் என்பதை புராணக் கதைகள் கூறும். எனவே எம்முள் வேற்றுமை காட்டாது ஒற்றுமையாக சமயத்தையும், தமிழையும், மக்களிடையே ஒற்றுமையையும் வளர்க்க பாடுபடுவோமாக.

எம்முள் மன நிம்மதி உண்டாக அதிக பணம், செல்வம் தேவை எனப் பலர் நினைக்கின்றனர். அது தவறானதாகும். அதற்காக ஓடி ஓடி உழைத்து நேரம் போதாது என்று அலைகின்றனர். இதனை வென்றெடுக்க ஒரேவழி பூவைப்போல சந்தோஷமாகவும், காட்டாற்றைப்போல உத்வேகமாகவும், எறும்பைப்போல சுறுசுறுப்பாகவும், தேனீயைப்போல சேமித்தும், கதிரவனைப்போல கடமை தவறாமலும், கடல் அலைபோல விடாமுயற்சியுடனும், கடவுளைப்போல கருணை உள்ளத்துடனும் இருக்கப் பழகினால் எல்லாம் எமக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்ச் | 03 | மாசி 20 | செவ்வாய் | கச்சியப்பசிவாச்சாரியார் |
| மார்ச் | 10 | மாசி 27 | செவ்வாய் | திருவள்ளுவர் |
| மார்ச் | 22 | பங் 09 | ஞாயிறு | பரமகுரு சுவாமி |
| மார்ச் | 24 | பங் 11 | செவ்வாய் | குழந்தைவேற் சுவாமி |
| மார்ச் | 26 | பங் 13 | வியாழன் | செல்லப்பா சுவாமி |
| ஏப்ரல் | 01 | பங் 19 | புதன் | நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் |
| ஏப்ரல் | 01 | பங் 19 | புதன் | முருகேசு சுவாமி |
| ஏப்ரல் | 04 | பங் 22 | சனி | யோகர் சுவாமி |
| ஏப்ரல் | 18 | சித் 05 | சனி | திருநாவுக்கரசர் |
| ஏப்ரல் | 24 | சித் 11 | வெள்ளி | சிறுத்தொண்டர் |
| ஏப்ரல் | 26 | சித் 13 | ஞாயிறு | மங்கையற்கரசியார் |

*முயற்சி கானல் நீர் அல்ல; அது வெற்றி என்கிற ஜீவநதிக்கு அழைத்துச் செல்லும்.*

# திருவிளையாடற் புராண வசனம்

(ஆறாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்

சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரைத் திருக் கல்யாணஞ் செய்தபின், தேவர்கள் முனிவர்கள் அரசர்கள் முதலிய யாவரையும் நோக்கி, "போசனஞ் செய்ய வாருங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவர்கள் விரைந்து சென்று, பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, தங்கள் தங்கள் நியமத்தை முடித்துக்கொண்டு வந்தார்கள். வியாக்கிரபாத மகாமுனிவரும் பதஞ்சலி மகா முனிவரும் எம்பெருமானை வணங்கி நின்று, "பரம கருணாநிதியே! கனகசபையிலே நடக்கின்ற உம்முடைய திருநடனத்தைத் தரிசனஞ் செய்து உண்பது அடியேங்களுக்கு நியமம்" என்றார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "உலகமே வடிவமாகவுடைய விராட்புருடனுக்குச் சிதம்பரம் இருதயத்தானம்; இம் மதுரை துவாத சாந்தத் தானம்; ஆதலால் சிதம்பரத்தினும் மதுரையே மிக மேலாயது. இங்கே நாம் செய்யும் நிருத்தம் மிக முக்கியமாயும் அற்புதமாயும் இருக்கும்; அதுபோக மோஷங்களையும் இட்ட சித்திகளையும் கொடுக்கும். அந் நிருத்தத்தை இங்கே உங்களுக்கு காண்பிப்போம்" என்றருளிச் செய்தார். முனிவர்கள் சிவபெருமானை அஞ்சலி செய்து, "சீவன் முத்திபுரேசராகிய கருணாகரரே! விசுவரூபியாகிய பிரமாவுக்கு புண்டரீக புரமாகிய சிதம்பரம் இருதயக்கமலமென்றும் இம் மதுரை துவாத சாந்தமென்றும் அருளிச் செய்தீர். திருக்கைலாசம் முதலிய மற்றைத் தலங்கள் எவ்வெவ் அங்கங்கள்? அருளிச் செய்க" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சோமசுந்தரக் கடவுள் முனிவர்களை நோக்கி, "நீங்கள் கேட்டது உயிர்களுக்கெல்லாம் இதந் தருவது; ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் சொல்வோம்; கேளுங்கள்; பிரமாண்டம் பிரமாவின் சரீரம். கீழேழுலகமும் அரைக்குக் கீழ்ப் பட்டனவாகிய காற் பெருவிரல், புறவடி, பரடு, கணைக் கால், முழந்தாள், தொடை நடு, தொடைமூலம் என்பவைகளாம். மேலேழுலகமும் அரைக்கு மேற்பட்டனவாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, பிரமரந்திரம் என்பவைகளாம். சர்வ லோகங்களிலும் உள்ள நம் உடைய இலிங்கங்கள் பக்தர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு மூலாதாரமாகிய இப் பூலோகத்திலே நமது இச்சையினாலே எந் நாளும் சாந்நித்தியமாயிருக்கும். குதத்துக்கும் இலிங்கத்திற்கும் நடுத்தானமாகிய மூலாதாரம் கமலாயமாகிய திருவாரூர்; அங்கே நாம் தியாகராசரெனப் பெயர் பெறுவோம். இலிங்கத்தானமாகிய சுவாதிட்டானம் திருவானைக்கா; அங்கே நாம் சம்புநாதரெனப் பெயர் பெறுவோம். நாபித் தானமாகிய மணிபூரகம் அருணாசலம்; அங்கே நாம் அருணாசலேசுரரெனப் பெயர் பெறுவோம். இருதயத்தானமாகிய அநாகதம் சிதம்பரம்; அங்கே நாம் சபாபதியெனப் பெயர் பெறுவோம். கண்டத்தானமாகிய விசுத்தி தஷிண கைலாசமாகிய திருக்காளத்தி;

*உன்னைத் தாழ்த்திப் பேசும்போது நீ அமைதியாய் இருத்தல் பெரிய சாதனையாகும்.*

அங்கே நாம் காளத்தீசுவரரெனப் பெயர் பெறு வோம். புருவ மத்திய தானமாகிய ஆஞ்ஞை காசி; அங்கே நாம் விசுவநாதரெனப் பெயர் பெறுவோம். பிரமரந்திரம் கைலாசம்; அங்கே நாம் ஸ்ரீ கண்டபரமேசுரரெனப் பெயர் பெறு வோம். ஆதாரதீதமாகிய துவாத சாந்தம் இம் மதுரை; இங்கே நாம் சுந்தரேசரெனப் பெயர் பெறுவோம். நம்முடைய பக்தர்கள் தங்கள் தங்கள் சரீரத்திலே மூலாதாரம் முதலிய தானங்களிலே அவ்வவ் இலிங்கங்களைப் பாவிக்கக் கடவர்கள். இத் துவாதசாந்தபுரம் மற்றைத் தானங்களெல்லாவற்றிற்கும் முன்னே தோன்றியது. ஆதலால் இதுவே எல்லாத் தலங்களிலும் உயர்ந்தது. நம்முடைய மூர்த்திகளுள்ளே தாண்டவமூர்த்தி மேலாயது. ஆதாரங்களெல்லாவற்றினும் மேலாகிய இந்தத் துவாத சாந்தத்திலுள்ள தாண்டவ மூர்த்தி மிக மேலாயது. இத்துணைப் பெருஞ் சிறப்பின தாகிய இந்தத் தலத்திலே நம்முடைய தாண்டவத்தை உங்களுக்கு விரைவிலே காண்பிப்போம்" என்றருளிச் செய்து, முனிவர் களோடு திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி னார். அங்கே அவருடைய சங்கற்ப மாத்திரத் தினாலே விமானத்திற்குக் கீழ்த் திசையிலே ஒரு வெள்ளியம்பலமும் அதனிடத்தே ஒரு மாணிக்க வேதிகையும் தோன்றின.

சிவபெருமான் அவ்வேதிகையின் மேலே ஞானப் பேரொளி வடிவாய்த் தோன்றி, பூத கணங்கள் மொந்தையும் தண்ணுமையும் முழக்க, திருநந்திதேவர் முழவம் தாக்க, விட்டுணு இடக்கை யார்க்க, தும்புரு நாரதர் இசைபாட, பஞ்ச துந்துபிகள் ஒலிக்க, சரசு வதி சுதிகூட்ட, பிரமா யாழ்கொண்டு சாமகீதம் பாட, தேவர்கள் கற்பகப் பூமாரி பெய்ய, முயலகன் மேலே வலப் பாதத்தை வைத்து இடப் பாதத்தைத் தூக்கிச் சற்றே வளைத்து, பத்துத் திருக்கரங்களும், வலக்கரம் ஐந்தினுள் அபய ஹஸ்தத்திலே சூலமும், மற்றவை களிலே டமருகம், பாணம், வாள், மழு என்பவைகளும், இடக்கரம் ஐந்தினுள் வரத ஹஸ்தத்திலே பாம்பும், மற்றவைகளிலே அக்கினி, வில், கேடகம், தண்டு என்பவை களும், திருநீலகண்டமும், சங்கக் குண்டலம் அணிந்த திருச்செவியும், சந்திர கலையையும் கங்கையையுந் தரித்த செஞ்சடையும் திரு வெண்ணீறணிந்த திருமேனியும், மூன்று திருக் கண்களும், உமாதேவியார் ஒதுங்கி நிற்கும் பக்கமும் இறைவன்மேல் வைத்த திருநோக்க மும், திருநகையும் விளங்க நிருத்தஞ் செய் தருளினார்.



உடனே வியாக்கிரபாத மகாமுனி வரும் பதஞ்சலி மகாமுனிவரும் சிரசிலே கை குவித்தார்கள்; திருவடியிலே அடியற்ற மரம் போல விழுந்தார்கள்; வேதங்களினாலே துதித்தார்கள். பரமானந்த சமுத்திரத்திலே

*மரணம் என்பது கடன். அந்தக் கடனை எல்லோரும் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.*

மூழ்கினார்கள். இருடிகள், தேவர்கள் முதலிய யாவரும் நிருத்த தரிசனஞ் செய்து, வணங்கி, அன்புருவமானார்கள். திருக்கல்யாணம் தரிசிக்க வந்த மனிதர்களுமன்றோ பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்களினாலே திருநிருத்தந் தரிசிக்கப் பெற்றார்கள். பதஞ்சலி மகாமுனிவர் அளவில்லாத சிவானந்தம் ஊறி, மனசிலே நிரம்பி மேலும் வழிவதுபோல மார்பில் அணியப்பட்ட திருவெண்ணீறு கரையும் வண்ணம் பொழியாநின்ற, கண்ணீருண் மூழ்கி, இரு கைகளுங் குவித்து நின்று, சிவபெருமானைப் பாடுவாராயினார்:-

பரா பர முதலே போற்றி
பத்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகி வேறாய்
நின்றதற் பரனே போற்றி

கராசல வுரியாய் போற்றி
கனகவம் பலத்து ளாடு
நிராமய பரமா னந்த
நிருத்தனே போற்றி போற்றி

ஒன்றாகி யைந்தா யையைந்
துருவாகி வருவாய் போற்றி
இன்றாகிச் சென்ற நாளா
யெதிர் நாளா யெழுவாய் போற்றி
நன்றாகித் தீய தாகி
நடுவாகி முடிவாய் மன்றுள்
நின்றாடும் பரமா னந்த
நிருத்தனே போற்றி போற்றி

அடியரேம் பொருட்டு வெள்ளி
யம்பலத் தாடல் போற்றி
பொடியணி தடந்தோள் போற்றி
புரிசடை மகுடம் போற்றி
கடியவிழ் மலர்மென் கூந்தற்
கயல்விழி பாகம் போற்றி
நெடியநற் பரமா னந்த
நிருத்தனே போற்றி போற்றி.

இவ்வாறு துதி செய்து, பதஞ்சலி மகாமுனிவர் பரவசராய்த் தண்டம் போல விழுந்தார். சிவபெருமான், "எழும், எழும்" என்று திருவாய் மலர்ந்தருள, பதஞ்சலி மகாமுனிவர் எழுந்து, அஞ்சலி செய்துகொண்டு நின்றார். பின்பு சிவபெருமான் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் இருவரையும் நோக்கி, "நீங்கள் விரும்பியது யாது? சொல்லுங்கள் என்றருளிச் செய்ய,

*கோபம் அன்பை அழிக்கும், செருக்கு அடக்கத்தை அழிக்கும்.*

அவர்கள் வணங்கிக் கைகுவித்து நின்று, "பரம கருணாநிதியாகிய சுவாமீ! பக்குவான் மாக்களுக்குப் பாசம் நீங்கும் வண்ணம் திரு நிருத்தம் செய்தருளும் இத் திருக்கோலத் தோடு எந்நாளும் நின்றருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அதற்குச் சிவ பெருமான், "இப் பாண்டி நாடு செய்த பெருந் தவத்தினாலே நீங்கள் கேட்ட வரம் தந்தோம்!" என்றருளிச் செய்தார். பதஞ்சலி மகாமுனிவர் வணங்கி நின்று, "எம்பெருமானே! இந்தப் பரமானந்தத் தாண்டவத்தைத் தரிசித்தவர்கள் யாரும் மீளப் பூமியில் வந்து பிறவாது முத்தி பெற்றுய்யும் பொருட்டு அருள் செய்க" என்றார். சிவபெருமானும் அதற்கு இசைந்தருளினார். சிவகணர்கள் ஆரவாரித்துக் கைகோத்தாடி னார்கள். தேவர்கள் கற்பகப் பூமாரி பெய்தார் கள். முனிவர்கள் உரோமஞ் சிலிர்ப்ப, ஆனந்த அருவி பொழிய, அன்புருவமாகி, வியாக்கிர பாதர் பதஞ்சலி என்னும் இருவரையும் விழுங்கு வோர் போலப் பார்த்துத் தழுவிக் கொண்டார்கள்.

மார்கழி மாசத்துத் திருவாதிரை நஷத்திரந் தொடங்கி, மேல் வரும் மார்கழி மாசத்துத் திருவாதிரை நஷத்திரம் வரையும் பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, அத் திருநிருத்தத்தைத் தரிசித்து, அங்கிருந்து கொண்டு பஞ்சாஷரத்திலே நூற்றெட்டுருச் செபிப்பவர்கள் தாம் தாம் நினைந்த வரங் களைப் பெறுவார்கள்.

## அட்சதையின் மகத்துவம்

பொதுவாக எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அட்சதை இன்றி நடைபெறுவது கிடையாது. அட்சதை லட்சுமிகடாட்சம் நிறைந்த பொருளாகவே ஆன்மிகத்தில் போற்றப்படுகிறது.

முனை முறியாத அரிசிதான் அட்சதை, நல்ல மங்களங்களை நல்குவது மஞ்சள். இந்த இரண்டையும் இணைப்பது பசு நெய், இது கோமாதாவின் திரவியம்.

பூமிக்கு மேல் விளையும் பொருள் அரிசி, பூமிக்குக் கீழ் விளையும் பொருள் மஞ்சள். இந்த இரண்டையும் இணைக்க தூய பசு நெய் தேவை.

அரிசியும் மஞ்சளுமான மணமக்களை இணைக்கும் பசு நெய்யாகப் பாசமிகு உற்றார் உறவினர்கள் உள்ளனர் இதுவே தத்துவம்.

ஆகவே உற்றார் உறவினர்கள், பெரியோர், நண்பர்கள் என அனைவரும் மணமக்களை வாழ்த்தும்பொழுது, மணமேடைக்கு வந்து ஒருவர் பின் ஒருவராக மணமக்களை அட்சதை தூவி ஆசி வழங்குவதே சரியான முறை.

சந்திரனின் சக்தி அதிகம் அமைந்த அரிசியும், குருபகவானின் சக்தி அதிகம் அமைந்த மஞ்சளும், மஹாலட்சுமி பரிபூரண சக்தி கொண்ட நெய்யினை கலந்து, உற்றார் உறவினர்கள், பெரியோர், நண்பர்கள் என அனைவரும் அவர்களை ஆசி வழங்கும்பொழுது அவர்களின் வாழ்வு சிறப்பாக அமையும் என்பது சாஸ்திர உண்மை.

திருமணம், தொழில்கள் மற்றும் சுபகாரியங்கள் அனைத்திலும், மஞ்சள் அட்சதை மூலம் பெரியோர்கள் ஆசீர்வதித்தால், அதனால் வெற்றி பெருகும். மஹாலட்சுமிகடாட்சம் கிடைக்கும்.

வயதில் மூத்தவர்கள் வீடுகளுக்குச் சென்று திரும்பும்போது அவர்கள் கையால் அட்சதையால் ஆசிபெற்று வருவது மிகுந்த பலனைத் தரும்.

*பக்தி என்பது தனிச்சொத்து, கடவுள் என்பது பொதுச் சொத்து.*

# அற்புதம் அதிசயம் ஆச்சரியம் நிறைந்த இணுவில் திருமஞ்சம்

– **திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

உலகிலே எங்குமே காணாத அதிசயமான மஞ்சம், இணுவிலிலே அழகொழுகும்படி காட்சி தந்து, தைப்பூசத் திருவிழாவின்போது திருவருள் பாலிக்கிறது.

கந்தபுராண கலாசாரம் மருவிய இணுவில் கந்தசுவாமி கோவிலின் எம்பெருமானாகிய முருகப்பெருமானின் கிருபாகடாட்சப் பேறதனால், பெரிய சந்நியாசியாரின் வடிவம் தாங்கி, அற்புதமாம் எழில்கொஞ்சும் திருமஞ்சம் உருவாக்கம் பெற்று, என்றும் பேரொளிப் பிளம்பு விளங்கும் படியாக முருகன் மஞ்ச உலா வருகின்றான். மாற்றந் தருகின்றான். மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி சமைக்கின்றான். வருடாந்தம் இரு தடவைகள் திருமஞ்ச தரிசனம் அடியார்களுக்குக் கிடைக்கிறது.



காரைக்காலில் மாரியம்பாளின் திருவமுது உண்ணும் பாக்கியம் இப்பூவுலகில் நிகழ வேண்டிய தேவையினால், அரசோலையில் கந்தர் தெய்வானை செய்த தவப்பயனாகி 1860ஆம் ஆண்டு சுப்பிரமணியம் என்ற பெயரோடு அவதரித்து, இறை வாக்கிற்கமைய பெண்ணம் பெரிய மஞ்சத்தினை உருவாக்கி, இணுவிலுக்கு ஆன்ம வரம் சேர்த்தார். சுப்பிரமணியம் என்ற நாமம் மாரியம்பாளின் அனுகூல மான்மியத்தினால் பெரிய சந்நியாசியாராகி தவக்கோலமேயான தவப்பயன் பெற்றார்.

திருவருள் முன்னிற்க, அவர் கைபட்டதெல்லாம் மருந்தெனச் சித்திபெற்றது. நோய் நீங்கியது. விஷம் அகன்றது. பகை விலகியது. பில்லி, சூனியம் பறந்தோடியது. இத்தகைய மகிமைகளால் தொட்டதெல்லாம் துலங்கியது. காரைக்காலை அருள் சொரியும் சோலை வனமாக்கி, நறுங் கனிகளின் தாயகமாக்கி, பூச்சொரியுமாறு மூலிகைத் தோட்டங்களாக்கி, சூழவர நன்னீர் கிணறுகளாக்கி, ஆவினக் கூட்டங்கள் ஒன்று சேரும்படியாக மாட்டுத் தொழுவங்களாக்கி, பசுக்களையெல்லாம் பரமனின் திருப்பெருங் கருணைக்காக அரவணைத்து,

*சுறுசுறுப்பு எல்லாக் காரியங்களையும் எளிதாக்கிவிடும் சாதனம்.*

கோமாதாக்களைக் குலமாதாக்களாக்கி, அவியல், படையல், ஆடல், பாடல் தொண்டினைச் சிவப் பெருங்கருணைக்காய் அர்ப்பணித்து, உடல் பொருள் ஆவி உள்ளது அனைத்தையுமே இறைவனிடம் ஒப்படைத்தார். இதன் பேறாய் இறைவனும் இவர் மனதில் விருப்போடு குடிகொண்டார்.

ஒருநாள் இணுவில் கந்தசுவாமியாரோடு ஒன்றித்து வணங்கிய பின்னர் நித்திரையில் மூழ்கினார். முருகப்பெருமான் சந்நியாசியாரோடு திருவிளையாடல் புரியத் திருவுளம் கொண்டார். நடுநிசி நெருங்கிய போது கனவிலே தோன்றி,

"பக்தனே! உனது பக்தியை மெச்சினோம். இந்த ஆலயப் பெருவீதியிலே நான் உலா வந்து பக்தர்களின் குறை நிறைகளைக் கேட்டறிவதற்காக, பேறுவக்கும் பெரு மஞ்சமதை அடியார்கள் வியக்கும்படி அற்புத மரச் சிற்பங்களோடு உருவாக்கி என்னை எழுந்தருளச் செய்வாயாக. இதற்கு ஆகவேண்டிய காரிய உபகாரங்களைப் பற்றி யோசிக்காதே. எதற்கும் உன்னை நானே கொண்டு இயக்குவேன். விழித்தெழு! வேலையைத் தொடங்கு!" என்று முருகப்பெருமான் சந்நியாசியாரை அரவணைத்து ஆட்கொண்டார்.

முருகனை நேரிலே கண்டு ஆனந்தப் பேறு அடைந்த அதிசய வரமதால், திருமஞ்சத் தொண்டினை விடிந்ததும், ஆனந்தத் தாண்டவம் ஆடியும் பாடியும் ஆரம்பித்தார்.

முருகனோடு தாம் வாழவும் முருகன் குடியிருந்து கோலோச்சவும் வசதியாக இணுவில் மஞ்சத்தடியில் திருமஞ்சத் திருப்பணி 1902இல் ஆரம்பிக்கப்பட்டது. பக்த அடியார்கள் மஞ்சம் செய்கின்ற செய்தியறிந்ததும் மரங்களையும், காணிக்கைகளையும், தானங்களையும் மஞ்சத்தடியிலே குவித்தனர். வைரமரம், பால்மரம், சிற்பமரம், சிங்காரமரம் என வகை வகையாகப் பிரிக்கப்பட்டு அரியப்பட்டன. முருகப்பெருமானே பெரிய சந்நியாசியார் வடிவந்தாங்கி இந்தியாவிலிருந்து சிற்பிகளைக் கூட்டிவந்த அதிசயம் ஒப்பேறவே, மஞ்சத்தடியில் சுபநேரத்தில் மஞ்சத்தின் அடிப்பாகம் உருவாக்கப்பட்டது. இதனாலேயே மஞ்சத்தடி என்ற பெயர் வரலாறாயிற்று.

மேல் பாகங்கள் கந்தசாமி கோவிலின் முன்பாகப் பெருங் கொட்டகை போடப்பட்டு இருக்கைகளும் விமான பாகங்களும் ஒப்பேற்றப்பட்டன. புராண இதிகாச அற்புத ஆலாபனைகளும், சரியை கிரியை யோக ஞான சுபீட்சங்களும், சிவனுமை சம்பத்துக்களும், ஆன்மாவின் பேரானந்த மோட்ச வழிகாட்டற் பேறுகளும், நில்லாதனவற்றை நிலையென்று உணராத பான்மை தரு பாவ விமோசன திருவடிவங்களும், கருவினுருவாகிக் குருவருள் கிடைக்கின்ற திருநிறை விளங்கும் திருவிளையாடற் காட்சிகள், ஆறுபடை வீடுகளினூடாக ஆன்மாக்களை ஆற்றுப்படுத்தும் காட்சி, வன விலங்குகளின் ஞானநிலை மோகனங்களாகும் விந்தை, மற்றும் கற்பனை வினோதங்கள், பக்திநயம், நனிசொட்டும் சக்திமிகு சொற்பனங்கள், தேவ தரிசன சாம்ராஜ்ஜியங்கள், தேவர்களின் வாழ்த்துக்களாகப் பூமாரி பொழிகின்ற வான்மழை வரப்பிரசாதங்கள், இந்திரலோகம் என எண்ணி வியக்கும் மனோதர்ம மாண்புகள், கொக்கரோக்கோவெனக் கூவி இப் பூவுலகின்கண் விடிவுக்காய் வடிவுதரும் சேவலின் உயிர்ப்பான படைப்பு என அண்ட சராசரங்களின் அத்தனை நிகழ்வுகளையும் பிரம்மரிஷியானவர் பரிகள் பூட்டி பாரினை வழிகாட்டுவனவாகச் சித்தரிக்கும் பாங்கினில் பெருமஞ்சம் அசைந்து ஆடிப் பவனி வரும் போது அதில் பூட்டப்பெற்ற 1008 மணிகளும்

*ஊக்கம் இல்லாமல் எந்த ஒரு பெரிய காரியமும் சாதிக்கப்பட்டது கிடையாது.*

நாம சங்கீர்த்தனங்கள் பாடிவரும். முதலாவது வெள்ளோட்டமானது 1906இல் முருக நாம மும், அரோகரா ஒலியும் வானோங்கித் தேன் சொட்ட, ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வ யானை சமேதரராய் வேத மந்திர திருமுறை பாராயண பஜனை சங்கீத நடன மரபார்ந்த முறைகளோடு பவனியொளி சந்திர தாரகை தீப்பந்தங்களோடு பக்திமயமாக நடைபெற்றது.

தைப்பூச நன்னாளில் இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் மாலைநேர மஞ்சப் பவனி கண்டு முருக வரங்களை நெஞ்சில் நிறைக்க குடும்ப சகிதம் வருகை தாருங்கள்.

## எங்கே தேட வேண்டும்

ஒரு சமயம் வியாபாரி ஒருவர் அதிக பணத்துடன் யாழில் இருந்து கொழும்பு நோக்கி ரயிலில் சென்றார். முன் இருக்கையில் இருந்த ஒருவன் இவர் கொள்வனவிற்காக கொழும்பு செல்வதால் மிகுந்த பணம் வைத்திருப்பார் என அவதானித்தபடியே இருந்தான்.

ஒருமுறை வியாபாரி இயற்கைக் கடமைக்காக இருக்கையை விட்டு எழுந்து சென்றார். முன் இருந்தவர் உடனடியாக பதற்றத்துடன் அவரது கைப்பை மற்றும் உடமைகளைப் பரிசோதித்தான். ஒன்றும் கிடைக்கவில்லை. மீண்டும் வியாபாரி கண் அயர்ந்தபோது முழுமூச்சுடன் தேடினான். ஒன்றும் கிடைக்கவில்லை. கொழும்பை அண்டியபோது வியாபாரி தன்னிடமுள்ள பணத்தை எடுத்து எண்ணிச் சரிபார்த்தார். அப்போது முன் இருந்தவர் கோபத்துடன் இப்பணத்தை எங்கு வைத்திருந்தாய். நான் தேடியும் கிடைக்கவில்லை என்றான். அப்போது வியாபாரி "என் பணத்தை நீ அபகரிக்க முயலுவாய் என்று தெரிந்துதான் பணத்தை உன் தலையணையின் அடியில் வைத்துவிட்டேன். உன் பொருளை நீ சோதிக்கமாட்டாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும்" என்று பதில் சொன்னார்.

கடவுள் நம்முடைய இதயத்தில் இருக்கிறார். வெளியில் இல்லை. புறத்தில் கடவுளை தேடுவது தவறான வழியாகும். உள்முகமாகச் சென்றால்த்தான் கடவுள் நம்மிடம் இருப்பதை அறிவோம்.

பகவான் கூறுகின்றார், ஒவ்வொரு ஜீவனின் இதயத்திலும் பரமாத்மா இருக்கின்றார். அவர் அணுவுக்கு அணுவாயும் பிரம்மாண்டத்திற்கு மேல் பிரம்மாண்டமாகவும் சிறியவை எல்லாவற்றிலும் சிறிதாகவும் பெரியவை அனைத்திலும் பெரிதாகவும் இருக்கின்றார். அதை உணர்ந்த ஞானி ஒருபொழுதும் துன்புறமாட்டான். எறும்பில் இருந்து யானை வரை அனைத்து ஜீவராசிகளிலும் உறைவது ஆத்மாவே. இம் முழு உலகையும் சூழ்ந்தும் தாங்கியும் நிற்பது இந்த சூட்சுமமான ஆத்மாவே.

எனவே எம் மனதை உள்முகமாகத் திருப்பி "என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்" என்ற சிவயோக சுவாமிகள் வாக்கைப் பின்பற்றி விடாமுயற்சியோடு கூடிய பயிற்சியால் மனதை வசப்படுத்தி நிலையான ஆனந்தத்தை அனுபவித்து வெளியுலக பொருட்களில் இருந்து புலன்களை பிரித்து உறுதி, நேர்மையைக் கைக்கொண்டு சஞ்சலமற்ற மன நிலையை ஏற்படுத்தி சத்தியம், சாந்தம் எனும் இரு சரக்கை சமநிலை எனும் தேனில் குழைத்து பத்தியம் எனப் பருகினால் பாரினில் உயர்வெய்தலாம் என்ற வாக்கிற்கு ஏற்ப ஆன்ம ஈடேற்றம் காண்போமாக.

*அறிவின் தந்தை ஞாபகசக்தி, அதன் தாய் சிந்தனை.*

# வழித்துணை 32

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பாலோடு நீரையும் பக்குவமாய் கலந்துவைத்தால்
நீர் விடுத்துப் பால்குடிக்கும் அன்னமென்று நாமுரைப்போம்
நாம்மட்டும் என்னவாம் பால்விடுத்தோ நீர்குடிப்போம்
உம்முக்குள் இருப்பதை நீரேன் என்னுக்குள் தேடுகின்றீர்.

02 பிறர்துயரை தன்துயராய் எண்ணுகின்ற தன்மையற்கு
பிறிதோர் துயர்தன்னைப் பின்னிறைவன் கொடுக்கமாட்டான்
துயர்சுமக்கும் பலன் அவற்கு அத்தோடு முடிந்ததனால்
இன்பமே இனியவற்கு துன்பமென்ப தில்லையாம்.

03 மண்ணுக்கு மழைபசளை மரத்திற்கு இலைபசளை
கண்ணுக்கு நீர்பசளை கருத்திற்கு உருப்பசளை
பண்ணுக்கு இசைபசளை பாலுக்கு இரைபசளை
உனக்குப் பசளையிங்கு உன்சொல்லோடு செயலுமேயாம்.

04 ஏமாற்றி விட்டோம்நாம் பிறரையென்று எண்ணிடுதல்
தாமாகத் தவறொன்றைத் தாமேற்கும் தன்மையதாம்
நாமாக உணர்ந்ததற்கு பரிகாரம் தேடாவிடில்
ஏமாற்றம் அவற்கல்ல எமக்கேதான் என்றறிவீர்.

05 தவறென்று பிறர்கூறும் தன்மையொன்றை ஆராய்ந்தால்
அவர்பக்கம் ஆதாயம் இருப்பதையே நீருணர்வீர்
எவரொருவர் தான்நலியத் தவறொன்றை இழைக்கிறாரோ
அதுவேதான் தவறாகும் மற்றவைகள் பாசாங்காம்.

06 உதவிக்கு வருகின்றோம் என்றுசிலர் வந்துங்கள்
பதவிக்குப் பங்கங்கள் புரிந்திட்டும் சென்றிடலாம்
ஆதலினால் உதவிக்கு ஆட்சேர்க்கும் விடயத்தில்
மிதமாக நடவாதீர் நிதானத்தைக் கடைப்பிடிப்பீர்.

*கலைகளில் ஈடுபாடு உடையவன் கவலைகளை மறக்கின்றான்.*

07 மாடிமனைகட்டி மகிழ்ந்திருக்க முன்னர்நீர்
நாடியே நல்லோர்தம் மனத்திருக்க முயற்சிப்பீர்
தேடியே அவர்கள்தம் மனத்திருக்கா மனையிருத்தல்
கோடி இருந்தாலும் குப்பைமேட்டில் இருத்தலாம்.

08 வெற்றி வெற்றியென்று வேட்கை மிகக்கொண்டு
பற்றினொடு பாரிற்பல வென்றிடுதல் வெற்றியன்று
சுற்றியுள்ள மாந்தர்தம் மனங்களைநீர் வென்றிடுவீர்
வெற்றியென்ப ததுவேயாம் மற்றெல்லாம் தோல்வியேயாம்.

09 மதிப்போடு மரியாதை வேண்டுமென்று எண்ணுபவர்
துதித்துத் தூய்மையோடு பிறர்தம்மை மதிக்கவேண்டும்
மிதித்துப் பலதுன்பம் மற்றையோற்கு விளைவிப்போர்
எதிர்ப்பினையே மதிப்பென்று எண்ணிப்பின் இகழ்வுறுவர்.

10 முயற்சியால் சிலவற்றை நீங்களும் செய்யவேண்டும்
பிறர் முயற்சியினை முற்றாக அனுபவித்தல் பாவமாகும்
பாவத்தின் சம்பளங்கள் மறுமையிலே மட்டுமன்று
இம்மையின் இறுதிகளும் அவ்வவற்றின் பாலதேயாம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
ச. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*கட்டுப்பாட்டுடன் வாழ்பவன் கௌரவமாய் வாழ்வான்.*

# அன்று ஔவைப்பிராட்டியார் மானுடப்பிறவி அரிது என்று கூறியது இன்று உண்மையில் உண்மை

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

ஔவையார் இந்தியாவில் சடையப்ப வள்ளலால் எடுத்து வளர்க்கப்பட்டார். ஞானக் குழந்தையாகப் பிறந்த ஔவையார் ஞான அறிவினால் பாடும் திறன் பெற்று புலவராக விளங்கினார். அரசர்களால் மதிக்கப்பட்டு அரச சபையில் தனிப்பெருமையுடன் விளங்கிய ஔவையார் "மானுடர் ஆதல் அரிது, அதிலும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது. அதிலும் அரிது கல்வியும் ஞானமும் பெறுதல் அரிதிலும் அரிது" என்று ஞானக் கண்ணால் அருள்மொழி கூறினார். அன்று அவர் கூறிய உண்மையை இன்று விஞ்ஞானம் செறிந்த உலகில் வாழும் மக்கள் முழுக்க முழுக்க ஏற்றுள்ளனர். இன்று விஞ்ஞானத்தின் கருவிகளால் வீட்டில் இருந்தவாறே உலகத்தை அறியலாம். வெகு தொலைவில் உள்ளவர்களுடன் நொடிப் பொழுதில் கதைக்கவும், அவர்கள் உருவங்களைப் பார்க்கவும் முடிகின்றது. மானுடர்களாகிய விஞ்ஞானிகளால் நாடோறும் அரிய பல விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மானுட சமுதாயத்திற்குக் கிடைத்து வருகிறது. ஔவைப் பிராட்டியின் தீர்க்க தரிசனம் மானுடப் பிறவி அரிது அரிது என்று கூறியதை மக்கள் எண்ணிப் பார்க்கிறார்கள்.

ஔவை வாழ்ந்த கால மக்கள் கடவுள் நம்பிக்கையைக் கொண்டே கருமம் ஆற்றினார்கள். மாட்டுவண்டி, குதிரைவண்டி போக்குவரத்துச் சாதனங்களாக விளங்கின. மோட்டார் வண்டி வாகனங்களோ, கார், பஸ், புகையிரதம் இல்லாத காலம். ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்வதற்கு அதிக நேரம் தேவைப்பட்டது. தொலைத் தொடர்புகள் இன்றி நேரில் சென்று கதைக்கும் நிலை இருந்தது. இன்று விஞ்ஞான வளர்ச்சியால் உலகம் கையில் அடங்கிவிட்டது. விமானம் மூலம் வெகு விரைவில் தூர இடங்களை மக்கள் இன்று குறுகிய நேரத்தில் சென்றடைகின்றனர். தேவையான பொருள்களையோ முக்கிய விடயங்களோ நொடிப்பொழுதில் பேசிப் பெற்றுக்கொள்கின்றனர். இன்று விஞ்ஞானம் எங்கும் எவையிலும் செறிந்து, வியத்தகு செயல் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இந்நிலை வருமென்பதை அன்று ஞானக் குழந்தையாகப் பிறந்த ஔவையார் மானுடப் பிறவி அரிது அரிது என்று கூறிய தீர்க்க தரிசனத்தை இன்று மக்கள் நினைவு கூருகின்றனர்.

அன்று சைவசமயத்தின் உண்மைப் பொருளை உணர்த்த, திருஞானசம்பந்தர் இறைவனால் படைக்கப்பட்டு மூன்று வயதில் தோணியப்பர் கோவிலில் தோடுடைய செவியன் என்னும் முதலடியுடைய தேவாரத்தைப் பாடி சைவத்தின் அருமையையும் பெருமையையும் உலகுக்கு அறிய வைத்தார். ஞானக் குழந்தையாகப் பிறந்த ஔவையாரை பிறந்த பொழுது விட்டுப் பிரியத் தயங்கிய அன்னை

*நேர்மையான மனச்சாட்சி ஒரு மென்மையான தலையணை.*

ஆதிக்கு "கல்லுனுட் தேரைக்கும் கருப்பை அண்டத்துயிர்க்கும் புல்லுணர்வு அளித்துக் காக்கும் புனிதன் எம்மையும் கைவிடுவானோ? என பிறந்தவுடன் கூறி அன்னையை கலங்க விடாது வழியனுப்பிய தன்மை போற்றற்குரி யது. பகவன் ஆதியைக் கைப்பிடிக்கும்போது கேட்டதற்கிணங்கவே பெறும் குழந்தையை பெற்ற இடத்தில் விட்டு, உடன் வருவாயாகில் என்னுடன் வா என்று கேட்டுக்கொண்டான். அதன்படி ஔவையாரைப் பெற்ற இடத்தில் விட்டு கணவன் பகவனுடன் சென்றாள் ஆதி என்று வரலாறு கூறுகின்றது. இப்படி ஔவை, உப்பை, உறுவை, வள்ளி, திருவள்ளுவர், அதிகமான், கபிலன் என்னும் பிள்ளைகளை யும் பெற்ற இடங்களில் விட்டுச் செல்ல, பிறரால் எடுத்து வளர்க்கப்பட்டனர். திருவள்ளு வர் இயற்றிய திருக்குறள் அரங்கேற்ற முடி யாதிருந்தபோது ஔவையாரின் தூண்டுதலில் சங்கப் பலகையில் வைத்து ஏற்றுக்கொள் ளப்பட்டது. ஔவையார் நெல்லிக்கனியைத் தான் உண்ணாது தம்பியான கபிலன் பல் ஆண்டு வாழ வேண்டுமென்று எண்ணி உண் ணக்கொடுத்த பெருந்தன்மை ஔவையாரிடம் இருந்தது. தான்மட்டும் வாழாது பிறரையும் வாழ்விக்க வேண்டுமென்ற மனப்பாங்கு ஔவை யாரிடம் இருந்தது. மானுடப் பிறவி அரிது என்று எண்ணிய ஔவையார் மற்றவர்களுக்கும் உதவி செய்யவேண்டும் என்ற பெருநோக்குடன் வாழ்ந்து, மானிடப் பிறவி அரிது என்ற உண் மையை உலகிற்கு வெளிப்படுத்தினார்.

ஒருகால் ஔவையார் நாவல் மரத் தின் கீழ் களைப்பாற நின்றவிடத்து முருகப் பெருமான் சிறு பையன்போல் நாவல் மரத்தில் நின்று சுட்டபழம் வேண்டுமோ சுடாத பழம் வேண்டுமோ என வினவ ஔவை திகில் அடைந்து, சுட்டபழம் போடு எனக்கூற கனிந்த பழங்களை நிலத்தில் போட்டான். கனிந்த பழங்களில் மணல் ஒட்டியிருக்க ஔவை மணலைப் போக்க வாயால் ஊதினார். அப் பொழுது அப் பையன் பாட்டி நல்லாகச் சுடு கிறதோ ஊதிச் சாப்பிடு எனக் கூறினான். இதைக்கேட்டு ஔவையார் இது பையன் அல்ல முருகப்பெருமான் எனது செருக்கை அடக்கப் பையனாகத் தோன்றி திருவிளை யாடலைச் செய்தார் என்று உணர்ந்தார்.

மானுடப்பிறவி எடுத்த மானுடர்கள் இன்றும் மானுடப் பிறவி அரியது என்ற உண் மையை உணராது, விஞ்ஞான வாழ்க்கையில் உழன்று திரிகின்றனர். மானுடப் பிறவி அரி யது என்ற உண்மையை உணரவேண்டு மாயின், செல்வச்சந்நிதியான் ஆலயம் வாருங் கள். அவனைப் பலமுறை வலம் வாருங்கள். தலையாரக் கும்பிடுங்கள். அவன் விபூதியை உடம்பெங்கும் பூசுங்கள், மானுடப்பிறவி, அரிது என்ற உண்மையை மனம் உணர்ந்து விடும். மனம் உணர்ந்தால், நிம்மதியைப் பெற்று சுகவாழ்வு வாழ்வீர்கள். ஔவையின் வாக்கு எக்காலமும் பூமியில் நிலைத்திருக்கும் என்பது உண்மை.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

-வள்ளுவன் குறள்.

*நேரத்தைக் கண்ணிலும் பொன்னிலும் மேலாக மதி.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி | இளைப்பாறியோர் | 39000. 00 |
| மக்கள் வங்கி | யாழ் பிரதேச அலுவலகம் | 29000. 00 |
| மக்கள் வங்கி | யாழ் ஸ்ரான்லி வீதி | 41000. 00 |
| மக்கள் வங்கி | யாழ் பிரதான வீதி | 13000. 00 |
| மக்கள் வங்கி | யாழ் கன்னாதிட்டி | 8000. 00 |
| மக்கள் வங்கி | யாழ் பல்கலைக்கழகம் | 9000. 00 |
| மக்கள் வங்கி | சங்கானை | 14000. 00 |
| மக்கள் வங்கி | காங்கேசந்துறை | 8000. 00 |
| மக்கள் வங்கி | சாவகச்சேரி | 6250. 00 |
| மக்கள் வங்கி | கொடிகாமம் | 12000. 00 |
| மக்கள் வங்கி | அச்சுவேலி | 6000. 00 |
| மக்கள் வங்கி | வல்வெட்டித்துறை | 12000. 00 |
| மக்கள் வங்கி | பருத்தித்துறை | 7000. 00 |
| மக்கள் வங்கி | நெல்லியடி | 4000. 00 |
| மக்கள் வங்கி | பரந்தன் | 3000. 00 |
| மக்கள் வங்கி | வவுனியா பிரதேச அலுவலகம் | 10000. 00 |
| மக்கள் வங்கி | திருகோணமலை மாவட்டம் | 55500. 00 |
| ஏனையோர் | | 16000. 00 |
| சி. பத்மநாதன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திருமதி கீர்த்திகா சிவதீபன் | | 5000. 00 |
| கு. கோடீஸ்வரன் | திருகோணமலை | 15000. 00 |
| ப. பார்த்தீபன் | கொக்குவில் | 5000. 00 |
| அ. ஐங்கரன் | திருகோணமலை | 5000. 00 |
| க. மதிவதனன் | திருகோணமலை | 15000. 00 |
| S. துஷாந்தன் | திருகோணமலை | 10000. 00 |
| திருமதி கு. வையெந்தி | திருகோணமலை | 10000. 00 |
| திருமதி ஆனந்தி | திருகோணமலை | 10000. 00 |
| செல்வி வ. கனகசபை | மட்டக்களப்பு | 10000. 00 |
| ஹரிகரன் கௌதமி | நெல்லியடி | 10000. 00 |
| இ. தயாநிதி | கிளிநொச்சி | 1500. 00 |
| J. சந்திரப்பிரகாசம் | பருத்தித்துறை (கற்றல் செயற்பாட்டிற்காக) | 10000. 00 |
| சுந்தரம் பிரதேர்ஸ் | யாழ்ப்பாணம் | 20000. 00 |

*நோயினால் மெலிவதைக் காட்டிலும் நோன்பினால் மெலிவது நல்லது.*

| | | |
|---|---|---|
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 2000. 00 |
| திருமதி சு. விஜயகுமார் | கோப்பாய் | 10000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 8000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| M. வசந்தகுமார் குடும்பம் | பிரான்ஸ் | 5000. 00 |
| பொன்னம்பலம் கஜேந்திரன் | மல்லாகம் | 1மூடை அரிசி |
| Dr. சுதோகுமார் | கரவெட்டி | 1000. 00 |
| இ. ஜெயராஜா (சுப்பகூஸ்) | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சுரேஷ் குடும்பம் | சுவிஸ் | 2000. 00 |
| அருணகிரிநாதர் குடும்பம் | சுழிபுரம் | 3000. 00 |
| மு. கதிர்வேல் | சுழிபுரம் | 1000. 00 |
| விஜயரட்ணம் குடும்பம் | சுழிபுரம் | 1500. 00 |
| செ. செந்தூரன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| ச. திவாகரன் | உரும்பராய் | 2000. 00 |
| ஆறுமுகம் இராசரத்தினம் | லண்டன் | 5000. 00 |
| கா. புலேந்திரதாசன் | சங்கானை மரக்கறி, 30k அரிசி | 5000. 00 |
| S. ராஜேஸ்வரி | பத்தமேனி | 1000. 00 |
| பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை | பத்தமேனி | 2000. 00 |
| மு. செந்தூரன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| க. மலர்விழி | கரவெட்டி | 1000. 00 |
| க. சசிதரன் | திருகோணமலை | 2000. 00 |
| ஸ்ரீ நதியா நகை மாடம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| பொ. சிவச்செல்வன் | மீசாலை | 5000. 00 |
| வ. பாலமுருகன் | கொக்குவில் | 5000. 00 |
| ச. வைத்தியநாதக் குருக்கள் குடும்பம் | பொலிகண்டி | 3000. 00 |
| சாரதா, கோபிகா | கனடா | 2000. 00 |
| ஆ. திசாந்தன் | அச்சுவேலி | 1500. 00 |
| N. இளஞ்செழியன் | தாவடி | 3000. 00 |
| ரூபன் விஜிதா | சுன்னாகம் | 2000. 00 |
| ந. செல்வராணி | புத்தூர் | 1500. 00 |
| S. நிஷாந்தன் | லண்டன் | 5000. 00 |
| ந. நவரட்ணராஜா | கொக்குவில் | 20000. 00 |
| தாட்சாயிணி கனாதீபன் | தெகிவளை | 10000. 00 |
| திரு ஜெயசுதன் குடும்பம் | வவுனியா | 6000. 00 |

(தொடரும்...

# சிவராத்திரி மகிமை

– **திரு காரை எம்.பி. அருளானந்தன்** அவர்கள் –

சிவராத்திரி என்பது சிவபெருமானுக்குரிய இராத்திரி என்று சொல்லப்படும். சிவபெருமான் விருப்பு வெறுப்பு இல்லாதவர். ஞானமே திருமேனியாக உள்ளவர். சிவனை நோக்கி உலக இன்பங்களாகிய போக போகியங்களை விரும்பி, சிலர் காமிகதவம் மேற்கொள்கிறார்கள். அத்தகையவர்களுக்கு சிவபெருமான் நீண்ட வாழ்நாள், நோயற்ற வாழ்க்கை, அளவற்ற செல்வம், மாடமாளிகை போன்றவற்றைத் தந்து நல்ல வாழ்க்கை அமையும்படி செய்கின்றார்.

தேவலோக இன்பங்களை விரும்பி தவம் செய்பவர்களுக்கு இந்திர உலகம், சொர்க்க உலகம், வைகுண்ட உலகம் முதலிய உயர்ந்த உலகங்களிலே எண்டிசைக் கனகமும், பைம்பொன் மாளிகையும் கற்பகப் பொழிலும் அனுபவிக்கும்படி சிவபிரான் அருள் புரிகிறார்.



## திருமாலும் பிரம்மாவும்

உயிர்களின் அறிவிலே கலந்திருக்கும் ஆணவமல சக்தி வலிமை குன்றும் வகையில் படைத்தல் முதலிய சக்தியையும் அந்த அயன், மால், ருத்திரன் ஆகியவர்களிடம் பதித்தருள்கிறார்.

*அறிவும் ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள் மாதிரி.*

அந்த சக்திகளே அவ்விதம் படைத்தல் முதலிய செயல்களைச் செய்கிறார்கள். இதை அயன், மால் முதலியவர்கள் அறிந்துகொள்ளாமல் அந்தப் படைத்தல், காத்தல் முதலிய செயல்களுக்குத் தாங்களே பரம காரணர் என்று தவறாக நினைத்துக் கர்வம் கொண்டதாகவும் ஒரு நிகழ்ச்சி சொல்லப்படுகிறது.

### ஜோதிப் பிழம்பு தோன்றியது

ஒரு சமயம் திருமாலும் பிரம்மாவும் தங்களுக்குள் யார் பெரியவர்? என்று பூசலிட்டுக் கொண்டார்கள். அவர்களுக்குள் ஏற்பட்ட இந்தப் பூசல் காரணமாக உலக உயிர்கள் துன்பமடைந்தன. இவ்விதம் நேர்ந்த உலக உயிர்களின் துன்பத்தை நீக்கும் பொருட்டு சிவபெருமான் அந்த இருவருக்கும் இடையில் ஒரு ஜோதி வடிவமாகத் தோன்றினார். இந்த ஜோதியின் அடியையும் முடியையும் எவர் காண்கிறாரோ அவரே பெரியவர் என்று கூறினார்.

பிரம்மாவும் திருமாலும் முறையே அன்னமாகவும் வராகமாகவும் உருவம் கொண்டு அந்த ஜோதியின் அடிமுடியைக் காண முயன்றார்கள். அது இயலாமல் போகவே அகந்தையிலிருந்து விடுபட்டு அந்த ஜோதியை வணங்கி நின்றார்கள். அப்பொழுது அவர் களுக்குச் சிவபெருமான் காட்சி தந்து அருள்புரிந்து அந்த ஜோதியில் மறைந்து சிவலிங்கமாகக் காட்சி தந்தார்.

### சிவலிங்க வடிவம்

அந்த ஜோதி அனற் பிழம்பாகிய மலை வடிவமாக ஆயிற்று. அதுவே திருவண்ணாமலை ஆகும். இவ்விதம் பிரம்மாவுக்கும் திருமாலுக்கும் இறைவன் சிவலிங்க வடிவத்தில் காட்சி தந்த இரவே சிவராத்திரி ஆகும். அந்த ராத்திரியில் தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானைப் பூஜித்து பெரும்பேறு பெற்றார்கள்.

அயனும் மாலும் சிவபெருமானின் அடிமுடி தேடிச் சென்ற வரலாறு பலரும் அறிந்ததுதான். ஆனால் அவர்களுக்கு இறைவன் சிவலிங்க வடிவத்தில் காட்சி கொடுத்தது சிவராத்திரியில் என்பது சைவ சித்தாந்திகள் எழுதிய நூல்களிலிருந்தே நாம் அறிந்து வருகின்றோம்.

### இரவு பகல்

இனி "பகல்" என்பது கருவி கரணங்களோடு சேர்ந்து அறிவு தொழிற்படும் காலமாகும். "இரவு" என்பது கருவி கரணங்கள் ஒடுங்கிக் கிடக்கும் நிலையாகும். "படைப்பு" என்பது கருவி கரணங்களோடு உயிர்கள் கூடிநிற்கும் நிலையாகும். "சங்காரம்" என்பது கருவி கரணங்களிலிருந்து உயிர்கள் நீங்கி நிற்கும் நிலையாகும். இதனால் படைப்பு "பகல்" ஆகும். "சங்காரம்" இரவு ஆகும்.

உயிர்கள் கருவிகரணங்களுடன் கூடாத ஒடுக்க நிலையிலிருந்து (தோற்றம்) படைப்புக்கு வருவதற்கு முன்பு அந்த நள்ளிரவில் உமாதேவியார் எல்லா உயிர்களும் சிவபிரான் அருளால் பந்த பாசப் பிணைப்புக்கள் (வினையின் வேகமும், மலத்தின் வலிமையும், மாயையின்

*வறுமையில் நிறைவு காண்பவனே மிகப் பெரிய பணக்காரன்.*

மயக்கமும் முறையே) குறைந்து சிவபுண்ணியமும் சிவானந்த முக்தியும் உயிர்களுக்குச் சித்திக்க வேண்டி சிவபூஜை செய்தார். அவ்விதம் உமாதேவியார் சிவபெருமானை பூஜித்த இரவு சிவராத்திரி என்றும் போற்றப்படுகிறது.

இளங் குழந்தைகளுக்குக் கடும் நோய் வந்தபோது அந்த நோய்க்குரிய வன்மையான மருந்தை அக்குழந்தைகள் அருந்தமாட்டா, அப்போது அதன் தாய் மருந்துண்டு பத்தியம் காத்து தன் பாலை அக்குழந்தைக்குப் புகட்டுகிறாள். அதனால் அந்தக் குழந்தைகளின் நோய் நீங்குவதை உலக வழக்கில் நாம் பார்க்கிறோம். அதுபோலவேதான் உயிர்கள் துன்பம் நீங்கி, இன்பம் பெறும் பொருட்டு உமாதேவியார் சிவராத்திரியில் சிவனைப் பூஜித்தார்.

பஞ்சாட்சர ஜபம், சிவாலய தரிசனம், சிவலிங்க பூஜை ஆகியவற்றை எல்லா நாட்களுமே செய்யலாம். செய்யவேண்டும். என்றாலும் மற்ற நாட்களில் செய்வதைவிட சிவராத்திரி தினத்தில் அவற்றைச் செய்வது கோடி பங்கு சிறந்த பலனைத் தரும்.

மாசி மாதம் கிருஷ்ண பட்சம் இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் பதினாறு நாழிகைக்குட்பட்ட காலத்தில் சதுர்த்தசியோடு கூடிய காலமே சிவராத்திரி புண்ணிய காலமாகும். அன்றைய தினம் இரவில் நான்கு காலமும் விசேட பூஜை செய்து சிவனை வழிபட வேண்டும். இவ்விதம் செய்பவர்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களிலிருந்தும் விடுபட்டு இம்மையில் நல்வாழ்க்கை பெறுவதோடு முடிவில் சிவபெருமானின் திருவருளுக்கு உரியவர்களாவார்கள்.

## சமுதாயப் பணிகளின் வரிசையில்...

**01) முள்ளியவளை மேற்கு கனிஷ்ட வித்தியாலயம்**

**02) சுதந்திரபுரம் தமிழ் வித்தியாலயம்**

**03) ஆனந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**

**04) புன்னை நீராவியடி அம்பிகை வித்தியாலயம் (விஸ்வமடு)**

மேற்குறித்த நான்கு பாடசாலைகளுக்கும் நான்கு லெட்சம் ரூபா செலவில் குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் உட்பட, அதன் செயற்பாட்டிற்குரிய உபகரணங்களுடன் ஜனவரி நடுப்பகுதியில் வழங்கப்பட்டு, 12.02.2020 முதல் இச் சாதனங்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு வந்தன.

முல்லைத்தீவு வலய பாடசாலைகளுக்கான இச் சமுதாயப் பணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்துடன் இணைந்து திருமதி கஜனி அவர்களும், லண்டனில் வதியும் திரு பொ. கமலாகரன் அவரது உறவினர்களும் நிதி உதவியினை வழங்கியிருந்தனர். அவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் சார்பான மனமார்ந்த நன்றிகள்.

*ஒருவனுடைய முகத்திற்கு நேராகச் சொல்வது அவதூறல்ல.*

(தொடர் -28)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

கணவன் குடும்பத் தலைவன் என்றும், மனைவி குடும்பத் தலைவி என்றும் அழைக் கப்படுகிறார்கள். யார் உயர்ந்தவர் யார் தாழ்ந் தவர் என்கிற பேச்சுக்கே இடமில்லை.

தலைவன் குடும்பத்தின் பொருளா தாரப் பொறுப்பை ஏற்கிறான். தலைவி குடும்பத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கிறாள். இருவரும் மனம் விட்டுப் பேசி, நல்ல முடிவு களுக்கு வந்து குடும்பத்தை நடத்திச் செல்ல வேண்டும் என்பதுதான் இந்துக் குடும்ப தர்மம்.

ஆனால் சில சந்தர்ப்பங்களில் ஆணின் கட்டளைக்கு பெண் கீழ்ப்படிய வேண்டும். பெண் அடிமையாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இது சொல்லப்படவில்லை. கருத்து வேறுபாடு தோன்றுகிறபோது, முடிவு செய்கின்ற பொறுப்பு ஒருவரிடம் விடப்படா விட்டால் நிர்வாகம் சீராக நடைபெற முடியாது.

எந்த நிர்வாக அமைப்பிலும் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் தலைமை நிர் வாகப் பொறுப்பாளருக்குத்தான் வழங்கப் பட்டுள்ளது. ஒரு பாடசாலையில் ஆசிரியர்கள், உப அதிபர்கள், சிற்றூழியர்கள் எனப் பல மட்டத்தினர் இருப்பினும் தலைவராக நிர்வாகப் பொறுப்பு அதிபருக்குரியது. இந்த முறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்தான் பல பாட சாலைகளின் அவல நிலைக்குக் காரணமாக இருப்பதைத் தற்போது காணுகின்றோம்.

இன்றைய குடும்பங்களில் மனைவி கணவனுக்கு கட்டுப்பட்டவளாகவே இருக்கின் றாள் என்று சொல்ல முடியாது. மனைவி சொல்லே மந்திரம் என்று அடங்கி நடக்கின்ற கணவன்மார்களும் இருக்கவே செய்கிறார்கள்.

தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் அடிக்கடி ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுவார்.

மனைவி தனக்கு கட்டுப்பட்டு நடப்பது இல்லை, அதற்கு நான் என்ன செய்ய வேண் டும் எனக் கேட்டு ஒருவர் அவருக்கு கடிதம் எழுதினாராம். "அடக்கிப்பார்" என்று இவர் பதில் எழுதினாராம். சில தினங்கள் கழித்து வந்த கடிதத்தில் "அடக்கிப் பார்த்தேன், அடங்கவில்லை" என்று அந்த அன்பர் எழுதி னாராம். உடனே விசுவநாதம் அவர்கள் பதில் கடிதத்தில் "அடங்கிப்போ" என்று ஆலோசனை சொன்னாராம். அதற்குப் பின் அந்த அன்பரிடம் இருந்து கடிதம் வராததனால், அடங்கிப் போய் விட்டார் என்று இவர் முடிவு செய்து கொண்டாராம்.

வேடிக்கைக்காக சொல்லப்பட்ட கதை அல்ல இது. யாரோ ஒருவர் அடங்கிப் போகா விட்டால், குடும்பம் என்கிற வண்டி சீராக ஓடாது. வண்டியின் இரு சக்கரங்கள் போன்ற வர்கள் கணவனும் மனைவியும். ஒன்று உயர்ந்து, ஒன்று தாழ்ந்தும் இருந்தால் வண்டி சரிவர ஓடாது. வண்டியில் பூட்டப்பட்ட இரண்டு மாடுகளைப் போன்றவர்கள் கணவனும் மனைவி யும். இரண்டு மாடுகளும் சேர்ந்து இழுத்தால்த் தான் வண்டி போக வேண்டிய இடத்தைப் போய்ச்சேரும். கணவனும் மனைவியும் சேர்ந்து குடும்ப வண்டியை இழுக்க வேண்டும். ஒரே

*ஒரு குழந்தைக்குத் தாய் இருக்கும் இடம்தான் சொர்க்கம்.*

திசையில் இழுக்க வேண்டும். இலக்கு ஒன்றாக இருந்தால்த்தான், சேர்ந்து ஒரே திசையில் இழுக்க முடியும்.

"காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுப் பட்டதே இன்பம்" என்பதுதான் குடும்ப வாழ்வின் தத்துவமாகும். கணவன் மனைவி இருவருக்குமிடையே காதல் ஆகிய அன்பு இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் ஆதரவாக, அனுசரணையாக இருக்க வேண் டும். அப்போதுதான் குடும்பத்தில் இன்பம் இருக்கும். ஏற்றத்தாழ்வு என்பதெல்லாம் வெறும் மயக்கம்.

இந்துக் குடும்ப அமைப்பில் பெண் ணின் பாத்திரம் குறைத்து மதிப்பிடப்பட்டதே இல்லை.

தந்தையின் போக்கு சரியில்லாவிட் டால் குடும்பம் பாதிக்கப்படுவதைவிட, தாயின் போக்கு சரியில்லாதபோதே குடும்பம் அதிக மாகப் பாதிப்படைகிறது. தகப்பன் குடிகார னாக இருக்கலாம்; ஓடுகாலியாக இருக்கலாம். தாய் உத்தமியாக இருந்தால் அந்தக் குடும் பம் எப்படியோ பிழைத்துக்கொள்ளும்

"ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால்" என்பது சமுதாயத்தில் வழங்கி வருகின்ற ஒரு வாசகம். ஆக்குகிறவள் பெண், அழிக்கிறவளும் பெண் என்பது இதற்கு அர்த்தமல்ல. நன்மையை ஆக்குகிறவளும், தீமையை அழிக்கிறவளும் பெண் என்பது தான் இதற்குப் பொருள்.

ஒரு பெண் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும். இராமாயணத்தில் வருகின்ற கைகேயி கெட்டவளல்ல. எதையும் அழிக்க வேண்டும் என்கிற நோக்கம் அவளுக்கு இல்லை. தீய பாத்திரத்தை விரும்பியே அவள் ஏற்கிறாள். தசரதன் கொடுத்த வரத்தை கேட்டுப் பெற்று, இராமனை அவள் காட்டுக்கு அனுப்பி இருக்காவிட்டால், இரா வணன் என்கிற தீயவன் அழிய வாய்ப்பில் லாமல் போயிருக்கும். கைகேயி தீமை புரிந்த வளைப் போலத் தோன்றினாலும், தீமையை அழிக்கின்ற செயலுக்கு அவள் கருவியாக அமைகிறாள் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

பெண்களில் கெட்டவர்களே இல்லை என்று இந்துமதம் சொல்லுகிறதா? நிச்சயமாக அப்படிச் சொல்லவில்லை. மனிதர்கள் என்று சொன்னாலே, ஆணாக இருந்தாலும், பெண் ணாக இருந்தாலும் அவர்களில் இருவகை யாரும் இருப்பார்கள். ஆனால் ஆண் தீய வனாக இருக்கின்றபோது ஏற்படுகின்ற அழிவை விட, பெண் தீயவளாக இருக்கின்றபோது ஏற்படுகின்ற அழிவு அதிகம் என்றுதான் இந்துமதம் சுட்டிக் காட்டுகின்றது. பெண்ணின் முக்கியத்துவத்தை இந்துமதம் உணர்ந்ததால் பெண்ணைப் பற்றிய இந்தக் கருத்தினை பல்வேறு சந்தர்ப்பங்களில் அது வலியுறுத்திச் சொல்லி இருக்கிறது.

இதிகாசச் சம்பவங்களை வெறும் நிகழ்ச்சிகளாகப் பார்ப்பதை விட்டுவிட்டு, அதற் குப் பின்னே உள்ள நீதிகளைப் பார்த்தால்த் தான் இந்துமதப் பெருமைகளை உணர முடியும்.

பாஞ்சாலியை வைத்து தருமர் சூதாடு கின்றார். நான்கு தம்பிமார்களையும், அவர் களுக்கு உரிமையுடைய பாஞ்சாலியையும் ஒரு பொருளைப்போல வைத்து தருமர் சூதாடு கின்றார். இது பெண்ணை இழிவுபடுத்துகின்ற செயல் ஆகாதா? என்கிற கேள்வி எழலாம். நிச்சயம் இழிவு படுத்துகின்ற செயல்தான். அதைப் பாரதக் கதையே சுட்டிக் காட்டுகிறது. பாஞ்சாலியை சூதாட்டத்தில் தருமர் இழந்த பிறகு, துச்சாதனன் அவள் கூந்தலைப் பற்றி

*திருப்பிக் கொடுக்கப்படாத கடன்கள், மன்னிக்கப்படாத பாவங்கள்.*

சபைக்கு இழுத்து வந்து, அவள் துகிலை உரிந்து மானபங்கப் படுத்துகிறான்.

பஞ்ச பாண்டவர்கள் வீரத்தில் சிறந்தவர்கள்தான். ஆனால் தங்கள் மனைவி, தங்கள் கண் முன்னாலேயே மானபங்கப்படுத்தப்படுவதை அவர்களால் தடுக்கமுடியவில்லை. ஆண்மை இருந்தும் செயலற்றவர்களாகவே நிற்கிறார்கள்.

ஆண் தவறு செய்கின்றபோது, பெண் மானம் இழக்க வேண்டி நேரிடும் என்பதை இந்தச் சம்பவம் தெளிவுபடுத்துகிறது.

ஆனால் பாஞ்சாலி அந்தச் சபையிலே வீர சபதம் செய்கிறாள். தன்னை மானபங்கப் படுத்தியவர்களின் இரத்தத்தால் அவிழ்ந்த தன் முடியை நனைத்து அதற்குப் பின்பே கூந்தலை முடிவேன் எனச் சபதம் செய்கிறாள். அந்தப் பெண்ணின் சபதம் நிறைவேற்றுவதற்காகத்தான் பாரதப்போர் நடக்கிறது. தீமை அழிந்து நன்மை வெற்றி பெறுகிறது. இந்து மதம் பெண்ணுக்குக் கொடுத்திருக்கும் சிறப்பு இதுதான்.

இமயம் முதல் குமரி வரை எழுந்து உள்ள எல்லா இலக்கியங்களிலும் இந்தப் பேருண்மை கலங்கரை விளக்கம்போல பிரகாசித்து நிற்கிறது.

பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலனைக் குற்றவாளி என்று தவறாகக் கருதி அவனுக்கு மரண தண்டனை விதித்து விடுகிறான். பாண்டியன் அவைக்கு வந்து கண்ணகி தன் கணவன் கோவலன் குற்றமற்றவன் என நிரூபிக்கிறாள். நீதி தவறிவிட்டதை உணர்ந்த மன்னன் அந்த இடத்திலேயே உயிர் துறக்கிறான். அவன் மனைவியான கோப்பெருந்தேவியும் கணவன்மீது விழுந்து உயிர் விடுகிறாள். கணவன் குற்றம் இழைத்ததை மனைவியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. குற்றம் இழைத்த கணவனும் உயிர் துறக்கிறான். கணவன் குற்றவாளி என உணர்ந்த மனைவியும் உயிர் துறக்கிறாள். அரச நிலையில் இருந்தாலும், நீதியின் தண்டனைக்கு எவரும் தப்ப முடியாது என்பது தான் இந்து மதம் அளிக்கின்ற தீர்ப்பு.

ஆக, கணவன்- மனைவி வாழ்க்கை எந்த நிலையில் அமைந்தாலும், மன்னன் நிலையாக இருந்தாலும் சரி, சாதாரண மக்கள் நிலையாக இருந்தாலும் சரி ஒருவருடைய உயர்விலும், தாழ்விலும், சுகத்திலும், துக்கத்திலும் இன்னொருவர் பங்கேற்க வேண்டும் என்பதே இந்துக்கள் கண்ட வாழ்க்கை முறை.

தலைவன் தலைவியோடு ஆரம்பம் ஆகின்ற குடும்பம் மக்கட் செல்வத்தைப் பெறுகிறது. இந்தக் குழந்தைகளை வளர்த்துப் பராமரிக்கின்ற பொறுப்பு, தாய் தந்தையர் இருவருக்குமே உண்டு. என்றாலும் தந்தையின் கடமைகளையும் தாயின் கடமைகளையும் இந்து மதம் வெகு அழகாக வரையறுத்துச் சொல்லியிருக்கிறது.

"தாயோடு அறுசுவை உண்டி போய் விடும், தந்தையோடு கல்வி போய்விடும்" என்று சொன்னார்கள். உணவும் கல்வியும் குறிப்பாக உணர்த்தப்பட்டிருக்கின்றனவே தவிர, இதன் பொருள் ஆழமானது.

குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தாய் பொறுப்பு. குழந்தையின் அறிவு வளர்ச்சிக்குத் தந்தை பொறுப்பு. இப்படிச் சொல்லுகின்றபோது, குழந்தையின் அறிவு வளர்ச்சியோடு தாய்க்கு சம்பந்தமே இல்லை என்றோ, குழந்தையின் உடல் வளர்ச்சியில் தந்தை தொடர்பு கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றோ அர்த்தம் ஆகாது. குடும்பத்தில் இருவருக்கும் உள்ள பிரதான கடமைகளே இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

*மனம்தான் ஒருவனை நரகத்திற்கோ, சொர்க்கத்திற்கோ கொண்டு செல்கிறது.*

தந்தையின் கடமையினைப் பற்றிச் சொல்லவந்த வள்ளுவர்,

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

எனக் கூறுகிறார்.

இதன் பொருள் தந்தை மகனுக்குச் செய்கின்ற உதவி, அவனை கற்றோர் அவையில், அவர்கள் மத்தியில் புகழுடையவனாக முன்னிலைப்படுத்துவதாகும் என்பதே ஆகும்.

தாயின் கடமையைப்பற்றிச் சொல்ல வந்த திருவள்ளுவர்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்கிறார்.

தந்தையின் கடமை கல்வியில் உயர்ந்தவனாக்குதல். தாயின் கடமை "சான்றோன்" ஆக்குவதாகும். சான்றாண்மை என்பது ஒழுக்கத்தினால் வருவது. வள்ளுவர் கருத்துப்படியும் தாயின் கடமையே உயர்ந்ததாகிறது. ஒழுக்கம் இல்லாத கல்வியால் எந்தப் பயனும் இல்லை.

இந்து தத்துவங்கள் எதைப் படித்தாலும் குடும்பத்தை நடத்திச் செல்வதில் தாயின் பாத்திரமும், பெண்ணின் நிலையும் உயர்ந்ததாக இருப்பதைக் காணமுடிகிறது.

இன்றைய குடும்பங்களின் நிலையை (பெரும்பாலும்) சற்று ஆராய்வது அவசியமாகிறது. பொருளாதாரத்தைத் தேடுதல் என்பது எவ்வளவு அவசியமோ அதைவிட குழந்தை வளர்ப்பு அவசியமாகிறது. வைத்தியர்களின் கருத்துப்படி குழந்தைகளுக்கு சரியான ஊட்டச் சத்துள்ள உணவு வழங்கப்படுவதில்லை எனக் கூறப்படுகின்றது. இது பிள்ளைகளின் உடல் நலத்தைப் பாதிக்கிறது. மிக இளம் வயதில் மூச்சுத் திணறல் (ஆஸ்மா), குருதியமுக்கம், நீரிழிவு, கண் பார்வைக் குறைபாடுகள் அதிகளவில் ஏற்படுகிறது.

கல்விச் செயற்பாட்டில் வட பகுதி மாணவர்களின் நிலை கவலையளிப்பதாக உள்ளது. மிகக் குறைந்த சதவீதமான மாணவர்களின் பெறுபேறுகளை மட்டும் கவனத்தில் எடுக்கும் திணைக்களம், சித்தியடையாத மாணவர்கள்பற்றி கவலைப்படுவதில்லை. இங்கு பெற்றோரின் கவனமின்மை முக்கியம் ஆனது. பிள்ளையின் ஆளுமை மிக்க கல்வியைத் தீர்மானிப்பது பாடசாலை ஆகும். இதன் அடிப்படையில் நெடுந்தூரத்தில் உள்ள பாடசாலைக்கு "அதிக செலவில்" பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள். பிள்ளைகள் நெடுந்தூரப் பயணத்தில் களைப்படைந்து வருகிறார்கள். வந்தவுடன் மதிய உணவை உட்கொண்டும், உட்கொள்ளாமலுமாக தனியார் கல்வி நிலையத்திற்கு பயணம். அது முடிந்த பின்னர் பிரத்தியேக வகுப்பு... இந்த நிலைப்பாட்டில் உள்ள பிள்ளைகள் "சுய கற்றல்" செயற்பாட்டில் ஈடுபடுவது எப்படி?

பெற்றோரின் வற்புறுத்தலினால் மாணவர்கள் ஒவ்வொரு இடமாக அலைகிறார்கள். தனியார் கல்வி நிறுவனங்களின் வழிகாட்டல் அவசியம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை, ஆனால் மாணவர்களின் ஓய்வு அவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு அவசியம்.

*உழைப்புதான் ஒரு மனிதனை மற்றொரு மனிதனைவிட முந்தச் செய்கிறது.*

வெளி இடங்களிலிருந்து யாழ்நகர் நோக்கி வரும் மாணவர்கள் பற்றி அதிக கவனம் அவசியம். பெற்றோர் அவர்களை கவனிப்பதில் பெரும் தவறு செய்கிறார்கள்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

நல்ல ஒழுக்கம் பற்றிய வள்ளுவரின் கருத்தில் ஒழுக்கத்திற்கு உவமையாக "உயிரை" வைக்கவில்லை. "உயிரினும்" எனக் குறிப்பிட்டு உயிரோடு - உம் சேர்த்து உயிரைவிட மேலானது எனக் குறிப்பிடுகிறார்.

அண்மைக் காலமாக "இளசுகள்" தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து வருவதை அறிவோம். என்னுடைய ஆய்வின்படி பெற்றோர்கள் பிள்ளைகளைக் குறிப்பாக பெண் பிள்ளைகளைக் கண்டிப்புடனும் வளர்க்கவில்லை; அன்பு காட்டியும் வளர்க்கவில்லை. வீட்டில் ஏற்பட்ட வெறுமை காரணமாக வெளியில் கிடைத்த போலித்தனமான அன்பினால் ஈர்க்கப்பட்டு, அதன் காரணமாக ஒழுக்கம் பாதிக்கப்பட்டு தற்கொலை எனும் முடிவை எடுத்திருக்கிறார்கள். அண்மையில் தற்கொலை செய்துகொண்டவர்களில் பாடசாலை மாணவிகள் கணிசமானவர் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது சமயம் தொலை நோக்கில் உருவாக்கிய கோட்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்ட அந்தக் காலத்தில் இந்த அவலங்கள் இந்தளவு இருந்ததில்லை. இன்று சமய வழிகாட்டலை இழந்து வாழும் நிலை, ஏற்படுத்தியுள்ள பாதிப்பை உணருங்கள். சமய வாழ்வு என்பது வாழ்க்கையின் வழிகாட்டியாகும்.

(தொடரும்...

## நம்பிடும் எனை ஆண்டு நீ அருள்வாய்!

பல்லவி

உனைப் பாட, என் மனம் உருகுதையா! - என்றும்
உன் புகழ் பாட இன்பம் பெருகுதையா! (உனைப்)

அநுபல்லவி

வினை யாவும் தீர்த்திடுவாய் வேல் முருகா! - வெற்றி
வேலோடு வந்தருளும் மால் மருகா! (உனைப்)

சரணம்

தினைப் புன வள்ளியவள் மணவாளா! - தமிழ்த்
தெய்வமென நான் வணங்கும் சிவபாலா!
நினைவிலும் கனவிலும் வரும் வேலா! - என்
நெஞ்சினில் குடிகொண்ட அருள்நேசா!
(உனைப்)

தேவர்கள் குறை தீர்த்த திருக் குமரா! - அன்புத்
தெய்வமாய் அருள் புரியும் ஆறுமுகா!
நாவார நினைப்பாட நலந்தருவாய்! - நினை
நம்பிடும் எனை ஆண்டு நீ அருள்வாய்! (உனைப்)

- ஸ்ரீ. குலசேகரன் -

*பூமிக்கு உணவளி; அது உனக்கு உணவளிக்கும்.*

# அன்பின் சக்தி

– **செல்வி ச. வர்ணி** அவர்கள் –

***"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தையிடு திரியா - நன்புருகி"***

அன்பு செய்தல் வேண்டும். அன்பையே பெரும் சக்தியாய் முரசு கொட்டிய எமது இந்து மதம் இன்று அன்பை இழந்து வன்முறைகளைச் சுமந்து பேதப்பட்டுத் திரிகின்றது.

வாழும் முறையில் புதிய மாற்றத்தைத் தோற்றுவித்தவர் பரம பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்க குருஜீ அவர்கள். வாழும் கலை அமைப்பை நிறுவி லட்சக் கணக்கான மக்கள் மகிழ்வான, முழுமை பெற்ற, மன அழுத்தம் இல்லாத நலமான வாழ்வைப் பெற்றிட பல வழிவகைகளைச் செய்துள்ளார். இவருடைய போதனைகள் சக்தி வாய்ந்ததும், எளிமையுடனும், நகைச்சுவை யுடனும் வழங்கப்படுவனவாக இருக்கின்றன. அந்த வகையில் அன்பு பற்றி மக்கள் வினவிய வினாக்களுக்கு மிக யதார்த்தமான, சுவாரஸ்யமான பதில்களை இவர் அளித்துள்ளார். இப் பதில்கள் கரையாத நெஞ்சையும் கரைய வைப்பன. அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

### *அன்பு என்றால் என்ன?*

அன்பு ஒரு செயல் அல்ல; அது நம் இயல்பு. ஆனால், அன்புதான் இவ்வுலகிலுள்ள எல்லாச் சிக்கல்களுக்கும் காரணமாய் உள்ளது. பேராசை, கோபம் மற்றும் பொறாமை இவை எல்லாம் அன்பிலிருந்து திரிந்தவையே. அன்பு ஞானத்துடன் கலந்து வரும்போது, திரிந்து விடுவதில்லை.

### *அன்பின் இயல்புதான் என்ன?*

இவ்வுலகிலுள்ள எல்லோரும் அனுபவித்திருக்கும் ஒன்றுதான் அன்பு! அன்பு என்னவென்றே தெரியாதவர் அல்லது அன்பின் ஆழத்தில் சென்றிராதவர் யாரும் இல்லை. இதை நீ ஏற்கனவே அறிவாய். உட்கார்ந்து சிந்தி, கவனமாகப் பார். அதைப் பற்றி அதிக விழிப்புணர்வுடன் இருப்பாயானால், மென்மேலும் உனக்கு வெளிப்படுத்தப்படும். அன்பைப்பற்றி புத்தகங்கள் படிப்பதனால் எந்தப் பயனும் இல்லை. இது மனதில் மென்மேலும் பல கருத்துக் களையே உருவாக்கும்.

நாம் நம்முள் இறுக்கத்தையும் அழுத்தத்தையும் சுமத்தும்போது, அன்பை அதன் தூய்மையான வடிவில் உணரமுடியாமல் இருக்கின்றோம். நீ உன் இறுக்கத்தையும் அழுத்தத்தையும் விட்டொழிக்கும்போது, நீ அந்த அன்பெனும் தூய வெளியிலிருந்து வெளிப்பட்டு அந்த அன்பிலேயே இருக்கின்றாய்.

*புத்தகங்களின் தோற்றம் உள்ளத்திலிருந்த கவலைகளைப் போக்குகிறது.*

**நிபந்தனையுள்ள மற்றும் நிபந்தனையற்ற அன்பிற்குள்ள வித்தியாசம் யாது?**

நிபந்தனையுள்ள அன்பு வியாபாரம் போன்றது! "நான் விரும்பும் வகையில், நீ செயல் புரிந்தால், நான் உன்னை நேசிப்பேன்" இது நிபந்தனையுள்ள அன்பு. ஆனால், உன் விருப்பு வெறுப்புக்கள் மாறுகின்றன.

நிபந்தனையற்ற அன்பானது "எல்லாம் மாற்றமடைகின்றன" என்பதை ஏற்றுக்கொள்வதே ஆகும். இத்துணை மாற்றங்களுக்கு நடுவிலும், நிபந்தனையற்ற அன்பு உறுதியாக இருக்கிறது.

**மற்றவர்கள் நம்மிடம் வைத்திருக்கும் அன்பையும், அவர்களின் நோக்கத்தையும் சந்தேகிக்காமல் இருக்க எவ்வாறு முயற்சி செய்வது?**

உனக்குத் தெரியுமா? எது நல்லதோ அதையே எப்போதும் சந்தேகிக்கின்றாய்! யாரேனும் "எனக்கு உன்னை மிகவும் பிடிக்கும்" என்று கூறினால்- நீ அவரையோ அல்லது (அவளையோ) "உண்மையாகவா?" என்று கேட்கிறாய்.

அதே சமயம் யாரேனும் "எனக்கு உங்களைப் பிடிக்காது" என்று கூறினால், நீ "உண்மையாகவா?" என்று அவர்களைக் கேட்பதில்லை. இதுவே உன் இயல்பாக இருந்து வருகின்றது. சந்தேகத்தின் இயல்பே எப்போதும் நல்லனவற்றைப் பற்றித்தான்.

நீ மற்றவர் உன்பால் வைத்திருக்கும் அன்பைச் சந்தேகிப்பாயேயானால், உன்மேல் எவ்வளவு குறைந்த அன்பு வைத்திருந்தார்களோ, அது கூட குறையத் துவங்கும். அதனால் அது இனி உன் விருப்பம்!

**அன்பும், அதனுடன் வரும் எதிர்பார்ப்பும் அழுத்தத்தை உண்டாக்காதா?**

அழுத்தத்திற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் ஆத்ம ஞானமும் - தியானமும் அவற்றை நீக்க வல்லவை.

**ஏக்கம் சரியானதா?**

ஏக்கத்தினால் கண்ணீர் வெளிப்படும்போது, அந்த ஏக்கமே தெய்வத்தன்மை என்பதை அறிந்துகொள். ஏக்கமானது ஒரு மனிதரின் முதிர்ச்சியைக் காட்டுவதுடன் அம் மனிதரின் இருப்புத் தன்மையின் முக்கியத்துவத்தையும் காட்டுகிறது. அன்பு நிலைக்க வேண்டுமானால், ஏக்கமும் இருக்க வேண்டும். அன்பும், ஏக்கமும் பிணைந்திருக்கிறது.

**நாம் யாரிடம் மிகுந்த அன்பு காட்டுகிறோமோ, அவர்களே நம்மை மிகவும் புண்படுத்துகிறார்கள். இது ஏன்?**

புண்படுத்தல் அன்பின் ஓர் அங்கம். இதை நீ ஏற்றுக்கொள்ளும்போது, அன்பு ஒரு புதிய பரிணாமம் பெற்று நீ வேதனை, புண்படுத்தல் ஆகிய மற்ற எதிர்மறை உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு நிற்கின்றாய்.

**கடவுளின் அன்பு நிபந்தனையற்றதெனில், நாம் ஏன் பிரார்த்தனை செய்ய வேண்டும்?**

பிரார்த்தனை செய்வது ஒன்றும் கட்டாயமில்லை! நீ திக்கற்ற நிலையிலோ அல்லது நன்றிப் பெருக்குடன் இருக்கும்போதோ, நீயாகவே பிரார்த்திக்கின்றாய். அது தானாகவே நிகழ்கின்றது. பிரார்த்தனை உனக்காகத்தான் அது உன்னை மகிழ்விக்கின்றது.

*எழுதப் படிக்கத் தெரிந்தவனுக்கு நான்கு கண்கள் உண்டு.*

**நாம் எதைத் தேடுகிறோம்?**

நம் வாழ்க்கை முழுவதும் உண்மையான அன்பைத் தேடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், நாம் நம்மை வெறுமையாக உணராதவரை, இந்தத் தூய அன்பு நமக்குக் கிடைப் பதில்லை. பக்தர்கள் இல்லாமல் போனால் கடவுளுக்குக் கூட மதிப்பில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனிடம் "நீ முத்து, நான் அதன் இழை" என்றார். ஒரு மணிமாலையில் வெறும் இழை மட்டுமிருந்து முத்துக்கள் இல்லையெனில் மதிப்பு இருப்பதில்லை. அதேபோல் இழை இல்லையெனில், ஒரு மணிமாலையைச் செய்ய முடிவதில்லை.

**அன்பின் அறிகுறிகள் என்ன?**

நீ யாரிடமாவது அன்பு செய்தால், அவனிடத்திலோ (அல்லது அவளிடத்திலோ) நீ எந்தவிதக் குற்றமும் காணமாட்டாய்.

அவர்களிடம் நீ ஏதாவது குறை கண்டாலும்கூட, "ஆ! யார்தான் தவறு செய்யவில்லை. இது சாதாரணமானது" என்று கூறி அவர்களையே சமாதானம் செய்வாய்.

நீ அவர்களுக்குப் போதுமான அளவு எதுவும் செய்ததில்லை என்றே நினைப்பாய். அதிகமாகச் செய்யச் செய்ய மேலும் அதிகமாக அவர்களுக்குச் செய்ய விரும்புவாய். அவர்கள் உன் மனதில் எப்போதும் இருக்கிறார்கள்.

சாதாரண விஷயங்கள் அசாதாரணச் செயல்களாகின்றன! (உதாரணமாக, பாட்டியை நோக்கிக் கண் சிமிட்டும் குழந்தை)

அவர்கள் உனக்காக இருக்க வேண்டுமென ஆசைப்படுகின்றாய். நீ யாரிடமாவது அன்பு பாராட்டினால், நீ அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதைக் காண விரும்புகிறாய். அவர்கள் எப்போதும் சிறந்ததையே அடைய வேண்டுமென ஆசைப்படுகிறாய் என்கிறார் ஸ்ரீஸ்ரீ அவர்கள். இக்கருத்துக்களை உள்ளார்ந்து சுவாசியுங்கள்.

இன்று இளைய சமுதாயம் அன்பு என்ற பெயரில் நாளுக்கு நாள் தற்கொலை செய் கின்றது. இது மடத்தனம். அன்பை பாடம் நடாத்தி புரிய வைக்க முடியாது. நீங்கள் அன்பின் தார்ப்பரியத்தை உணருங்கள். வன்முறைக்குள் ஆட்கொள்ளப்படாதீர்கள். அனைத்தும் உங்கள் மனதின் அன்பின் வசமே!

அன்பு ஒளிரும்போது, பேரானந்தமாகின்றது. அன்பு பொழிகையில், கருணையாகின்றது, அன்பு பெருக்கெடுக்கும்போது கோபமாகின்றது, அன்பு திரிந்துவிடும்போது பொறாமையாகின்றது, அது எல்லாம் இல்லாமையாகின்றபோது வெறுப்பாகின்றது. அன்பு செயற்படும்போது முழுமையாகின்றது. அன்பு உணரப்படும்போது அது நானே! இதுவே அன்பின் சக்தியாகும்.

"அன்பில்லா நெஞ்சு பாழ்"

தன்னைப் பெரியவனாக நினைத்துச் செருக்கடைவது, கோபத்தைப் பெருக்கிக் கொள்வது, எல்லாப் பொருள்களும் தனக்கே வேண்டுமென்று பேராசை கொள்வது ஆகிய இவை மூன்றும் செல்வத்தை அழிக்கும் ஆயுதங்களாகும்.

*பணத்தைத் தவிர மற்றவை யாவும் உன்னைத் திருப்திப்படுத்தும்.*

# இறைவனை எப்போது காண்பது!

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

இறைவன் இருக்கின்றானா? என்ற கேள்வி எழுப்பும் சிலரின் மனதிலே இறைவனைக் காணுதல் என்பது எவ்வாறு சாத்திய மாகும்! இறைவன் இருக்கின்றானா? அவ்வாறு ஆயின், அவன் எங்கே? என்று ஒருவன் கேள்வி எழுப்புவானேயாகில், அவன் நன்றாகக் குழம்பி இருக்கிறான் என்பதுதான் அர்த்தம். இவ்வாறு அவனை வினா எழுப்பத் தூண்டியதும் அந்த ஆண்டவனேதான் என்று நாம் கொண்டு மனம் ஆற வேண்டும். அதிலும் ஒரு உள்ளர்த்தம் இருக்கத்தான் செய்யும்.

இறைவனைக் காண்பது கடினம்தான். இது சுலபமான காரியமல்ல- கடினமானது எது எனின் அவனைப் பார்ப்பதற்குரிய கண்ணாடியாகிய எமது இருதயத்தைப் பரிசுத்தம் ஆக்குவதுதான். இதற்காக நாம் இறைவன் பொருட்டு, எமக்குப் பிடித்தமான சிலவற்றை விட்டு தியாகம் செய்வதற்கும், எமக்கு மிகவும் வெறுப்பான சிலவற்றை ஏற்றுக்கொள்வதற்கும், தயாராக நாம் இருக்க வேண்டும். இதுவும் சற்றுக் கடினமானதுதான். ஆனால், இதைப் பயிற்சியில் கொண்டுவரக் கூடியவன்தான் உண்மையில், ஒரு யதார்த்தமான இறை பக்தன்.

இறையை எண்ணிப் பார்க்க நல்ல அறிவு வேண்டும். அவனை அணுக ஞானம் வேண்டும். ஞானம் என்பதை, ஒரு இரவிலோ அல்லது ஒரு நாளிலோ எம்மால் அடைந்து விட முடியாது. ஞானம் என்பது நாக மணியைச் சுற்றிக் கிடக்கும் நாகத்தைப் போன்றது. ஆத்மாவைச் சுற்றி வளைத்திருக்கும் நாகம் போன்றது. இத்தகைய நாகம் போன்ற தீயவற்றைச் சுட்டுப் பொசுக்க கடும் தவம் போன்றவை வேண்டும். கடும் தவம் போன்ற முயற்சியால்த்தான் எமக்குள் ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்ய முடியும்.

காணக் காணச் சலிக்காத, பழகப் பழக அலுக்காதது எதுவோ, அதுவே சாஸ்வதமான அன்பையும், இன்பத்தையும் தரவல்லது. எம்முள் புல் உணர்வுகள் கடுகளவு தன்னும் இருக்கும்வரை இறைவனது ஞான ஒளியை நாம் காணுதல் என்பது சாத்தியம் அன்று. அது வெறும் மனச் சங்கற்பமாகவே அமையும். பக்தி என்னும், எமது மன உணர்வுகள் கடந்து அப்பாற் செல்லும்போதுதான் பேரானந்தம் பிறக்கின்றது.

இந்தப் பிரபஞ்சம் இருக்கிறது. இதை நாம் நம்புகின்றோம். இதை நாமோ அல்லது எமது மூதாதையரோ, படைக்கவில்லை என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். எனவே, இப்பிரபஞ்சத்தைப் படைத்த இன்னொருவன் இருக்கின்றான். சரி, நாம் வாங்கி அணியும் ஆடைகளை தைத்தவரை நாம் நேரில் காணாவிடினும், அவ்வாடைகளை நிர்மாணித்தவர் ஒருவர் இருக்கின்றார் என்பதை நாம் நம்பித்தான் ஆக வேண்டும். அதுபோலத்தான் இறைவனையும் இந்த வகையில் பிரபஞ்சத்தைப் படைத்த ஒருவன் உள்ளான் என்ற பிரத்தியட்ச ஞானம் எம்முள் எழும்போது, நாமோ, மற்றவரோ கர்த்தாக்கள் அல்ல, வெறும் கருவிகளே என்பதை நாம் சுலபமாக அறிந்து கொள்வோம். இந்நிலையில் எமது அகங்காரம், ஆணவம் அழிய ஆரம்பிக்கின்றது.

*மிதமான பழக்கமும் நோன்பும் அநேக நோய்களைக் குணப்படுத்துகின்றன.*

எமது மன சலனங்களைத் தீர்ப்பதற்கு பெரியோர் உபதேசங்களைக் கேட்க வேண்டும். இதற்கு வாய்ப்பில்லையேல் குரு உபதேசங்களைத்தன்னும் படித்தாக வேண்டும். எமது துன்பங்களைத் தீர்க்கும் ஆற்றல், எமக்கில்லாவிடினும், அதனைத் தீர்க்கவல்ல சக்தியை அல்லது மார்க்கத்தை நாம் தேடிப் போகலாமல்லவா!

உலகம் முழுவதும் குப்பை கூளங்கள் பரந்து கிடக்கின்றன. அவை யாவற்றையும் எம்மால் முற்றும் முழுதாகச் சுத்தப்படுத்த முடியாவிடினும், எமது வீட்டு முற்றத்தை தன்னும் நாம் தினமும் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக வைத்திருக்கலாம்தானே. அதே போன்று உலகத்தோர் மனங்களை எல்லாம் எம்மால் சுத்திகரிக்க முடியாவிடினும், எமது மனதின் அழுக்குகளைத் தன்னும் நீக்கி நாம் வாழ முயற்சிக்க வேண்டும்.

இதனை ஒவ்வொரு தனி மனிதனும் மேற்கொண்டால் வீட்டில், பின்னர் நாட்டில், ஏன் உலகில் குற்றவாளிகள் ஏது? குறையேது? பூமியே சொர்க்கமாகிவிடாதா? எனவே! இன்பமும் துன்பமும் எம் கையிலேதான் உள்ளன. இல்லையா?

"இன்பமும் துன்பமும் பிறர் தர வாரா"

## மனம் ஒரு குளம் போன்றது

நன்மை, தீமை இரண்டும் அவற்றிற்குரிய பலன்களைக் கொடுக்கின்றன. அவற்றிற்குரிய கர்மத்தை உண்டாக்குகின்றன. நல்ல செயல்கள் நம்முள் நல்ல விளைவுகளை ஏற்படுத்துகின்றன. தீய செயல் தீய விளைவுகளை ஏற்படுத்துகிறது.

ஆனால் நல்லவை, கெட்டவை இரண்டுமே ஆன்மாவை பந்தத்தில் பிணைக்கின்றன. செயல்கள் இவ்வாறு நம்மைப் பந்தத்தில் பிணைக்காமல் இருக்க கீதை வழிகாட்டுகிறது. நாம் செய்கின்ற செயலில் பற்றுக்கொள்ளாமல் இருந்தால் அது ஆன்மாவைப் பிணைக்காது.

இடைவிடாது செயல்புரிய வேண்டும். ஆனால் அதில் பற்று வைக்கக்கூடாது என்பது கீதையின் மையக் கருத்து. இதைப் புரிந்துகொள்ள சமஸ்காரம் (இயல்பான மனப்பாங்கு) என்பதுபற்றி நமக்குச் சிறிது தெரிய வேண்டும்.

மனதை ஒரு குளத்திற்கு ஒப்பிடலாம். அதில் எழுகின்ற அலை மற்றும் சிற்றலை ஒவ்வொன்றும் அடங்கும்போது முற்றிலுமாக அழிந்து விடுவதில்லை. மீண்டும் அந்த அலை திரும்பி வருவதற்கான அறிகுறியோடு கூடிய அடையாளத்தை விட்டுச் செல்கின்றது. இவ்வாறு அலை மீண்டும் எழுவதற்கான சாத்தியக் கூறுகள் கூடிய அடையாளமே சமஸ்காரம் என்று அழைக்கப்படுகிறது.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் நம் உடம்பின் ஒவ்வொரு அசைவும் நாம் நினைக்கின்ற ஒவ்வொரு நினைவும் சித்தத்தில் ஒரு பதிவை விட்டுச் செல்கிறது. இந்தப் பதிவுகள் மேற்பரப்பில் தென்படாமல் இருக்கலாம். ஆனாலும் ஆழ்மனதில் நாம் அறியாமலே செயல்புரியும் அளவு வலிமை படைத்தவை. ஒவ்வொரு கணமும் நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை மனதில் உள்ள இந்தப் பதிவுகளின் மொத்தமே உருவாக்குகிறது.

-சுவாமி விவேகானந்தர்-

*மனத்தூய்மையே நேர்மை. மற்றவையெல்லாம் வெறும் கூச்சல்.*

# பணியும் பாராட்டும்

– **திரு இராம ஜெயபாலன்** அவர்கள் –

ஞானச்சுடர் ஒரு சமய சஞ்சிகை என்பதற்கப்பாலும், பதிவு செய்யப்பட்ட சட்ட ரீதியான வரலாற்று ஆவணம். மேலும் பாரம் பரிய சம்பிரதாயங்களைப் பின்பற்றி ஒவ் வொரு இதழும் முறைப்படி வெளியிட்டும் வைக்கப்படுகின்றது. தவிர ஆக்கங்கள் அனுப் பும் படைப்பாளிகளைச் சந்தித்து கலந்துரை யாடி படைப்பாளிகளைக் கௌரவித்தும் வருகின்றது.

இலங்கையில் இலக்கியப் படைப்புக் கள் வருமானம் தரும் தொழிலாக இல்லாத விடத்தும் சேவை நோக்காகவே இலக்கியங் கள் படைக்கப்பட்டாலும் கௌரவங்கள் காக் கப்படவேண்டிய தேவையினைக் கருத்தில் கொண்டு, காப்புரிமை, பதிவு செய்யப்பட்ட சஞ்சிகை காரணமாக உருவாகின்றது. எவ் வாறாயினும் ஒரு சஞ்சிகை பதிவுசெய்யப் படாதவிடத்தும் அந்த சஞ்சிகை அச்சிடப்பட்ட அச்சகம் முறைப்படி பதிவு செய்யப்பட்டிருந் தால் அந்த பதிவு செய்யப்படாத சஞ்சிகைக் கும் காப்புரிமை ஏற்படுகின்றது. ஆனால் பெரும்பாலான அச்சகங்கள் முறைப்படி சட்டப் படி பதிவு செய்யப்பட்டு இயங்குவதில்லை. அவ்வாறு அவை பதிவு செய்யப்பட்டிருந் தாலும் நிலைத்து நிற்பதும் இல்லை. இந்த வகையில் ஞானச்சுடர் முழுமை படுத்தப் பட்டிருப்பதும் முறையாகப் பதிவு செய்யப்பட்டு இருப்பதும் வரவேற்கத்தக்க சிறப்பம்சம்.

ஆனால் ஞானச்சுடரில் அவதானிக்கப் பட்ட ஒரு குறைபாடு, படைப்புக்களை நீண்ட காலம் வைத்திருந்து, அதாவது படைப்புக் களை அனுப்பிய படைப்பாளிகள் மறந்து போன பிற்பாடு படைப்பாளிக்கே ஆச்சரியமாக இருக்கும்வண்ணம் வெளியிடுவதாகும். ஆனால் தவறாது பெரும்பாலும் எல்லா ஆக்கங்களுக் குமே சந்தர்ப்பம் தருவது ஓரளவு ஆறுதலான விடயம்.

மேலும் நான் சந்நிதியான் ஆச்சிரமத் தில் அதிக ஈடுபாடு கொண்டதற்கு ஞானச்சுடர் தான் முக்கிய காரணம். நானொரு கற்றுத் தேர்ந்த இலக்கியவாதியோ அல்லது கல்வித் துறை சார்ந்த தொழில் பின்புலத்தை உடைய வனும் அல்ல. தவிர நானுமொரு இலக்கிய வாதியாக வேண்டுமென்ற ஆர்வம் காரணமாக இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவனுமல்ல. ஆனாலும் நானொரு சிந்தனைவாதி. எனது சிந்தனைகளை அடுத்தவர்களுக்கு எடுத்துச் செல்லும் ஊடகமாகவே தவிர்க்க முடியாது இலக்கியத் துறைக்குள் வந்தேன். ஆரம்ப காலத்தில் பேச்சாளனாகவும் பின் வசனநடை எழுத்தாளனாகவும் உருவானபோதும் என்னை ஒரு பண்பட்ட படைப்பாளியாக மாற்றியது கவிதைத்துறையே. ஆனாலும் கவிதை எனக் குத் தொழில் அல்ல. கருத்தை சொல்லும் வழியாகவே கவிதைக்குள் காலடியெடுத்து வைத்தேன். ஞானச்சுடர் சஞ்சிகையில் கவிதை எழுதி எழுதி என்னை வளர்த்துக்கொண்டேன். மேலும் கவிதை எழுதுவதில் எனக்கான தனி வழியையும் சமைத்துக் கொண்டேன்.

என்னை அறிமுகப்படுத்தி வளர்த்தும் விட்டது ஞானச்சுடர் சஞ்சிகை. இன்று நானும் ஞானச்சுடருடன் இணைந்து பயணித்த

காலத்தைக் கணக்கிட்டால் நானும் ஒரு மூத்த படைப்பாளி. அதாவது கவிதையில் தத்தித் தத்தி நடைபயின்று எனது அறிவுக்கு எட்டிய வடிவத்தில் கவிதை புனைந்து மரபுவழிக் கவிஞர்களுக்கு நிகராக இல்லாவிட்டாலும் எனக்கான தனித்துவ முத்திரையைப் பதித்தேன்.

ஆகவே, நான் யார்? என்று அறிந்திராதவர்கள் முன்பாக என்னை அறிய வைத்தது ஞானச்சுடர் சஞ்சிகையே, மேலும் என்னாலும் முடியும் என்று சாதிக்க சந்தர்ப்பம் தந்ததும் ஞானச்சுடரே. ஞானச்சுடருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

## யாமிருக்கப் பயமேன்?

கந்தா கதிர்வேலா
கடம்பா கார்த்திகேயா

மாம்பழம் வேண்டி மயிலினில் உலகம் சுற்றி
பழனியில் அமர்ந்த பாலகுமாரா - கந்தா

ஆணவம் கொண்ட பிரமனைத் தலையிற் குட்டி
சிவனுக்குப தேசித்த சுவாமி நாதனே - கந்தா

சூரரை அழித்து தேவர்களைக் காத்து
இந்திரன் மகளாம் தேவயானையை மணந்த - கந்தா

வள்ளியை மணந்து வண்ணத்தமிழ் வடிவெடுத்த
உள்ளம் கவர்ந்து சந்நிதியில் காட்சிதரும் - கந்தா

ஔவைக்கும் அருணகிரிக்கும் அருள்தந்து பாடவைத்து
தொன்மை வினையகற்றி நன்மை எமக்களிக்கும் - கந்தா

தொண்டைமானாறு தன்னில் தூயநீராடிடவே
அண்டிவரும் நோய்களெல்லாம் அகன்று அருள்பெறுவோம் - கந்தா

அன்னதானக் கந்தனென்று சந்நிதியில் அமர்ந்திருந்து
வண்ணவடிவேல் கொண்டு வல்வினைகள் போக்கிடுவான் - கந்தா

மோகனப் புன்னகையில் மோகனதாஸ் சுவாமிகளாய்
அருமருந்தன்னதிரு அன்னம் எமக்களிக்கும் - கந்தா

யாமிருக்கப் பயமேன் என்றே அபயம் தந்து
சந்நிதியில் எழுந்தருளி எந்நிதியும் எமக்களிக்கும் - கந்தா.

~யூ.பி. ஆனந்தம்~

*கலங்கமற்ற மனது மிகச் சிறந்த அறிவாற்றலைவிட மேலானது.*

# பாடசாலைகளில் இந்துசமயக்கல்வி சமகாலப் பிரச்சினைகளும் தீர்வுகளும்

– **திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன்** அவர்கள் –

**அறிமுகம்**

எல்லாப் பிறப்பினுள்ளும் மானிடப் பிறப்பு ஒன்றே மாண்புமிக்கது. உயிர்கள் எனப்படுபவை ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ளன. ஆனால் ஆறறிவும் நிறையப் பெற்றவர்கள் மானிடர்களே. இந்த ஆறாம் அறிவானது சிந்தித்து, துணிந்து செயலாற்றும் பகுத்தறிவாகும். இதன் காரணமாகவே வள்ளுவரும்,

"சென்ற இடத்தால் செலவிடாதீது ஒரீஇ
நன்றின் பால்உய்ப்பது அறிவு"

எனக் குறிப்பிடுகின்றார். நன்று, தீது, நீதி, அநீதி எனப் பகுத்தறியும் ஆற்றல் மனிதன் ஒருவனுக்கே உண்டு. இத்தகைய சிறப்பாற்றலை மேலும் வளர்த்துக்கொள்ள மனிதன் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும். கல்வி மக்களது அறிவு வளர்ச்சிக்கு உதவும் கருவி ஆகும். உலக வாழ்க்கைக்கு கல்விப்பொருள், செல்வப் பொருள் ஆகிய இரண்டும் வேண்டப்படு வதாயினும், செல்வப்பொருள் "கூத்தாட்டும் அவைக்குழாம்" போன்று வந்த இடம் தெரியாமற் சென்றுவிடும். ஆனால் கல்விப்பொருளோ ஏழு பிறப்பிலும் தொடரும் தகைமையது. இதனை,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

எனக் குறிப்பிடுகிறார் பொய்யாமொழிப்புலவர்.

ஒழுக்க நெறியைப் புகட்டி, அறநெறிப்படி நிற்கச் செய்யும் கல்வியே சமயக்கல்வி. சமயக்கல்வியானது தனிப்பட்ட நபரின் வாழ்க்கையையும், அதே நேரத்தில் நாட்டின் சமூகங்களின் ஒழுக்க கலாசாரத்தையும் உருவாக்கும் ஒரு பலம் பொருந்திய கருவியாக விளங்குகின்றது. இந்து சமயம் சார்ந்த வாழ்வு இவ்வுலகில் எதிர்ப்படும் பிரச்சினைகளை மனத்துணிவுடனும், உறுதியுடனும், வீரத்துடனும் அணுகும் மனப்பக்குவத்தை அளிப்பதாக உள்ளது. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று அப்பரைத் துணிவுடன் செல்ல வைத்தது சமய வாழ்க்கையின் விளைவே எனலாம். சமய வாழ்வு பலத்தையும் விடுதலையையும் அளிக்கின்றது.

வாழும் நாள் அளவிட்டுக் கூறமுடியாதாயினும் வாழும்வரை நல்வழியில் கழிப்பதே அறிவுக்கு உகந்ததாகும். "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம், இன்ன காலத்தில் இந்த சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்" என்ற நாவலரின் கருத்து குறிப்பிடத்தக்கது. மேலும், எல்லா நலனுக்கும் இருப்பிடம் இறைவனே. அவனை அறிவுத் தெளிவினால் தூயமனத்தால் நினைக்க, வணங்க எல்லா நலனும் வந்தெய்தும். நல்லெண்ணங்களினால் இதயம் நிறைந்திருப்பின் வாக்கிலிருந்து நல்லினிய மொழிகளே

*தன்னை விலையாகக் கொடுப்பவனுக்கு ஞானம் தன்னைக் கொடுக்கிறது.*

பிறக்கும். "உள்ளத்தில் ஒளி உண்டானால் வாக்கினில் ஒளி உண்டாகும்" என்ற கூற்று இவ்வுண்மையை தெளிவாகப் புலப்படுத்தும். ஆகவே எண்ணங்களைத் தூய்மை பெறச் செய்தல் வேண்டும். இதற்கு அவசியமானது சமய சன்மார்க்கமே. இதனைக் கல்வியின் மூலமே குறிப்பாக சமயக்கல்வியினூடாகவே உண்டாக்கிக்கொள்ள முடியும் என்று விபு லானந்த அடிகளும் உரைத்துள்ளமை சமயக் கல்வியின் தாற்பரியத்தை எடுத்துக் காட்டுகின்றது.

ஆதலால் சமயக்கல்வியை உரிய முறைப்படி புகட்டுவது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. சமய பாடத்தின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது வெறும் போதனையாகவோ அல்லது பரீட்சை நோக்காகவோ அமையாமல் நடைமுறைப் பாங்கு உடையதாக அமையவேண்டியது அவசியம் ஆகும். இவ்விலக்கை அடைவதில் பாடசாலை மட்டத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு, இந்து சமய கல்வி வளர்ச்சிக்கான சிந்தனைகளை எடுத்துரைக்கும் நோக்குடன் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

கல்வி சமயத்தின் அடிப்படையில் வளர்த்து எடுக்கப்பட வேண்டும் என்பதையும், அறிஞர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை ஜேம்ஸ் ரோஸ் எனும் அறிஞர்.

"வளர்ந்து வரும் மக்கட் சமுதாயத்தில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி, அரசியல் தவறுகளால் மனிதனிடம் ஏற்படக்கூடிய மிருகப் பண்புகளைக் களைந்தெறிவதற்குக் கல்வி சமயத்தின் அடிப்படையில் வளர்த்து எடுக்கப்பட வேண்டும்" என்கிறார்.

ஜேம்ஸ் ரோஸின் இக்கருத்து யாழ்ப்பாணத்தில் சமீப காலங்களில் அரசியல் தவறுகளால் எம்மக்களிடம் ஏற்பட்ட தவறான பண்புகளை களைந்தெறிவதற்கு கல்வி சமயத்தின் அடிப்படையில் வளர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அவசரத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. அதேபோன்று ஆறுமுக நாவலரும் நான்காம் பாலபாடத்தில்.

"சமயமே குழந்தையை நல்லவனாக உருவாக்குவதில் அதிக பங்கைச் செலுத்துகின்றது. குழந்தையின் சமய நம்பிக்கைக்குத் தீங்கு வரக்கூடிய வகையில் கல்வி அமையுமானால் கல்வியின் பயன் அற்றுவிடும்" என்கின்றார்.

இவ்வகையில் கல்வி சமயத்தின் அடிப்படையில் அமையுமாற்றை அறிந்து உணரலாம்.

எமது வாழ்வியலில் இந்துசமயக் கல்வி முன்பள்ளியில் இருந்து பல்கலைக் கழகம் வரை இடம்பெறுகின்றது. பாடசாலைக் கல்வியில் சமயக்கல்வி கட்டாய கல்வியாக அமைவதும், உலக பல்கலைக்கழகங்களிலே இந்துநாகரிகத்திற்கு எனத் தனித்துறை 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகம் ஆரம்பிக்கப்பட்ட பொழுதில் முதல் முதலாக உருவாக்கப்பட்டதும், 2019ஆம் ஆண்டு இந்துக் கற்கைகள்பீடம் என தனியான ஒரு பீடம் முதன் முதலாக உருவாக்கப்பட்டதுமான பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விளங்குவதும் இலங்கைத் திருநாட்டிலேயே ஆகும். பாடசாலைகளில் சைவநெறி எனும் சொற்பிரயோகமே நடைமுறையில் உள்ளபோதும், இங்கு இந்து சமயம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் "சைவம் என்ற பெயரைக் காட்டிலும், இந்து என்ற பெயரே சர்வதேச ரீதியில் வழங்குவதால் சைவத்தை இந்து என்று வழங்குவது தவிர்க்க முடியாதவாறு உலகப் பிரசித்தி பெற்று விடுகின்றது"

எனப் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் இந்து என்றால் சைவம் என்றும்

சைவம் என்றால் இந்து என்றும் தெளிவு படுத்தியுள்ளார். பாடசாலைக் கல்வி வாழ்வியலில் உயர்தரக் கல்வி இந்து சமயத்தினை ஆழமாகவும், அகலமாகவும் விரித்துப் பார்க்கின்ற கல்விப் பிரிவாக அமைகின்றது. பல்கலைக்கழகக் கல்வி இந்துசமயத்தினை ஆய்வு நிலையில் நோக்குகின்ற கல்வியாக அமைகின்றது. தேசியகல்வி நிறுவகம், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வியியற் கல்லூரி போன்ற நிறுவனங்கள் ஆசிரிய மாணவர்களுக்கு சமயத்தைப் பயிற்றுவிக்கின்ற கல்விக்கூடங்களாக அமைகின்றன. இதில் பாடசாலைக் கல்வி மிகவும் முக்கியமானது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து", "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரையும்", "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற தொல் பழங்கூற்றுக்கள் இளமைக் கல்வியின் முக்கியத்துவத்தினைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

## பாடசாலைகளில் இந்துசமயக் கல்வி எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்

பாடசாலை மாணவர்களுக்குரிய இந்து சமயப் பாடநூல்கள் எவ்வளவு தூரத்திற்குப் பொருத்தமுடையன என்பது ஆராயவேண்டிய ஒன்று. அதாவது பாடப்பொருளை எடுத்துக் கொண்டால் அவற்றுள் பல தகவல் தொகுப்புகளாகவும், நினைவில் நிறுத்த வேண்டியவையாகவும், பொருள் கூறத் தேவை உடையனவாகவும் காணப்படுகின்றன. இவை போதனைக்குரிய விடயங்களாக அமைகின்றதே ஒழிய, சாதனைக்குரிய நடைமுறை விடயங்களை அரிதாகவே கொண்டுள்ளது என்பது பாடநூல்களின் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

சமயபாடச் செயற்பாடுகள் நடைபெறும் சூழல் புனிதத்தன்மை நிறைந்த ஒன்றாக அமையாதது பெரும் குறைபாடாக எமது பிரதேச கல்விச் சமூகத்தில் காணப் படுகின்றது. அதாவது கற்றல் கற்பித்தல் நடைபெறுகின்ற பாடசாலை சூழல் சமய பாடத்தைப் போதிப்பதற்கு பொருத்தமற்றதாக காணப்படுகின்றது.

எமது பிரதேச கல்விச்சமூகத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நடத்தைக் கோலங்கள் இந்துசமய, பண்பாட்டு விழுமியங்களை பெருமளவுக்கு புறந்தள்ளியதாகக் காணப்படுவது பெரும் குறைபாடாக அமைகின்றது. மாணவர்கள் மத்தியில் சமய, அறநெறிகளின் பிறழ்வே இன்றைய சமூக, கலாசார சீர்கேடுகளுக்குக் காரணமாகும். மேலும், கல்விச் செயற்பாட்டில் எமது வாழ்வியல் செல்நெறிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட பரீட்சையை நோக்காகக் கொண்டு அமைவது இந்துசமயக் கல்வியின் பின்னடைவுக்குக் காரணமாக அமைகின்றது எனலாம்.

மேலும், சமயபாடத்தை எல்லா ஆசிரியர்களும் கற்பிக்கலாம் என்ற பிற்போக்கான எண்ணமும் பாடசாலை மட்டத்தில் நிலவி வருவது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மிகவும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

சமயக் கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு மேலாக சமூகத்தில் உள்ள சமய பொது நிறுவனங்கள், ஆலயங்கள், சமயப் பெரியார்கள், மற்றும் பெற்றோர்கள் அதிகூடிய கவனம் செலுத்தாமை பிரதேச வளர்ச்சியைப் பாதிக்கும் அம்சமாக உள்ளது.

பொதுவாக எமது பிரதேச பாடசாலைக் கல்வி நடைமுறையில் ஏனைய பாடங்களுக்கு (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்....) கொடுக்கப்படும் முக்கியத்துவம் எமது வாழ்வைச்

செம்மைப்படுத்தும் சமயக் கல்விக்குக் கொடுக்காமை சமூகத்தின் பின்னடைவிற்கு ஒரு காரணமாக அமைகின்றது. அதாவது, சமய பாடத்தை அரசு, பாடசாலைக் கல்வியில் கட்டாய பாடமாக்கிய அதேவேளை அதன் கற்பித்தலுக்குரிய பாடவேளையில் கவனம் செலுத்தாதது கவலைக்குரிய விடயமாகும். அதுமட்டுமல்லாது, பாடசாலைகளில் நடைபெறும் சமயம் சார்பான நிகழ்வுகளில் ஆண்களைவிட பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பதுடன், கணித, விஞ்ஞான மாணவர்களைவிட கலைத்துறை மாணவர்களின் பங்கு கூடியளவு இருப்பதும் கண்கூடு. இவ்வாறான சமநிலையற்ற பங்களிப்பு ஆசிரியர் மாணவர்களிடையே பாடத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கின்றது.

எமது பிரதேச ஆலயக் கிரியைகளின் பின்னணியில் "பஞ்சபுராணம் ஓதுக" என சிவாச்சாரியார் கூறும்போது இளம் தலமுறையினர் பாடுவதற்குத் தயங்கும் நிலை காணப்படுகின்றது. ஏனெனில் பாடசாலையில் சமயக் கல்வியைக் கற்பிக்கும்போது கலைகளுடன் இணைத்துக் கற்பிக்காமையே இதற்குரிய காரணமாக அமைகின்றது.

## முன்மொழிவும் தீர்வுகளும்

மெய்ஞானமும், விஞ்ஞானமும் கலந்த சமயமாக எமது இந்து சமயம் விளங்குகின்றது. ஆதலினால் சமயம்சார் கருத்துக்கள் விஞ்ஞான நிலையில் முன்வைக்கப்படும் போது எமது வாழ்வியல் நீரோட்டத்திற்கு நம்பிக்கையுடன் கூடிய பிணைப்பு ஏற்பட வாய்ப்புண்டு. நாம் வாழும் சூழலை எதிரியாக நோக்காது, நட்புடன் கூடிய ஒரு சூழலை ஏற்படுத்தக்கூடிய ஒரு மார்க்கமாக இந்து சமயம் விளங்குகின்றது. இச் சந்தர்ப்பத்திலே கலாநிதி அல்பேட் ஐன்ஸ்ரைன் அவர்களது கருத்தை நோக்கினால் "விஞ்ஞானம் கலவாத சமயம் நொண்டி, சமயம் இல்லாத விஞ்ஞானம் குருடு" என்கிறார். இதேபோல விஞ்ஞானத்தை ஒரு சமயம்போலக் கருதி அதனை விட வேறு ஒன்றுமே இல்லை என நம்பும் நவீனர்களுக்கு சமயத்தையும், விஞ்ஞானத்தையும் அறிந்த கல்விமான்கள் பல கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றமை வியக்கத்தக்கது.

மேலும் டாக்டர் இராதகிருஷ்ணனும் "சமயம் என்பது ஒரு வாழ்க்கை வழி" என்று குறிப்பிடுகின்றார்.

எனவே, இந்துசமயத்தில் ஆழமாகக் காணப்படும் வாழ்வியல் உண்மைகளை விஞ்ஞான ரீதியில் தெளிவுபடுத்துவதன் மூலம் மாணவர்கள் மத்தியில் சமய விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிறந்த ஆரோக்கியமிக்க மனித வாழ்வைக் கட்டியெழுப்ப முடியும். அந்தவகையில் பாடசாலை மாணவர்களின் இந்துசமயப் பாடப்புத்தகங்களில் சமய அறிவியல், சமய விழுமியம் சார் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக சீர்திருத்தம் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இந்து சமயத்தைக் கற்பிக்கும் பாடசாலைகள் புனிதத் தன்மைகொண்டு விளங்குதல் அவசியமாகும். அதாவது பாடசாலைகளில் பிரார்த்தனை மண்டபங்கள், ஆலயம், வாத்தியக் கருவிகள் போன்ற பௌதீகக் கட்டுமானங்கள் இருப்பதுடன், சமய விழுமியங்களான புலால் உண்ணல், தீய செயற்பாடுகளைத் தவிர்த்தல், அறநெறியுடன் வழி நடத்தல் போன்ற நற்செயற்பாடுகள்மூலம் பாடசாலை புனிதத்தன்மை அடைவதுடன், கற்றலுக்குரிய சூழலும் சிறப்பானதாக அமையும். மேலும், கல்விச் சமூகத்தில் மதிக்க

வேண்டியவற்றை மதிக்காமையும், மதிக்கத் தகாதவற்றை மதித்தலும் விலக்கப்படல் வேண்டும். பாடசாலைகளில் குறிப்பாக இந்துப் பாடசாலைகளிலாவது கொடுக்கப்படும் மதிய உணவு அசைவ உணவாக இருத்தலைத் தவிர்த்தல் வேண்டும்.

ஆசிரியர், மாணவர்களுடைய நடத்தைக் கோலங்களும் கலாசாரப் பண்பை வளர்க்கக்கூடியனவாக அமையும். குறிப்பாக ஆசிரியர், மாணவர்களுடைய சமய, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய நடத்தைக் கோலங்கள் சிறந்ததொரு கல்விச் சமூகத்தை உருவாக்கும்.

பாடசாலையில் நடைபெறும் விழாக்களிலோ, ஆலயங்களில் இடம்பெறும் விழாக்களிலோ மாணவர்கள் பங்கேற்கும்போது வேட்டி, சேலை கட்டுதல், சிவசின்னங்கள் அணிதல், மாலை வைத்தல் போன்ற சமய, கலைத்துவ பண்பாட்டு அம்சங்களுடன் பங்கேற்றுச் சிறப்பித்தல் இந்து சமய மேன்மைக்கு வழிசமைக்கும். அதற்கு இந்துசமய கலாசார விழுமியங்களை சிரேஷ்ட இடைநிலை மாணவர்களுக்கு ஒழுங்காக எடுத்து விளக்குவோமேயானால், இந்து சமயத்திற்கு அழிவே இல்லை. சிரேஷ்ட மாணவர்களால் இடைநிலை மாணவர்களுக்கும் இவர்களால் ஆரம்பநிலை மாணவர்களுக்கும் இவ்விடயங்கள் எடுத்துரைப்புச் செய்யப்படுதல் நலம் பயக்கும்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உயர்மட்ட செயற்பாடுகளுக்காக அரசு, பாடசாலைகளுக்கு நிதியை வழங்குகின்றது. மேற்படி உயர் மட்டச் செயற்பாடானது மாணவர் உயர்மட்ட செயற்பாடு ஆசிரியர் உயர்மட்டச் செயற்பாடு என இருவகைப் படுத்தப்படுகிறது. இந்நிதியின் முக்கிய நோக்கம் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு தெரியாத அல்லது புதிய விடயங்களை புலமைசார் வள ஆளணியினர்களின்மூலம் பயிற்றுவிப்பதாகும். இதன்மூலம் ஆளுமை விருத்தியை இரு சாராரும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்நிதியினை சமயக் கல்விச்செயற்பாட்டுக்கும் பயன்படுத்துவதன் ஊடாக பாடசாலையில் இந்துசமய கல்வியை வளர்த்தெடுக்கலாம்.

எமது பிரதேச பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களுக்குச் சமயக் கல்வியை கற்பிப்பதில் ஆசிரியர் பங்கு முக்கியமானது. ஆசிரியர்கள் வெறுமனே புத்தகங்களுடன் உறவாடுபவர்கள் அல்லர். உயிரும், உடல் உள்ளமும், உணர்வுமிக்க இளம் சிறார்களுடன் உறவாடுபவர்கள். அவர்கள் எதிர்காலத்திற்கான பாதையைச் செப்பனிட்டுக் கொடுப்பவர்கள். தனியாள் வேறுபாடுகளை உடைய உளவியல் பருவங்களின் இயல்பான நடத்தைகளுக்கு உட்பட்ட மாணவர்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் அணுகி தக்க பரிகாரங்கள் காண்பதற்கும், வகுப்பறையில் பொருத்தமான கற்பித்தல் நடைமுறைகளை மேற்கொள்வதற்கும், கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்கு நல்லாசிரியன் தேவை அவசியமாகின்றது. கட்டிளமைப்பருவ மாணவர்களுக்கு இந்துசமய விழுமியங்களுடன் இணைந்த சமயக் கல்வி கற்பிக்கும் ஆசிரியரும், அன்பும் பொறுமையும் கொண்ட ஆசிரியராகவும், கலைஞானமுள்ளவராகவும், சமய அறிவு பயிற்றப்பட்டவராகவும் இருப்பதன்மூலம் மாணவர்கள் மிக்க ஆர்வமுடன் கற்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். குறிப்பாக சிரேஷ்ட நிலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு

இந்துநாகரிகம், இந்து சமயத்தை பல்கலைக் கழகத்தில் சிறப்புக் கலையாக பயின்ற மாண வர்கள் கற்பிப்பது சாலப்பொருத்தமானதாகும்.

அடுத்து, சமயக்கல்வியைப் பாடசாலை யில் கற்பிப்பதாலோ அன்றி ஒழுக்கத்தைப் போதிப்பதாலோ மாத்திரம் மாணவர்களை சமயவயப்படுத்த முடியாது. கற்பித்தல் சிறப் படைவதற்கு ஆசிரியர் கற்பித்தல் செயற்பாடு சிறப்பிடம் பெறவேண்டிய அதேவேளை மாண வரது சமய ஈடுபாடும், கற்றல் ஆர்வமும் எதிர் பார்க்கப்படவேண்டிய ஒன்று. அது மட்டுமல் லாது மாணவர்களுடைய ஆன்மீக வளர்ச்சி யில் பெற்றோர், உறவினர்கள் அவர்கள் வதி யும் சமூகத்தில் வாழ்வோர் மற்றும் ஆலயங் கள், சமய நிறுவனங்கள், சமயப் பெரியார்கள், அறநெறிப் பாடசாலைகள் ஆகிய அனை வரும் பங்கெடுத்துக்கொள்ளும்போதுதான் மாணவர்கள் மேன்மையடைவார்கள்.

அடுத்து, சமயத்தைக் கற்பிக்கும் போது கலைகளுடன் இணைத்துக் கற்பித்தல் மாணவர்களிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத் தும் செயற்பாடாக அமையும். குறிப்பாக சங் கீத ஞானமுடைய ஆசிரியர்கள் சமயம் கற் பிக்கும்போது தோத்திரங்களை பண்ணுடன் கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். பண்ணுடன் கற்பதினால் மாணவர்கள் இலகுவாகப் பாட லின் பொருளை விளங்கவும், மனதில் பதிய வைக்கவும் முடிகின்றது. பாடசாலைக் கல்வி யிலே இசையுடன் தோத்திரங்கள் ஓதும் பழக் கத்தை ஏற்படுத்துவது காலத்தின் தேவை யாகும். மேலும் புராணபடனத்தை மாணவர் களைக் கொண்டு செய்வித்தல், நாடக முறை, பிரசங்க முறை, வில்லுப்பாட்டு போன்ற கலை களுடன் இணைத்துக் கற்றல் செயற்பாடு களை மேற்கொள்ளுதல் சிறந்தது. ஓய்வு நேரத்திற்கான கல்வியில் பயன் உள்ள பல் வேறு ஓய்வுநேர செயல்களுக்கான கவர்ச்சி களை மாணவர்களிடையே தோற்றுவிக்க வேண்டும். பிற உயிர்கள்மீது அன்பு காட்டுதல், சேவை செய்தல், சூழல் மாசடையாது பேணல் போன்ற மனிதனை மனிதனாக்குகின்ற சமய விழுமியக் கல்வியை மாணவர்களுக்கு உரிய முறைப்படி புகட்டுவோமேயானால் சமீப காலங்களில் எம்மத்தியில் நிகழ்கின்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாத் தல், போரினால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுதல், நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாத்தல், முதியோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்குத் தேவையான பராமரிப்புக்களைச் செய்தல் போன்ற செயற் பாடுகளைச் செய்து ஓய்வு நேரத்தைப் பயனுள்ள பொழுதாக மாற்றுவர். இதன்மூலம் நாகரிகமுள்ள சிறந்த சமூகத்தை உருவாக் கிக்கொள்ள முடியும்.

பாடசாலைகளில் நடைபெறுகின்ற எந்தவொரு சமய நிகழ்வுகளிலும் சகல துறை மாணவர்களும் விருப்புடன் கலந்து கொள்வது அவசியம். மனிதன் மனிதனாக வாழவேண்டுமாயின் சமயம் அவசியம் என் பதை மாணவர்கள் உணரவேண்டும். எனவே தான் சுவாமி விவேகானந்தரும் "சமயத்தைச் சமுதாயத்திலிருந்து எடுத்துவிட்டால் மிஞ்சு வது காட்டு மிராண்டிகளின் கூட்டமே" என்கின் றார். இதை மாணவர்களுக்கு உணர வைத்து செயல் வடிவம் கொடுப்பது காலத்தின் தேவையாகவுள்ளது. எனவே இதனை பாட சாலைக் கல்வியின் மூலமாக சீர்படுத்த முயலுவோமாக.

*நேர்வழியில் அடைய முடியாததை ஒரு நாளும் தவறான வழியில் அடைய முடியாது.*



ஞானச்சுடர் தைமாத மலரின் சிறப்புப்பிரதி பெற்றவர்களுடன் அன்றைய
நிகழ்வில் வெளியீட்டுரை ஆற்றிய திரு மு. கௌரிகாந்தன் அவர்களும் மதிப்பீட்டுரை நிகழ்த்திய
திரு ஆ.சிவநாதன் அவர்களும்.





தை மாத ஞானச்சுடர்
சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்....





தை மாத ஞானச்சுடர்
சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்....





(மேலே) பொலநறுவை சாரதா அறநெறிப் பாடசாலை மாணவியான செல்வி செள. நிதுஜா என்பவருக்கு மடிக்கணனி வழங்கப்பட்டபோது...

(கீழே) உடுப்பிட்டி S. தாமோதரம் என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டபோது...






அண்மையில் வன்னிப் பாடசாலைகளுக்கு
குடிநீர் சுத்திகரிப்பு சாதனங்கள் வழங்கப்பட்டபோது...



# கதிர்காம யாத்திரை —எனது அனுபவம்— (தொடர்ச்சி...

-செல்வி சி. நிலா அவர்கள்-

எமது வாழ்வு சிறக்க ஒவ்வொருவர் மனதிலும், சிந்தனையிலும் இறை நம்பிக்கை இருக்க வேண்டும். அவ் எண்ணத்தோடு எமது வாழ்வு அமையுமானால் ஒருவித இடர் பாடுகளும் வராது. அவ்வகையான எண்ணத்துடன் "அல்லும் பகலும் சந்நிதியான் எல் லாம் பார்த்துக் கொள்வான். அவன் செய்விக்கின்றான். நான் வெறும் கருவி. அவன் என் மனதில் ஏற்படுத்தும் எண்ணக் கருவுக்கமைவாக செயற்படுத்திக்கொண்டு இருக்கின் றேன். அதில் ஏற்படும் தடங்கல்களை அவன் பார்த்துக் கொள்வான்" என்று திடசங்கற் பத்துடன் இருப்பவர்தான் எமது ஐயா. அவர் ஆற்றும் பணிகளுக்கு தடைகள் ஏற்பட சந்நிதியான் பார்த்துக் கொண்டிருப்பானா? தாந்த மலை அடிவாரத்திலும் அவன் அருளைப் பேருந்தில் வந்த அனைவரும் உணரக்கூடியதாக இருந்தது.



மலை ஏறிய களைப்பில் நாம் அனைவரும் ஐயா உட்பட பேருந்தில் ஏறி, சரி வழியில் எங்காவது வர்த்தக நிலையம் இருக்கும் இடத்தில் பார்ப்போம் என்று கூறியதற் கிணங்க எமது பேருந்து புறப்பட ஆயத்தமான வேளை ஒரு நடுத்தர வயதையொத்த அம்மையாரும் ஒரு இளைஞனும் எம்மை அணுகி மோகன் சாமி என்பவர் உங்களோடு வந்திருக்கிறாராம். அவர் இங்கே இருக்கின்றாரா என்று கேட்டபொழுது ஐயா உடனே எழுந்து நான்தானம்மா என்ன வேண்டும் என்று கேட்டதோடு, ஒருவித அறிமுகமும் இல்லாத நீங்கள் யாரம்மா என்றபடி அவர்களை அணுகினார். அவர்கள் நாங்கள் ஆலயத்தில் நடை பெற்ற உற்சவத்திற்கு வந்ததாகக் கூறியபொழுது, உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று ஐயா கேட்டார். அப்போது அவர்கள் இருவரும் நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். நீங்கள் இங்கே வருவதாகவும், வரும்பொழுது இந்தச் சோடாப் போத்தல்களை

உங்களிடம் கொடுக்கச் சொன்னவர்கள் என்று கையில் கொண்டுவந்த பையினுள் இருந்து 2 பெரிய நெக்றோ போத்தலை எடுத்து ஐயாவிடம் கையளித்தார்கள். பேருந்தில் இருந்த அனைவருக்கும் ஒரே ஆச்சரியம். ஆனாலும் ஐயா அவர்களைப் பார்த்து அம்மா பேருந் தினுள் முப்பதுபேர் வரை இருக்கின்றோம். இந்த இரண்டு போத்தல்களும் காணாது. குறைந்தது நாலு போத்தலாவது வேண்டும். உங்களுக்கு ஏன் இந்தச் சிரமம். நாங்கள் போகும் வழியில் பார்க்கின்றோம் என்று ஐயா கூறியதும் அம்மையாருடன் வந்த இளை ஞன் எங்கோ சென்று வரும்பொழுது கையில் இன்னும் இரண்டு நெக்றோ போத்தலுடன் வந்து ஐயாவிடம் கொடுத்து இது போதும்தானே என்று கேட்டபொழுது ஐயாவும் ஏதோ உணர்ந்ததுபோன்று போதும் என்று கூறியதும் அவர்கள் இருவரும் அவ்விடத்தைவிட்டு அகன்றார்கள்.

ஐயாவும் எல்லாம் சந்நிதியானின் திருவருள் ஏதோவகையில் எம்மோடு இணைந்து வந்து எமது தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிக்கொண்டு இருக்கின்றான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று பெரியோர்கள் கூறியது சரியாகவே என் வகையில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்விடயங்களை நீங்களும் அனுபவ வாயிலாக உணர்வதற் கான பாடமே இவ்வகையான தலயாத்திரைகளை ஒழுங்குபடுத்தி அடியார்களாகிய உங்க ளோடு நானும் கலந்துகொண்டு வருவது என்று ஐயா கூறியதும் அவர் கூறிய கூற்று உண்மை என்பதை நான் உட்பட அனைவரும் உணர்ந்து கொண்டோம்.

தாந்தாமலை வழிபாட்டை முடித்து கொக்கட்டிச்சோலை சிவனை வழிபடுவோம் என்று ஐயா கூறியதற்கிணங்க எமது பேருந்து கொக்கட்டிச்சோலையை அடைந்தது. நாம் போன சமயம் ஆலய மாலைப் பூசை நிறைவடைந்த சமயம். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில அடியார்களை ஆலயச் சுற்றாடலில் காணக்கூடியதாக இருந்தது. நாமும் எமது பேருந்தினைவிட்டு இறங்கி வெளியில் காணப்பட்ட நீர்த்தொட்டியில் உள்ள நீரை எடுத்து கைகால் முகம் கழுவி ஆலயத்தினுள் நுழைந்தோம். உள் நுழையுமுன் ஆலய வெளிப் பிரகாரத் தை உற்றுநோக்கியபொழுது எங்கும் பெரிய இலுப்பை மரங்கள் பூவும், காயுமாக இருந்ததுடன், இலுப்பம்பூ வாசனை மூக்கைத் துளைத்தது. அவ் வாசனையை நுகர்ந்தபடி ஆலய வாசலை அடைந்தேன். ஆலய வாசலை அண்மித்து மேலே நோக்கியபோது ஒரு பெரிய தேன் குளவிக் கூட்டினைப் பார்த்தேன். என்னடா இது ஆலய வாசல் முகப்பில் இவ்வளவு பெரிய தேன் கூடா? ஏன் இதனை இவ்விடத்தில் விட்டிருக்கின்றார்கள். யாருக்கும் குளவி கள் குத்துவதில்லையோ என்ற சிந் தனையோடு அருகில் நின்ற ஒரு பெரியவரைப் பார்த்து இவ்விடயம்



பற்றிக் கேட்டபொழுது, அவரும் சிவனது அபிஷேகத்துக்காகத்தான் இத் தேன்கூடு அமைந்திருக்கின்றது என்று கூறியதும் எனக்கு ஒரே ஆச்சரியம். எந்தவகையில் என்று நான் திருப்பிக் கேட்டபொழுது இத் தேனீக்கள் சேர்க்கும் தேனை எடுத்துத்தான் சிவனுக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு பூரணை அன்றும் நீண்ட மெல்லிய கம்பியின்மூலம் தேன்கூட்டின் நடுப்பகுதியில் குத்தி கம்பியின் மறு முனையில் ஒரு வாயகன்ற போத்தலை வைத்து விடுவார்கள். கம்பியின் வழியாக வடிந்து அதற்குள் நிறையும் தேனை எடுத்துத்தான் சிவனது அபிஷேகத்துக்கும் ஆலய மறு தேவைகட்கும் பாவிப்பார்கள். வருடத்தில் ஒரு சில மாதங்களைத் தவிர மற்ற மாதங்களில் எல்லாம் இத் தேன்கூட்டைக் காணலாம். அவர் கூறியதைக் கேட்டு சிவனது அருளை வியந்தபடி எமது வழிபாட்டை முடித்து உட்பிரகாரத்தைச் சுற்றி வந்தபோது கூட்டில் அடைக்கப்பட்ட ஒரு சில மான்களையும், மயில்களையும் காணக் காணக்கூடியதாக இருந்தது.





இவ்விடயங்களையும் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் மலரில் எழுதுவதற்கு காரணம் ஐயாவிடம் உள்ள மகிமைகளை மிகைப்படுத்தி எழுதுவது என்று வாசகர்களாகிய யாரும் நினைத்துவிடக் கூடாது. உண்மைப் பதிவுகளையும் என்னால் உள்வாங்கப்பட்ட அனுபவப் பாடங்களையும்தான் எழுத்துருவில் வடித்துக் கொண்டிருக்கின்றேன். அதுவும் ஐயாவின் ஒருசில நிபந்தனைகளுக்கு அமைவாகத்தான்; அதாவது ஒன்றையும் மிகைப்படுத்தி எழுதவேண்டாம். உனது அனுபவத்தை மட்டும் எழுது என்று கூறியதற்கிணங்க இக்கட்டுரைத் தொடரை எழுதுகின்றேனே தவிர வேறொன்றுமில்லை. இத் தொடர்பற்றி பல அன்பர்கள் நேரிலும் தொலைபேசியூடாகவும் என்னை உற்சாகப்படுத்தி வருவது, தொடர்ந்து எழுத வேண்டும் எனும் ஆர்வத்தைத் தூண்டி வருகிறது. அன்பர்களின் கோரிக்கைக்கு அமைவாக இத்தொடர் வளரும். (தொடரும்...

# ஞானச்சுடர்

மாசி

2020

266ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்**
**தீமை யிலாத சொலல்.**

**பொருள் :** மெய்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின், அது தன்னைப் போன்ற உயிர் வகைகளுக்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல். (291)

**பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.**

**பொருள் :** பொய்யான சொற்களும் பிறர்க்கு நன்மை தருமாயின் அவை மெய்ச்சொற்கள் போன்றனவாகும். (292)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### நல் வரம் தா

**கலிவிருத்தம்**



என்னை யென்னா லெனக்கறி வித்தவன்
தென்னை மாப்பனை சேரும்நல் லூருளான்
அன்னை தன்னினும் மேம்படு மன்புளான்
தன்னை நாடினன் தந்தன னோர்வரம். 01

மதியி லேரவி வைத்திடும் மாதவர்
துதிசெய் தூய மலரடி யென்னுளம்
பதிய வைத்திடும் பாக்கியம் யான்பெற
மதியை வேண்டினேன் தந்தரு ளிவ்வரம். 02

இருவி னைக ளெனைக்கண்டா லஞ்சவும்
வருவி னைகளிவ் வையத்திற் கெஞ்சவும்
குருப ரனுடன் கூடிச் சிறக்கவும்
மருவு பாவம் மறக்கவுந் தாவரம். 03

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

**06.03.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர் :- திரு வ. பரமேஸ்வரன் அவர்கள்

[ஓய்வுநிலை அதிபர்]

(பக்கவாத்திய சகிதம்)

---

**13.03.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "இயற்கையில் இறைவனைக் காணும் இந்துமதம்"

வழங்குபவர் :- திரு ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

---

**20.03.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "சமயத்தின் அளவுகோல்"

வழங்குபவர் :- செஞ்சொற்செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**27.03.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் பங்குனி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்

[இளை. அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு நி. பாபுதரன் அவர்கள்

[ஆசிரியர்]

## 267 ஆவது மலர்

பதிவு இல: QD/78/NEWS/2020

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

